உதயன்

விலை ரூபா 6.00

சுடர்:16 வள்ளுவர் ஆண்டு 2032 ஆனி 22 வெள்ளிக்கிழமை (06-07-2001) UTHAYAN - A Lively National Tamil Daily கதிர்:222

# அவசரகாலச் சட்டம் புதன்கிழமை காலாவதியானது வேறு புதிய கட்டளைகள் ஜனாதிபதியால் பிரகடனம்

## புலிகள் மீதான தடை பயங்கரவாதத் தடுப்புச் சட்டத்தின் கீழ் நீடிப்பு

கொழும்பு,ஜூலை6

நாடாளுமன்றத்தில் பெரும்பான்மையை இழந்துள்ளதால், அவசரகாலச் சட்டத்தை மேலும் நீடிப்பதற்கான பிரேரணையை நாடாளுமன்றத்தில் நிறைவேற்றமுடியாத இக்கட்டில் இருக்கும் அரசாங்கம், அவசரகாலச் சட்டம் கடந்த புதன்கிழமையுடன் (ஜூலை 4 ஆம் திகதியுடன்) காலாவதியானதாக அறிவித்தது.

எனினும் -

அவசரகாலச் சட்ட விதிகளின் கீழேயே விடுதலைப் புலிகள் அமைப்பின் மீதான தடையும் விதிக்கப்பட்டிருப்பதால் அவசரகாலச் சட்டவிதி காலவதியாவதோடு அந்தத் தடைப் பிரகடனமும் காலாவதியாகின்றது என்று சுட்டிக்காட்டப்பட்டதை அடுத்து -

1979 ஆம் ஆண்டு கொண்டுவரப்பட்ட 48ஆம் இலக்கப் பயங்கரவாதத் தடுப்புச் சட்டத்தின் கீழ் புலிகள் மீதான தடை நீடிக்கப்பட்டிருப்பதாக ஜனாதிபதி அறிவித்துள்ளார்.

இதேசமயம் அவசரகாலச் சட்ட விதிகளில் தெரிவிக்கப்பட்ட பிரமாணங்களைத் தொடர்ந்து நடைமுறைப்படுத்துவதற்காக இரண்டு புதிய கட்டளைகளை ஜனாதிபதி விடுத்திருக்கின்றார்.

ஒன்று - நாட்டின் சகல நிர்வாக மாவட்டங்களையும் பாதுகாப்புப் பிரதேசங்களாகப் பிரகடனம் செய்கின்றது.

மற்றைய கட்டளை உணவு விநியோகம், மின்சாரம், குடிதண்ணீர், தபால், போக்குவரத்து போன்ற பொதுச் சேவைகளை அத்தியாவசிய சேவைகளாகப் பிரகடனம் செய்கின்றது.

எனினும் -

அவசரகாலச் சட்டவிதிகளின் கீழ் நடைமுறைப்படுத்தப்பட்ட அனைத்து ஏற்பாடுகளையும் இந்தப் புதிய கட்டளைகள் இரண்டும் முற்றாக உள்ளடக்குமா என்பது குறித்து சட்டவல்லுநர்கள் சந்தேகம் தெரிவித்துள்ளனர்.

வன்னி மீதான பொருளாதாரத் தடை, வடக்கு - கிழக்குக்கு சில

(12 ஆம் பக்கம் பார்க்க)

# பிரதமர் பதவியை ரணிலுக்கு வழங்கி தேசிய அரசு அமைப்பதற்கு முயற்சி!

## ஆளும் தரப்பின் நிலைப்பாட்டை இன்று நாடாளுமன்றில் ரத்னசிறி அறிவிப்பார்

கொழும்பு,ஜூலை6

**நாடாளுமன்றத்தில் பெரும்பான்மையை இழந்ததால் ஆட்சியைக் கோட்டைவிடும் நெருக்கடியை எதிர்நோக்கும் ஆளும் பொதுமக்கள் ஐக்கிய முன்னணிய அரசு, தனது ஆட்சியை தக்கவைக்கும் கடைசிக்கட்ட நடவடிக்கையாக தேசிய அரசு அமைக்கும் முயற்சியில் இறங்கியிருக்கின்றது.**

**பிரதமர் பதவியை ரணிலுக்கும் அமைச்சர் பதவிகளில் கணிசமான எண்ணிக்கையை ஐக்கிய தேசிய கட்சிக்கும் விட்டுக்கொடுப்பதன் மூலம், தேசிய அரசு அமைக்கும் முயற்சிக்கு ஐ.தே.கட்சியை இணங்க வைக்கும் இறுதிக்கட்டப் பேரம் இடம்பெற்று வருவதாகத் தெரிகின்றது.**

**இந்த விடயம் பற்றிய முந்திய அறிவிப்பு ஒன்றை பிரதமர் ரத்னசிறி விக்கிரமநாயக்க இன்று நாடாளுமன்றத்தில் விடுப்பார் என்றும் எதிர்பார்க்கப்படுகின்றது.**

சுயாதீன தொலைக்காட்சிச் சேவைக்கு நேற்றுப் பேட்டியளித்த பிரதமர், தேசிய அரசு அமைக்கும் திட்டத்துக்காக பிரதமர் பதவியிலிருந்து இறங்கி அதனை ரணில் விக்கிரமசிங்கவுக்கு வழங்கத் தாம் தயாராக இருப்பதாகச் சூசகமாகத் தெரிவித்தார்.

மொத்தமுள்ள 27 அமைச்சுக்களில் பத்து அமைச்சுக்களை ஐ.தே. கட்சிக்கும், 7 அமைச்சுக்களை ஏனைய

(12 ஆம் பக்கம் பார்க்க)

## தமிழ்க் கட்சிகளின் ஏற்பாட்டில் இன்று ஹர்த்தால் அனுஷ்டிப்பு!

யாழ்ப்பாணம்,ஜூலை5

அரச படைகளின் மனித உரிமை மீறல்களை - குறிப்பாக தமிழ்ப் பெண்களுக்கு எதிராக இழைக்கப்பட்டுவரும் பாலியல் வன்முறைகளை - கண்டித்தும் பதினொரு தமிழ்க் கட்சிகளின் கூட்டமைப்பின் ஏற்பாட்டில் இன்று வடக்கு - கிழக்கில் ஹர்த்தால் அனுஷ்டிக்கப்படவிருக்கிறது.

கடைகளைப் பூட்டியும், பாடசாலைகளைப் பகிஷ்கரித்தும், அரச அலுவலகங்களுக்குச் செல்லாமலும் இந்தப் போராட்டத்தில் பங்குபற்றுமாறு கூட்டமைப்புக் கோரியுள்ளது.

கொழும்பில் இன்று காலை முதல் பிற்பகல்வரை பல்வேறு போராட்டங்கள் இடம்பெறவுள்ளன.

(12 ஆம் பக்கம் பார்க்க)

### அம்பாறை மாவட்டத்தில்

## பேரியல் அணியின் பேராளர் மாநாடு நடந்த சமயம் கிராமங்களில் கலவரம்!

அம்பாறை,ஜூலை6

பலத்த பாதுகாப்புடன் அம்பாறை நகரசபை மண்டபத்தில் தேசிய ஐக்கிய முன்னணியின் பேராளர் மாநாடு அமைச்சர் பேரியல் அஷ்ரப் தலைமையில் நேற்றுக்காலை நடைபெற்றுக் கொண்டிருந்த வேளையில் -

அந்த மாவட்டத்தில் உள்ள முஸ்லிம் கிராமங்களில் கலவரங்கள் வெடித்தன.

பேராளர் மாநாடு நேற்றுக் காலை 11.30 மணிமுதல் நடைபெற்றது.

இந்த மாநாட்டில் பங்குபற்றுவதற்கு பஸ்களில் அழைத்துச் செல்லப்பட்டவர்கள் மீது கல்முனை, சம்மாந்துறை ஆகிய பகுதிகளில் வைத்துத் தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது.

பஸ்கள் மீது நடத்தப்பட்ட தாக்குதலில் 30க்கும் மேற்பட்டவர்கள் காயம் அடைந்தனர்;20க்கும் மேற்பட்ட வாக

(12 ஆம் பக்கம் பார்க்க)

### திவ்வியன் கைது விவகாரம்:

## யாழ்.பல்கலை மாணவர்களின் போராட்டம் தொடர்கிறது

யாழ்ப்பாணம்,ஜூலை6

படையினரால் கைது செய்யப்பட்டுள்ள யாழ்.பல்கலைக்கழக விஞ்ஞான பீட மாணவனும் பல்கலைக்கழக மாணவர் ஒன்றியத்தின் முன்னாள் செயலாளருமான கிருஷ்ணசாமி திவ்வியனை விடுதலை செயய வேண்டும் என்ற கோரிக்கையை முன வைத்து பல்கலைக்கழக மாணவர்கள் நேற்றும் இரண்டாவது நாளாகப் பகிஷ்கரிப்புப் போராட்டத்தில் ஈடுபட்டிருந்தனர்.

நேற்று விடுமுறை தினமாக இருந்தபடியால் பல்கலைக்கழக ஊழியர்கள் வளாகத்துக்கு வருகை தரவில்லை. இருப்பினும் வளாகத்துக்கு வருகை தந்த மாணவர்கள் நேற்று

(12 ஆம் பக்கம் பார்க்க)

## அசம்பாவிதங்கள் ஏதுமின்றி கழிந்த கரும்புலிகள் தினம்

யாழ்ப்பாணம்,ஜூலை6

விடுதலைப் புலிகள் அமைப்பின் கரும்புலிகள் தினம், நேற்று எந்தவித அசம்பாவிதங்களும் இன்றி அமைதியாகக் கழிந்தது.

கரும்புலிகள் தினத்தையொட்டி இராணுவக் கட்டுப்பாட்டில் உள்ள பகுதிகளில் பாதுகாப்பு ஏற்பாடுகள் பலப்படுத்தப்பட்டிருந்தன. ஆனால் எதிர்பார்த்த அசம்பாவிதங்கள் எதுவும் இடம்பெறவில்லை.

கரும்புலிகள் தினத்தையொட்டி மன்னார் பகுதியில் மூடப்பட்டிருந்த வர்த்தக நிலையங்கள், படையினரின் அறிவுறுத்தலின் பின்பு திறக்கப்பட்டன.

இதேசமயம் -

விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டில் உள்ள பிரதேசங்களில், கரும்புலிகள் தினம் நேற்று எழுச்சியுடன் உணர்வுபூர்வமாக அனுஷ்டிக்கப்பட்டதாகவும் -

ஈகைச் சுடரேற்றல், பேரணிகள், சிரமதானங்கள் உட்பட கரும்புலிகள் நினைவாகப் பல நிகழ்வுகள் இடம்பெற்றதாகவும் தெரிவிக்கப்பட்டது.

இதுவரை 57 பெண்கள் உட்பட 217 கரும்புலிகள் வீரமரணம் அடைந்ததாகவும் -

இவர்களில் 139 கடற்கரும்புலிகள், 78 தரைக்கரும்புலிகள் அடங்குவதாகவும் -

(12 ஆம் பக்கம் பார்க்க)

## மன்னாரில் நேற்று மோதல்

வவுனியா,ஜூலை6

மன்னார் மாவட்டத்தில் உயிலங்குளத்துக்கு வடக்கே ஒன்பது கிலோ மீற்றர் தூரத்தில் படையினருக்கும் விடுதலைப் புலிகளுக்கும் இடையில் நேற்றுக்காலை 6.40 மணியளவில் மோதல் ஒன்று இடம்பெற்றுள்ளதாக வவுனியாவில் படைத்தரப்புத் தெரிவித்தது.

இந்த மோதலில் படையினர் தரப்பில் ஏழு பேரும் விடுதலைப் புலிகள் தரப்பில் 12 பேரும் காயமடைந்தனர் என்றும் படைத்தரப்பு மேலும் குறிப்பிட்டது.

இந்தத் தாக்குதல் தொடர்பாக விடுதலைப் புலிகளின் தரப்புத் தகவல் எதுவும் நேற்றிரவு வரை வெளியாகவில்லை.

அதேவேளை - உயிலங்குளம் பகுதியில் நேற்றுக்காலை படையினர் மேற்கொண்ட படை நடவடிக்கையில் விடுதலைப் புலிகளின் மூன்று பங்கர்கள் அழிக்கப்பட்டதாக விசேட ஊடகத்தகவல் நிலையம் தெரிவித்தது.

## பாலியல் பலாத்காரங்களுக்காகக் குரல் கொடுப்பதுடன்

# சகோதரப் படுகொலைகளுக்கு எதிராகவும் குரல் கொடுக்கக் கோருகிறார் டக்ளஸ்

யாழ்ப்பாணம்,ஜூலை6

பாலியல் பலாத்காரங்கள் நிறுத்தப்பட வேண்டும் என்று குரல் கொடுக்கும் தமிழ் பேசும் மக்கள் சகோதரப் படுகொலைகளை நிறுத்த வேண்டும் என்றும் குரல் கொடுக்கவேண்டும்.

- வடக்கின் அபிவிருத்தி, புனர்வாழ்வு, புனரமைப்பு மற்றும் வடக்கு - கிழக்கு தமிழ் விவகார அமைச்சரும், ஈ.பி.டி.பியின் செயலாளர் நாயகமுமாகிய டக்ளஸ் தேவானந்தா மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

'அராஜகங்கள் தடுக்கப்பட வேண்டும்' என்னும் தலைப்பில் அவர் வெளியிட்டுள்ள அறிக்கையிலேயே இப்படித் தெரிவித்துள்ளார்.

அந்த அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

அண்மையில் இளம் பெண் ஒருவர் பாலியல் பலாத்காரத்துக்கு இலக்கான சம்பவத்தை ஈ.பி.டி.பி. வன்மையாகக் கண்டிக்கின்றது. அதிலும் சட்டம், ஒழுங்கு மற்றும் பாதுகாபபை உறுதிப்படுத்தும் பொறுப்பை ஏற்றிருப்பவர் ஒரு சிலர் இக்கொடூரச் செயலுக்குக் காரணமாய் இருப்பது வன்மையான கண்டனத்திற்கு உரியது. பெண்கள் மீது இத்தகைய கொடூரங்கள் இழைப்பதை எவரும் கைகட்டி பார்த்துக் கொண்டிருக்க முடியாது. தமிழ்ப் பெண்கள் பாலியல் பலாத்காரத்துக்கு இலக்கான முதல் நிகழ்ச்சி இதுவல்ல. தொடர்ச்சியாக ஆங்காங்கே இத்தகைய சம்பவங்கள் இடம்பெறுகின்றமையானது இத்தகைய கொடூரங்கள் முற்றுப் புள்ளி வைக்கப்பட வேண்டியதன் - அவசியத்தையே புலப்படுத்துகின்றது.

ஆனால் இத்தகைய கொடூரங்கள நிகழும் போது உரத்துக்குரல் கொடுப்பதும் அடுத்த ஓர் அசம்பாவிதம் நேரும்வரை அமைதியாகி விடுவதுமே வாடிக்கையாக இருக்கிறது. பாலியல் கொடூரங்களால் பாதிக்கப்படுபவர்களின் கண்ணீரைத் துடைப்பதை விடவும் இத்தகையவர்களின் வேதனைகளுக்கு ஆறுதல் தேடுவதை விடவும் அசம்பாவிதங்களைக் காட்டி அரசியல் லாபம் தேடும் செயற்பாடுகளே அதிகம். இத்தகைய பாலியல் கொடூரங்கள் இனியும் நிகழாமல் தடுக்க என்ன செய்ய வேண்டும் என்பதைச் சிந்தித்து அதற்கேற்ற வகையில் ஆக்கபூர்வமாக செயற்பட வேண்டியதே முதன்மையானதாகும்.

இதேவேளை, பாலியல் பலாத்காரங்களுக்கு எதிராக பலமாக குரல் கொடுப்பவர்கள் திட்டமிட்ட வகையில் மேற்கொள்ளப்படும் படுகொலைகளை கண்டுகொள்ளாமல் இருப்பது ஏன்? தன் சொந்த வீட்டில் மனைவியுடன் உறங்கிக் கொண்டிருந்த கணவன் சுட்டுக் கொல்லப்பட்டிருக்கின்றான். மனைவிக்கும் குழந்தைகளுக்கும் முன்பாகவே கணவன் சுட்டுக் கொல்லப்பட்ட சம்பவம் திருநெல்வேலியில் இடம்பெற்றிருக்கிறது. ஆனைக் கோட்டைப் பகுதியில் வீடு நோக்கி வந்த இளைஞன் துடிதுடிக்க சுட்டுக்கொல்லப்பட்டிருக்கிறான். மட்டக்களப்பு மாவட்டத்தில் பிஸ்ரல் குழுவின் தாக்குதலால் கடந்த ஒரு மாதத்தில் மட்டும் சுமார் 9 பேர் கொல்லப்பட்டு இருக்கிறார்கள். சமூகத்தையே பயமுறுத்தும் நோக்குடன் பகிரங்கமான மரண தண்டனையைப் புலிகள் நிறைவேற்றி வருகின்றனர். வவுனியா, யாழ்ப்பாணம், மன்னார் என ஆங்காங்கே நடைபெறும் பிஸ்ரல் குழுவின் துப்பாக்கி வேட்டுகளால் வாழவேண்டிய வயதில் இளைஞர்கள் உயிர்துறக்கின்றனர்.

கடந்த ஜனவரி முதல் இது வரையிலான 6 மாத காலப்பகுதிக்குள் சுமார் 30 க்கு அதிகமானவர் அநியாயமாகக் கொலையுண்டு இருக்கின்றனர். திட்டமிட்ட இத்தகைய படுகொலைகளைத் தட்டிக்கேட்கும் துணிவும், தெம்பும், தைரியமும் இல்லாத பிரமுகர்கள் படையினர் பாலியல் பலாத்காரங்களில் ஈடுபடும் கண்டனத்துக்குரிய மோசமான சம்பவங்களில் மட்டும் அரசியல் லாபம் தேடமுனைவது அநாகரிகமானது.

அமைதியையும், சமாதானத்தையும் நிலைநாட்ட விரும்பும் அனைவரும் சகலவிதமான அச்சுறுத்தல்களையும் ஒரேவிதமாக கண்டிக்க முன்வரவேண்டும். பிஸ்ரல் குழுவின் அடாவடித்தனங்களை கண்டுகொள்ளாமல் மௌனம் காப்பதும், பாதுகாப்புப் படையினர் மீது சேற்றை வாரியிறைக்கும் சந்தர்ப்பங்களுக்கு மட்டும் முக்கியத்துவம் கொடுப்பதும், இத்தகைய செயற்பாடுகளை மேற்கொள்வதும் உள்நோக்கத்தை கேள்விக்குள்ளாக்குவதாகும். எனவே இரகசிய உள்நோக்கங்களுடன் வீரவசனம் பேசி உணர்ச்சியூட்டும் முயற்சிகளுக்குத் துணைபோகாமல், அமைதி, சமாதானம் என்பவற்றை நிலைநாட்டுவதில் பொதுமக்கள் விழிப்புடன் செயற்பட வேண்டும்.

*தமிழ்க் கட்சிகளுக்கு ஆலோசனை*

சுமார் நாலரை லட்சத்திற்கும் அதிகமான பொதுமக்களின் சுதந்திரமான போக்குவரத்திற்குக் குந்தகம் ஏற்படும் வகையில் குடாநாட்டுக்கான தரைவழிப்பாதையே தடுத்து நிற்பது வீரமா? விவேகமா? என்பதை சிந்தித்துப் பார்க்க வேண்டும். சக தமிழ் கட்சிகளினதும் சுதந்திரமான ஜனநாயக அரசியல் செயற்பாடுகளுக்குத் தடைவிதித்து, ஆயுதங்கள் மூலம் புலிகள் அச்சுறுத்தல் விடுத்து வருகின்றனர். இவை கண்டிக்கப்பட வேண்டியவையாகும். ஒளிவுமறைவாக ஆயுதங்களை காவித்திரியும் ஆற்றலும், துப்பாக்கி விசைகளை அழுத்தும் திறமையும் மட்டும் இனத்தை விடுவிக்க உதவா என்பதை உணர்த்தப் பாடுபட வேண்டும். இவ்வகையில் தமிழ் அரசியல் கட்சிகள் தமது செயற்பாடுகளை முன்னெடுப்பதே காலத்தின் தேவையாகும். எனவே மக்களின் நலன்களை நிலைநிறுத்துவதற்கு ஏதுவான வகையில் பாடுபட முன்வரும்படி தமிழ்க் கட்சிகளை வேண்டுகின்றோம். போர்ச் சூழலால் ஏற்கனவே பல வகையிலும் நொந்து போயிருக்கும் மக்களுக்கு சங்கடம் ஏற்படுத்தும் செயற்பாடுகளைவிடவும் அமைதியையும் சமாதானத்தையும் நிலைநாட்ட ஒத்துழைக்கும்படி கேட்டுக் கொள்கின்றோம். பாலியல் பலாத்காரங்களைக் கண்டிக்கும் அதே சமயம் திட்டமிட்ட படுகொலைகளும் வன்மையாகக் கண்டிக்கப்பட வேண்டும்.

பொதுமக்களின் அன்றாட வாழ்விற்குக் குந்தகம் இல்லாத வகையில் அரசியல் செயற்பாடுகள் முன்னெடுக்கப்பட்ட வேண்டும். தரைவழிப் பாதையை மீண்டும் திறக்க வேண்டும் என்பதற்காக - தமிழ் அரசியல் கட்சிகள் மீது புலிகள் விதித்துள்ள தடைகள் நீக்கப்பட வேண்டும் என்பதற்காக - திட்டமிட்டு மேற்கொள்ளப்படும் சகோதரப் படுகொலைகள் நிறுத்தப்பட வேண்டும் என்பதற்காக - பாலியல்பலாத்காரங்கள் இனியும் இடம் பெறக்கூடாது என்பதற்காக - அனைத்துத் தமிழ் பேசும் மக்களும் குரல் கொடுக்க முன்வரவேண்டும் - என்றுள்ளது.

(உ-3)

## வடக்கு - கிழக்கில் பணிபுரியும்

# 1550 தொண்டர் ஆசிரியர்கள் விரைவில் நிரந்தரமாக்கப்படுவர்

## கல்வி அமைச்சர் பணிப்புரை

கொழும்பு,ஜூலை6

வடக்கு - கிழக்கில் உள்ள பாடசாலைகளில் தொண்டர் ஆசிரியர்களாகப் பணிபுரியும் ஆயிரத்து ஐந்நூற்று ஐம்பது பேருக்கு நிரந்தர நியமனம் வழங்கும்படி கல்விச் சேவைகள் ஆணைக்குழுவுக்கு கல்வியமைச்சர் சுசில் பிரேமஜயந்த பணிப்புரை விடுத்துள்ளார்.

வடக்கு - கிழக்கு மாகாணக் கல்வித்துறையில் காணப்படும் பிரச்சினைகளுக்குத் தீர்வு காண்பது குறித்து ஆராய்வதற்காக நேற்று முன்தினம் கல்வி அமைச்சில் ஏற்பாடு செய்யப்பட்ட விசேட மாநாட்டில் எடுக்கப்பட்ட தீர்மானங்களின் அடிப்படையிலேயே இந்தப் பணிப்புரை விடுக்கப்பட்டுள்ளது.

கல்வி அமைச்சர் சுசில் பிரேமஜயந்த தலைமையில் நடைபெற்ற இந்த விசேட மாநாட்டில் இனவிவகார, தேசிய ஒருங்கிணைப்பு, கனிமவள அபிவிருத்தி பிரதியமைச்சர் கே. கணேசமூர்த்தி, வடக்கு - கிழக்கு மாகாண ஆளுநர் அசோகா ஜயவர்த்தனா, கல்வியமைச்சின் மேலதிகச் செயலாளர் எஸ்.தில்லை நடராஜா, கல்விக் கல்லூரிகளின் பணிப்பாளர் நாயகம் நிஹால்ஹேரத், பாடசாலைகளுக்கான கட்டடப் பகுதிப் பணிப்பாளர் நாயகம் அபேரத்ன ஆகியோர் கலந்து கொண்டனர்.

கல்வி அமைச்சரின் பணிப்புரையையடுத்து தொண்டர் ஆசிரியர்களாகப் பணிபுரியும் ஆயிரம் தமிழ் ஆசிரியர்களும் இருநூற்றி ஐம்பது சிங்கள ஆசிரியர்களும் மற்றும் சிங்களம் - தமிழ் கற்பிக்கும் ஒப்பந்த அடிப்படையிலான 250 ஆசிரியாகளும் நிரந்தரமாக்கப்படவிருக்கின்றனர்.

அத்துடன் பகுதிநேர ஆங்கில ஆசிரியர்களாகப் பணியாற்றும் ஆயிரத்துக்கும் மேற்பட்டோரில் இருநூற்றைம்பது ஆசிரியர்கள் நிரந்தர நியமனம் பெறுவர்.

(உ-ஒ)

# மீனவ சங்கங்களுக்கு மூன்று கோடி ரூபா நிதி

யாழ்ப்பாணம்,ஜூலை6

யாழ்.மாவட்ட மீனவர்களுக்கு உதவிகள் வழங்குவதற்காக மீனவர் சங்கங்களுக்கு மூன்று கோடி ரூபாவை வடக்கு அபிவிருத்தி, புனர்வாழ்வு, புனரமைப்பு மற்றும் வடக்கு - கிழக்கு தமிழ் விவகார அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா ஒதுக்கியுள்ளார் என்று தெரிவிக்கப்படுகின்றது.

மீனவ சங்கங்களின் பிரதிநிதிகளுக்கும் அமைச்சருக்கும் இடையில் இடம்பெற்ற கலந்துரையாடலின் போதே இந்த உதவியை வழங்குவதாக அவர் உறுதியளித்தார் என்று ஈ.பி.டி.பி. செய்திக்குறிப்பு ஒன்று தெரிவித்தது.

யாழ்ப்பாணத்தில் ஐஸ் தொழிற்சாலை ஒன்றை அமைக்க நடவடிக்கை எடுப்பதாகவும் அமைச்சர் உறுதி அளித்துள்ளார்.

மீன்பிடிக்க அனுமதிக்கப்பட்டுள்ள கடற்பிரதேசத்தை விஸ்தரிப்பது குறித்துப் பாதுகாப்பு அதிகாரிகளுடன் பேச்சு நடத்தி உரிய பரிகாரம் பெற்றுத்தர நடவடிக்கை எடுப்பதாகவும் அமைச்சர் அங்கு தெரிவித்தார்.

இச்சந்திப்பில் ஈ.பி.டி.பி. யாழ். மாவட்டப் பிரதி அமைப்பாளரும் நல்லூர் பிரதேச சபைத் தலைவருமான நிசாந்தன், பருத்தித்துறை பிரதேச சபைத் தலைவர் ஐ.ஸ்ரீரங்கேஸ்வரன், ஈ.பி.டி.பியின் வடமராட்சி இணைப்பாளர் யோகராஜா, யாழ்.மாநகரசபை உறுப்பினரும் ஈ.பி.டி.பியின் யாழ்.பிரதேச அமைப்பாளருமான ரீகன், ஊர்காவற்றுறைப் பிரதேச சபைத் தலைவரும் ஈ.பி.டி.பியின் தீவக அமைப்பாளருமான ந.மதனராஜா (மனோ), சாவகச்சேரி பொறுப்பாளர் சாள்ஸ், மானிப்பாய் பிரதேச சபைத் தலைவர் ஜீவா ஆகியோரும் பங்கு கொண்டனர்.

- இவ்வாறு ஈ.பி.டி.பி. செய்திக் குறிப்புத் தெரிவித்தது. (உ)

# எண்மர் விசாரணைக்கு அழைப்பு

யாழ்ப்பாணம்,ஜூலை6

காணாமற்போனோர் தொடர்பான விசாரணைகளை நடத்திவரும் குற்றப் புலனாய்வுப் பிரிவினர் மேலும் 8 பேர் தொடர்பான விசாரணைகளை மேற்கொள்வதற்காக அவர்களது உறவினர்களை யாழ்.பொலீஸ் நிலையத்துக்கு அழைத்துள்ளனர்.

காணாமற்போன இந்த எண்மரின் பெயர் விவரங்கள், கோவை இலக்கங்கள் மற்றும் முகவரிகள் என்பன வருமாறு:-

✪ நாகமுத்து - செல்வரத்தினம் (கோவை. இல. பி-9/30) இல.43, பொன்னம்பலம் வீதி, யாழ்ப்பாணம்.

✪ நவரத்தினம் யோகநேசன் (கோவை இல. பி-9/95), ஜோதி வீதி, நல்லூர்),

✪ பூபாலசிங்கம் பிரபாகரன் (கோவை இல. பி-9/98), பலாலி வீதி, திருநெல்வேலி.

✪ சிவகுரு தங்கத்துரை (கோவை இல. பி-9/144), ஐயனார் கோயிலடி, நாவற்குழி.

✪ சண்முகம் வசந்தன் (கோவை இல. பி-9/159), ஆவரங்கால் கிழகது, நீர்வேலி.

✪ கணபதிப்பிள்ளை கேதீசன் (கோவை இல. பி-1/459), மே/பா நடேச பிள்ளை, இணுவில் கிழக்கு.

✪ பாலசிங்கம் உதயகுமார் (கோவை இல. பி-1/71), பிரதேச செயலக வீதி, உடுவில் சுன்னாகம்.

✪ மாணிக்கம் தனிகாஞ்சன் (கோவை இல. பி-1/347).(உ-4-6-9)

## புலிகளின் நிதி, ஆயுத சேகரிப்பாளர்

# குமரன் பத்மநாபாவைத் தேடி இந்திய அதிகாரிகள் வேட்டை!

புதுடில்லி,ஜூலை6

வெளிநாடுகளில் தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத்தின் பிரதான நிதி சேகரிப்பாளராகவும், ஆயுதக் கொள்வனவுப் பொறுப்பாளராகவும் கருதப்படும் குமரன் பத்மநாபாவைக் (கே.பியை) கைது செய்யும் தனது முயற்சிகளை இந்திய அரசின் மத்திய புலனாய்வு நிறுவனம் (சி.பி.ஐ.) தீவிரப்படுத்தியுள்ளதாகச் செய்தி ஏஜென்ஸிகள் தெரிவித்தன.

பி.எஸ்.குமரன், கே.பி என்பவை உட்பட பல பெயர்களைக் கொண்டுள்ள குமரன் பத்மநாபா நியூஸிலாந்து மற்றும் ஆஸ்திரேலியாவில் வாழும் இந்திய வம்சாவளியினர் சிலருடன் நெருங்கிய தொடர்புகளை வைத்திருப்பது புலன் விசாரணைகளில் தெரியவந்துள்ளதாகவும் -

அதனையடுத்து சி.பி.ஐ. அதிகாரிகள் குழு ஒன்று இந்த இரு நாடுகளுக்கும் சென்றுள்ளதாகவும் -

சி.பி.ஐ. வட்டாரங்கள் தெரிவித்தன.

1991 இல் இந்திய முன்னாள் பிரதமர் ராஜீவ் காந்தி கொலை செய்யப்படுவதற்குப் பயன்படுத்தப்பட்ட வெடி பொருள்கள் மற்றும் வெடிகுண்டுச் சாதனங்கள் ஆகியவற்றை குமரன் பத்மநாபாவே ஏற்பாடு செய்ததாகத் தெரியவந்ததால், அவரைக் கைது செய்யும் நடவடிக்கையைத் தீவிரப்படுத்தியதாக சி.பி.ஐ. கூறுகின்றது.

ராஜீவ் கொலையின் பின்னணியில் உள்ள சதிகள் குறித்து விசாரிக்கும் ஜெயின் தனிநபர் விசாரணை மன்றத்தின் உத்தரவுப்படி சி.பி.ஐ. குழுவொன்று மேலதிக விசாரணைகளை மேற்கொண்டுள்ளது. இந்தக் குழுவே தற்போது குமரன் பத்மநாபாவைக் கைது செய்யும் முயற்சியிலும் இறங்கியுள்ளதாகக் கூறப்படுகிறது.

சென்னை பொலீஸ் அதிகாரி தியாகராஜன் என்பவர் இது குறித்து கூறுகையில் -

குமரன் பத்மநாபா கூவிடனை வதிவிடமாகக் கொண்டிருந்தது தெரிய வந்ததாகவும் -

உடனடியாக அவரைக் கைது செய்ய உதவும்படி கூவிடஷ் அரசுக்கு சி.பி.ஐ கடிதம் அனுப்பியதாகவும் -

• ஆனால் அதற்குள் குமரன் பத்மநாபா அங்கிருந்து மாயமாகிவிட்டதாகவும் - என்று தெரிவித்துள்ளார்.

சொந்தமாகக் கப்பல் நிறுவனம் நடத்திவரும் குமரன் பத்மநாபா, விடுதலைப் புலிகளுக்கு ஆதரவளிக்கும் பணக்கார இலங்கைத் தமிழர்களில் ஒருவர் என்று கூறிய அந்த அதிகாரி, அவர் தற்போது நியூஸிலாந்திலும், ஆஸ்திரேலியாவிலும் தனது வர்த்தக ஸ்தாபனத்தை விஸ்தரித்துள்ளதாகத் தகவல்கள் கிடைத்துள்ளதாகவும் குறிப்பிட்டார்.

குமரன் பத்மநாபாவைத் தேடி நியூஸிலாந்து மற்றும் ஆஸ்திரேலியாவுக்கு தமது குழுவொன்று சென்றுள்ளதை உறுதிப்படுத்திய சி.பி.ஐ. வட்டாரங்கள், குமரன் பத்மநாபாவுக்கு வெளிநாடுகளில் சி.பி.ஐ. வலை விரிப்பது இது முதற்றடவை அல்ல என்றும், கடந்த சில வருடங்களாகப் பல்வேறு சி.பி.ஐ. குழுக்கள் குமரன் பத்மநாபாவைத் தேடி பல நாடுகளுக்கும் சென்ற போதும் வேகமாக அதிக தூர - அகலங்களைக் கடந்து தப்பிக்கும் திறமையால் அவர் பிடிபடாமல் இருப்பதாகவும் தெரிவித்தன.

இதற்கிடையில் -

ராஜீவ் கொலை குறித்து பிரபல இந்திய அரசியல்வாதிகள் சிலரையும் அவர்களுக்கு நெருக்கமான வேறு சிலரையும் சந்தேகக் கண் கொண்டு நோக்கி அந்த நபர்களை விசாரிக்க ஜெயின் விசாரணை மன்றம் அறிவுறுத்தியிருந்தபோதும் அவர்களை விசாரிப்பதில் சி.பி.ஐ. மெத்தனம் காட்டுவதாகவும் -

ஆனால் விடுதலைப் புலிகளின் நிதிப் பலத்தின் முதுகெலும்பு என்று கூறப்படும் குமரன் பத்மநாபாவைக் கைது செய்ய சி.பி.ஐ. தீவிரம் காட்டுவது சந்தேகம் எழுப்புவதாகவும் -

தமிழகத்தைச் சேர்ந்த இன உணர்வு அமைப்புக்கள் தெரிவித்துள்ளன.

- இவ்வாறு செய்தி ஏஜென்ஸி ஒன்று தகவல்வெளியிட்டுள்ளது.

(உ-ஒ)

## கிராம அபிவிருத்தி சங்கத்துக்கு ரூ. 50 ஆயிரம் நிதி

வலி.மேற்கு,யூலை6

வட்டு.வடக்கு கற்பகச்சோலை மாதர் கிராம அபிவிருத்திச் சங்கத்துக்கு வடக்கு - கிழக்கு மாகாண கிராம அபிவிருத்தித் திணைக்களத்தினால் 50 ஆயிரம் ரூபா வழங்கப்பட்டுள்ளது.

மாதர்களின் சுய தொழில் முயற்சியை ஊக்குவிப்பதற்காக பழச்சாறு தயாரிக்கும் தொழிலுக்கே 50 ஆயிரம் ரூபா வழங்கபட்டுள்ளது.(க-175)

## கருத்தரங்கு

கந்தரோடை தமிழ்க் கந்தையா வித்தியாசாலையில் விவசாயம் சம்பந்தமான கருத்தரங்கு நாளை சனிக்கிழமை பகல் 11.30 மணியளவில் அதிபர் க.செல்வக்குமரன் தலைமையில் நடைபெறவுள்ளது.

இக்கருத்தரங்கில் 'மூலிகைகளும் இரசாயனப் பகுப்பு ஆய்வுகளும்' என்ற விடயம் பற்றி டாக்டர் வெற்றிவேல் சக்திவேல் சிறப்புரையாற்றுவார். (க-152)


## மரண அறிவித்தல்

### செல்வி கந்தகுட்டி மகேஸ்வரி (சின்னத்துரை)

செல்வி கந்தகுட்டி மகேஸ்வரி (சின்னத்துரை) நேற்று (05.07.2001) வியாழக்கிழமை பெரிய விலாஸ் துணுக்காயில் இயற்கை மரணமெய்தி விட்டார்.

அன்னார் நகுலேஸ்வரா வீதி, கீரிமலையைச் சேர்ந்த கந்தகுட்டி தம்பதிகளின் அன்பு மகளும் சுந்தரமூர்த்தி, பாலசந்திரன் மற்றும் காலஞ்சென்ற தியாகராசாவின் அருமைச் சகோதரியுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் தற்காலிக வசிப்பிடமான துணுக்காயில் இன்று (06.07.2001) வெள்ளிக்கிழமை அவரது இல்லத்தில் நடைபெறும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் யாவரும் ஏற்றுக்கொள்ளும்படி கேட்டுக்கொள்கின்றோம்.

*பாலகிருஸ்ணன் இல்லம்,*
*தேவாலய வீதி,*
*சங்கானை.*

தகவல்:
மருமக்கள்.

(C/17318)

# மேம்பாலம் கட்டுவதில் ஊழல் என்பது பொய்க் குற்றச்சாட்டு என்கிறார் ராமதாஸ்

## கருணாநிதியைக் கைது செய்ததும் தவறாம்

சென்னை,ஜூலை6

சென்னையில் மேம்பாலம் கட்டுவதில் ஊழல்கள் இடம்பெற்றதாகக் கூறப்படுவது வேண்டுமென்றே திட்டமிடப்பட்ட வழக்கு என்று பாட்டாளி மக்கள் கட்சித் தலைவர் டாக்டர் ராமதாஸ் தெரிவித்துள்ளார்.

சிலர் மீது பழிதீர்த்துக் கொள்வதற்கான வழக்குகளே இவை என்றும அவர் கூறினார்.

தமிழக முன்னாள் முதல்வரும திமுகவின் தலைவருமான மு.கருணாநிதி, அவரது மகனும் சென்னை நகர மேயருமான ஸ்டாலின் மற்றும் சில அதிகாரிகள் ஆகியோர் கைது செய்யப்பட்டு தடுத்து வைக்கப்பட்டது தொடர்பாகக் கருத்துத் தெரிவிக்கும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

இது தொடர்பாக அவர் மேலும் தெரிவித்ததாவது:-

மேம்பாலம் கட்டுவதற்கான திடடங்களிலோ அதன் செயற்பாட்டிலோ சம்பந்தப்படாத கருணாநிதியை கைது செய்வதற்கு தமிழக அரசுக்கு என்ன தேவை ஏற்பட்டது?

கருணாநிதியைக் கைது செய்யச சென்ற பொலிஸாரின் அத்துமீறல்கள் வன்மையாகக் கண்டிக்கப்பட வேண்டியவை. அவ்வாறு நடந்து கொண்ட பொலீஸ் அதிகாரிகள் மீது கடும் நடவடிக்கை எடுக்க வேண்டும்.

- இவ்வாறு அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

இதேவேளை -

தமிழகத்தில் அ.தி.மு.கவுடன் தேர்தல் கூட்டணி அமைத்துப் போட்டியிட்டு, தொடர்ந்தும் அந்தக் கூட்டணியில் அங்கம் வகிக்கும் பாட்டாளி மக்கள் கட்சி தனது கூட்டணிக் கட்சியான அ.தி.மு.க. அரசின் செயற்பாட்டை விமர்சித்திருப்பது குறித்து அரசியல் அவதானிகள் வியப்புத் தெரிவித்துள்ளனர். (ம)

## சூரியனுக்கு மிகத் தொலைவில் புதிய கோள் கண்டுபிடிப்பு

நியூயோர்க்,ஜூலை6

விண்ணில் சூரியனைச் சுற்றி வரும் பொருள்கள் பற்றி ஆய்வு நடத்திவரும் அமெரிக்க வானியலாளர்கள் புதிய கோள் ஒன்றைக் கண்டு பிடித்துள்ளனர்.

சூரியனிலிருந்து அதிகூடிய தூரத்தில் 'புளூட்டோ' கோளுக்கு அண்மையில் இந்தக் கோள் காணப்படுவதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

பனியினால் மூடப்பட்டு செந்நிறமாக இந்தக் கோள் காணப்படுவதாகவும் -

இதன் சுற்றளவு ஆயிரத்துக்கும் அதிகமான கிலோமீட்டர் அளவுடையதாக இருக்கும் என்றும் - விஞ்ஞானிகள் தெரிவித்துள்ளனர்.

"கண்டுபிடிக்கப்பட்ட புதிய கோள் பூமியின் அளவுடையதாக உள்ளது. 'நெப்டியூன்' கோளுக்கு அப்பால் சூரியனை ஒரு ஒழுங்கில் சுற்றி வருகின்றது. அதனது பிரகாசத்தை அடிப்படையாக வைத்துக் கணக்கிடும் போது அந்தக் கோளின் விட்டம் ஆயிரத்து 270 கிலோமீற்றர் என்று கணிக்க முடிகிறது. அதாவது புதிய கோளானது 'புளூட்டோவைச்' சுற்றிவரும் 'சறோன்' என்ற துணைக் கோளை விடப் பெரியதாகும்"

- என்று இந்தக் கோளைக் கண்டுபிடித்தவர்களில் ஒருவரான டாக்டர் லோறன்ஸ் வஸ்ஸமன் தெரிவித்தார். (ம)

# சூறாவளியால் சீனாவில் 30 லட்சம் பேர் பாதிப்பு

## கோடிக்கணக்கான சொத்துக்களுக்கு இழப்பு

பெய்ஜிங்,ஜூலை6

சீனாவின் தென்பகுதியிலுள்ள குவாட்டஸ் மாகாணத்தில் நேற்று முன்தினம் பெய்த கடும் மழை மற்றும் சூறாவளிக் காற்றினால் 30 லட்சம் பேர் பாதிக்கப்பட்டுள்ளனர்.

இந்த அனர்த்தத்தினால் உயிர்ச் சேதங்கள் எதுவும் ஏற்படாவிட்டாலும் கோடிக்கணக்கான டொலர் பெறுமதியான சொத்து இழப்புக்கள் ஏற்பட்டுள்ளதாக சீனச்செய்திகள் தெரிவிக்கின்றன.

வீடுகள், கடைகள் மற்றும் பொதுக் கட்டடங்கள் என்பன இடிந்துள்ளதாகவும் பல சொத்துக்கள் அழிந்து நாசமாகியுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

அத்துடன் மின்சாரம், தொலைத்தொடர்பு மற்றும் போக்குவரத்துப் பணிகள் ஸ்தம்பிதமடைந்துள்ளதாகவும் கூறப்படுகிறது. உதவிப் பணிகள் முழு வீச்சில் முடுக்கிவிடப்பட்டுள்ளன. (ம)

### கருணாநிதி கைதான சம்பவம் தொடர்பாக

# மத்திய உள்துறை அமைச்சு தமிழக அரசுக்கு எச்சரிக்கை!

## நான்கு பக்கத்தில் கடிதம்

புதுடில்லி,ஜூலை6

தமிழக முன்னாள் முதல்வரும் தி.மு.க தலைவருமான மு.கருணாநிதி கைதுசெய்யப்பட்டபோது நிகழ்ந்த அத்து மீறல்கள் போன்று மீண்டும் நிகழாதவாறு பார்த்துக் கொள்ளவேண்டும் என இந்திய மத்திய அரசு தமிழ்நாடு மாநில அரசுக்கு எச்சரிக்கை விடுத்துள்ளது.

கருணாநிதி மற்றும் இரண்டு மத்திய அமைச்சர்கள் ஆகியோரின் கைதுகளின்போது அத்துமீறி நடந்து கொண்ட பொலீஸ் அதிகாரிகள் மீது நடவடிக்கை எடுக்கவேண்டும் எனவும் மத்திய அரசு மாநில அரசிடம் கூறியுள்ளது.

### உலக அரங்கில்

நேற்று முன்தினம் புதுடில்லியில் கூடிய மத்திய அமைச்சரவைக் குழு எடுத்த முடிவின்படி தமிழ்நாடு மாநில அரசுக்கு நான்கு பக்கங்களைக் கொண்ட எச்சரிக்கைக் கடிதத்தை உள்துறை அமைச்சகம் நேற்று அனுப்பியது.

இனிவரும் காலங்களில் மாநில அரசு எவ்வாறு செயற்படும் என மத்திய அரசு உன்னிப்பாகக் கவனித்து வரும் எனவும் அந்த எச்சரிக்கைக் கடிதத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது.

தமிழக அரசின் இந்த நடவடிககைகள் யாவும் திட்டமிட்ட பழி வாங்கல்களாக அமைந்துள்ளன எனவும் -

தமிழக அரசின் நடவடிக்கைகள் அரசியல் சாசனத்தின் 21 ஆவது விதியை மீறுவதாக அமைந்துள்ளன எனவும் - கடிதத்தில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ம-4)

### மருத்துவ சாதனைகளில் புதிய திருப்பம்:

# செயற்கை இதயம் பொருத்தும் நவீன சத்திரசிகிச்சை வெற்றி

வாஷிங்ரன்,ஜூலை6

உலகில் முதன் முதலாக ஒருவருக்கு சுயமாக இயங்கக்கூடிய செயற்கை இதயம் வெற்றிகரமாகப் பொருத்தப்பட்டுள்ளது.

இது மருத்துவ உலகில் புதிய புரட்சி ஒன்றை ஏற்படுத்தியிருப்பதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

அமெரிக்காவின் லூயிஸ் டிவி பல்கலைக்கழகப் பேராசிரியர்களான லமன்கிறே, றொபேர்ட் டவுலிங் ஆகியோரின் தலைமையில் கடந்த திங்களன்று இந்த இதயமாற்றுச் சத்திரசிகிச்சை மேற்கொள்ளப்பட்டது. சத்திரசிகிச்சை பூரண வெற்றி அளித்துள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. சத்திரசிகிச்சை 7 மணி நேரம் நீடித்தது. செயற்கை இதயம் பொருத்தப்பட்டவர் எந்தவித உடல் நலக்குறைவுகளும் இன்றி ஓய்வு எடுத்துவருவதாகவும் மருத்துவர்கள் தெரிவித்தனர்.

1967ஆம் ஆண்டில் கிறிஸ்ரியன் பெனாட்டினால் முதன்முதலில் இதயமாற்றுச் சத்திரசிகிச்சை அறிமுகப்படுத்தப்பட்டது. அதன் பின்னர் மூன்று தசாப்த காலத்தின் பின்னரே செயற்கை இருதயத்தை மாற்றுவதற்கு வழி ஏற்பட்டுள்ளது என்று கூறப்படுகின்றது.



பிளாஸ்ரிக் மற்றும் டைட்டேனியம் கொண்டு உருவாக்கப்பட்ட செயற்கை இதயம்.

'அபியோகொர்' என்று பெயரிடப்பட்ட இந்த செயற்கை இதயத்தின் நிறை ஒரு கிலோகிராம் ஆகும். சத்திரசிகிச்சை மூலம் நெஞ்சறைக் கூட்டினுள் இந்த இதயத்தை பொருத்திவிட்டால் போதும் வெளியில் இருந்து அதனை இயக்கவேண்டிய தேவை இல்லை.

இதயத்துடன் பொருத்தப்பட்ட பற்றரியுடன் கூடிய மோட்டார் மூலம் 'பம்ப்' செயற்பாடு இடம்பெற்று குருதிச் சுற்றோட்டம் ஒழுங்குபடுத்தப்படுகின்றது.

கடந்த பெப்ரவரி மாதம் இந்த செயற்கை இதயத்தின் வடிவமைப்பு பூர்த்திசெய்யப்பட்டது. பின்னர் மரணத் தறுவாயில் இருந்த பதினைந்து இதய நோயாளிகளில் இது பரீட்சித்துப் பார்க்கப்பட்டது. அதன்பின்பே கடந்த திங்கட்கிழமை நோயாளி ஒருவருக்கு இந்த இதயம் பொருத்தப்பட்டது. நோயாளியின் பெயர் விவரம் வெளியிடப்படவில்லை.

இதற்கு முன்னரும் இறக்கும் தறுவாயில் இருந்த சில நோயாளிகளுக்கு செயற்கை இதயம் பொருத்தப்பட்டது. எனினும் அதன் மூலம் அவர்களது வாழ்நாள்களை சில நாள்களே நீடிக்க முடிந்துள்ளது. அத்துடன் அவை யாவும் வெளியில் இருந்தே சில உபகரணங்கள் மூலம் இயங்க வைக்கப்பட்டன. இதனால் நோயாளி எந்த நேரமும் படுக்கையிலேயே இருக்கவேண்டும். ஆனால் தற்போது கண்டுபிடிக்கப்பட்டுள்ள இதயத்தினால் இவ்வாறான அசௌகரியங்கள் எதுவும் இல்லை. (ம)

# அத்துமீறி நடந்த பொலீஸார் மீது கடும் நடவடிக்கை எடுக்குக!

## தமிழக அரசுக்கு கருணாநிதி கோரிக்கை

சென்னை,ஜூலை6

தாம் கைது செய்யப்பட்ட சம்பவத்தின் போது அத்துமீறி நடந்து கொண்ட பொலீஸ் அதிகாரிகள் மீது நடவடிக்கை எடுக்கவேண்டும் இல்லையேல் அதன் விளைவுகளைத் தமிழக அரசு சந்திக்கநேரிடும்.

- இவ்வாறு முன்னாள் முதல்வரும் தி.மு.க தலைவருமான மு. கருணாநிதி கூறியுள்ளார்.

நேற்று முன்தினம் சென்னை மத்திய சிறையிலிருந்து விடுதலை செய்யப்பட்ட கருணாநிதி நேராகக் கட்சியின் தலைமையகமான அறிவாலயத்துக்கு வந்து செய்தியாளர்களிடம் பேசிய போதே மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் அங்கு மேலும் தெரிவிக்கையில் கூறியதாவது:

சிறைக்குச் செல்வது எனக்கு புதியதல்ல. எத்தனையோ தடவைகள் நான் கைது செய்யப்பட்டு சிறைக்குச் சென்றிருக்கிறேன்.

ஆனால் கடந்த 29ஆம் திகதி நான் கைது செய்யப்பட்டபோது பொலீஸார் மனிதாபிமானமற்ற முறையில் கொடூரமாக நடந்துகொண்டனர்.

கைது சம்பவத்தின் போது இடம பெற்ற இழுபறியில் எனது வலது கை கடுமையாகப் பாதிக்கப்பட்டுள்ளது.

ஆயிரக்கணக்கான கடிதங்களை எழுதிய இந்தக் கையினால் இப்பொழுது ஒரு எழுத்துக் கூட எழுத முடியவில்லை. (இதனைக் கூறும் போது கருணாநிதியின் கண்கள் கலங்கி குரல் தளுதளுத்தது) - என்றார்.

இந்தச் சந்திப்பின்போது கலைஞருடன் உடனிருந்த மத்திய அமைச்சர் முரசொலிமாறன் தாம் தாக்கப்பட்ட மற்றும் பொலீஸாரால் நடத்தப்பட்ட முறை குறித்து மக்களவையில் உரிமைப் பிரேரணை கொண்டு வரப்போவதாகத் தெரிவித்தார். (ம-4)

### இத்தாலியக் கரைக்கு அப்பால்

# சட்டவிரோதக் குடியேறிகளுடன் நடுக்கடலிலிருந்து கப்பல் மீட்பு

குரோடோன்,ஜூலை6

சட்டவிரோதக் குடியேற்றவாசிகளை ஏற்றிக்கொண்டு நடுக்கடலில் தத்தளித்த கப்பலொன்றை இத்தாலியக் கடற்படையினர் புதனன்று மீட்டனர்.

'அம்மெயில்' என்ற இக்கப்பலில் 650 சட்டவிரோதக் குடியேற்றவாசிகள் இருந்தனர். எரிபொருள் தீர்ந்துவிட்டதால் கப்பற் பணியாளர்கள் கப்பலை நடுக்கடலில் விட்டுவிட்டுத் தப்பிச்சென்றதாகவும் -

நடுக்கடலில் தத்தளித்த கப்பலில் இருந்து கிடைத்த அவசர அழைப்பையடுத்து இத்தாலியக் கடற்படையினர் விரைந்துசென்று பயணிகளைப் பாதுகாப்பாக மீட்டதாகவும் - தெரிவிக்கப்பட்டது.

இத்தாலியக் கரையில் இருந்து 100 கிலோமீற்றர் தொலைவில் தத்தளித்துக்கொண்டிருந்த இந்தக் கப்பலை தாம் மீட்டுக் கரைசேர்த்துள்ளதாக அதிகாரிகள் தெரிவித்தனர். கப்பலில் இருந்த 10 நோயாளர்கள் உடனடியாகக் கப்பலில் இருந்து கரைக்குக் கொண்டுவரப்பட்டனர். பின்னர் அவர்கள் ஆஸ்பத்திரிகளுக்கு அனுப்பப்பட்டனர்.கைது செய்யப்பட்டுள்ளவர்கள் குறித்து மேலதிக விவரங்கள் எதுவும் கிடைக்கவில்லை.

## உளவு விமானம் அமெரிக்காவிடம் ஒப்படைப்பு

பெய்ஜிங்,ஜூலை6

சீனாவின் கைலான் தீவில் கடந்த ஏப்ரல் மாதம் தொடக்கம் தடுத்து வைக்கப்பட்டிருந்த அமெரிக்க உளவு விமானத்தை மீண்டும் கடந்த செவ்வாய்க்கிழமை அமெரிக்காவுக்கு சீன அரசு அனுப்பிவைத்தது. (ஒ)

# ஈராக்குக்கு எதிராக புதிய தடைகள் கொண்டுவரும் முயற்சி தோல்வி

## மேற்கு நாடுகளுக்கு எதிரான ரஷ்யாவின் நிலைப்பாட்டால்

நியூயோர்க்,ஜூலை6

ஈராக் மீது புதிய வகையிலான பொருளாதாரத் தடைகளைக் கொண்டு வரும் அமெரிக்காவினதும் பிரிட்டனினதும் திட்டத்தை கடும் அழுத்தங்களைக் கொடுத்ததன் மூலம் ரஷ்யா கைவிடச் செய்துள்ளது.

அதேவேளை பக்தாத்துக்கான எண்ணெய் - உணவுத் திட்டத்தை மேலும் ஐந்து மாதங்களுக்கு நீடிப்பதற்கு ஐக்கிய நாடுகள் பாதுகாப்புச்சபை ஏகமனதாகத் தீர்மானித்துள்ளது.

அமெரிக்காவினதும் பிரிட்டனினதும் கூட்டுத் திட்டத்தை ரஷ்யா இறுதிவரை கடுமையாக எதிர்த்து வந்ததாகவும் -

இறுதியில் பாதுகாப்புச் சபை புதிய வகையிலான தடைகள் தொடர்பாகப் பேச்சுக்களை மேற்கொள்வது என்ற திட்டத்தை மட்டும் ஏற்றுக்கொண்டதாகவும் - தெரிவிக்கப்படுகின்றது.

ரஷ்யா அமெரிக்காவினதும் பிரிட்டனினதும் தீர்மானத்திற்கு எதிராக வீட்டோ அதிகாரத்தைப் பயன்படுத்தப்போவதாக அச்சுறுத்தியதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

அமெரிக்காவாலும், பிரிட்டனினாலும் கடந்த மாதம் முன்வைக்கப்பட்ட திட்டத்தில் ஈராக்கிற்கு பொது மக்களின் பாவனைப் பொருள்கள் செல்வதை அனுமதிப்பது குறித்தும்-

ஆயுதங்கள் மற்றும் இராணுவத் தளபாடத் தயாரிப்பிற்கு உதவும் பொருள்களுக்குத் தடைவிதிப்பது குறித்தும் - தெரிவிக்கப்பட்டிருந்தது.

அமெரிக்காவின் இந்தத் திட்டத்தை ஈராக் கடுமையாக எதிர்த்திருந்ததுடன் ஜூன் மாதம் 4ஆம் திகதி உலகநாடுகளிற்கான எண்ணெய் விற்பனையையும் நிறுத்தியிருந்தது.

புதிய திட்டங்கள் எதுவும் அமுல்படுத்தப்படாத நிலையில் உணவிற்கான எண்ணெய்த் திட்டம் நீடிக்கப்பட்டால் மட்டுமே எண்ணெய் ஏற்றுமதியை ஆரம்பிக்கப்போவதாகவும் அது தெரிவித்துள்ளது. (ம)

### வலிகாமம் மேற்கில் பிரதானமாக விளங்கும்

# சங்கானை அரச ஆஸ்பத்திரியில் மருந்துக்கு பெரும் பற்றாக்குறை

## பனடோலுக்கே தட்டுப்பாடு என்கிறார் வைத்திய அதிகாரி

வலி. மேற்கு, ஜூலை 6
வலிகாமம் மேற்கின் முக்கிய ஆஸ்பத்திரியாகத் திகழும் சங்கானை அரசினர் வைத்தியசாலையில் பனடோலுக்குக்கூட தட்டுப்பாடு நிலவுகின்றது. இவ்வாறு சங்கானை அரசினர் வைத்தியசாலை வைத்திய அதிகாரி வலிகாமம் மேற்குப் பிரதேச ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்தில் தெரிவித்தார்.

வலிகாமம் மேற்குப் பிரதேச ஒழுங்கிணைப்புக் குழுக் கூட்டம் அண்மையில் பிரதேசச் செயலர் கலாநிதி க. குணராசா தலைமையில் செயலக மாநாட்டு மண்டபத்தில் நடைபெற்றது. சங்கானை வைத்திய அதிகாரி வைத்தியசாலையில் பனடோல் உட்பட சகல மருந்துக்களுக்கும் தட்டுப்பாடு நிலவுவதாகவும் போதியளவு மருந்துகள் சுகாதாரத் திணைக்களத்தில் இருந்து கிடைப்பதற்கு ஆவன செய்யுமாறும் வேண்டுகோள் விடுத்தார்.

சங்கானை ஆஸ்பத்திரியில் மாதமொன்றுக்குச் சராசரியாகச் சுமார் 10 ஆயிரம் நோயாளர்கள் வெளிநோயாளர் பிரிவில் சிகிச்சை பெற்று வருவதாகவும் — சுமார் 400 நோயாளர்கள் மாதாந்தம் வார்ட்டுக்களில் தங்கியிருந்து சிகிச்சை பெற்று வருவதாகவும் அங்கு வைத்திய அதிகாரி சுட்டிக்காட்டினார்.

பிரதேச ஒருங்கிணைப்புக் குழுக்கூட்டத்தில் இது தொடர்பாகச் சுகாதாரத் திணைக்கள அதிகாரிகளுக்கு போதியளவு மருந்துகள் அனுப்பி வைப்பதற்கு நடவடிக்கை எடுக்குமாறு கடிதம் எழுதுவது எனத் தீர்மானிக்கப்பட்டது.

பின்வரும் தீர்மானங்களும் அங்கு நிறைவேற்றப்பட்டன.

★ முத்திரைகள், வான்கடிதங்கள் போன்றவற்றைத் தபாற்கந்தோர்களுக்கு போதியளவு வழங்கி பற்றாக்குறையைத் தவிர்க்க வேண்டும்.

★ செயற்படாமல் இருக்கின்ற நான்கு கடற்றொழிலாளர் கூட்டுறவுச் சங்கங்களையும் புனரமைப்பதற்கு வேண்டிய நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும்.

★ மாதமொன்றுக்கு கடற்றொழிலாளர்களினால் பிடிக்கப்படும் சுமார் 8 ஆயிரம் கிலோ இறால்களை பதனிட்டு கொழும்புக்கு அனுப்புவதற்குரிய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட வேண்டும்.

★ பல வருடங்களாக நிரந்தர வைத்திய அதிகாரி இல்லாமையினால் ஒருநேரம் மட்டும் இயங்குகின்ற வட்டுக்கோட்டை மருந்தகத்துக்கு நிரந்தரமான வைத்திய அதிகாரி ஒருவர் நியமனம் செய்யப்பட வேண்டும்.

இக்கூட்டத்தில் அரச திணைக்களங்களைச் சேர்ந்த அதிகாரிகள், கிராம உத்தியோகத்தர்கள் உட்பட இன்னும் பலர் கலந்துகொண்டனர். (க–175)

## யாழ். பல்கலைக் கழகத்தில் மாணவர் நிலையம் திறக்கப்படும்

யாழ்ப்பாணம், ஜூலை 6
யாழ். பல்கலைக்கழகத்தில் மாணவர் நிலையம் ஒன்று விரைவில் யாழ்.பல்கலைக் கழகத் துணைவேந்தர் பேராசிரியர் பொ. பாலசுந்தரம் பிள்ளை மற்றும் மாணவர் ஒன்றியத்தலைவர் செ. கஜேந்திரன் ஆகியோரால்திறந்து வைக்கப்படவுள்ளது.

இந்த மாணவர் நிலையத்தில் மாணவர்களுக்கான உணவகம், உள்ளக விளையாட்டு வசதிகள், மாணவர் ஒன்றியத்துக்கானஅலுவலகம் மாணவர்களின் பாவனைக்குரிய கற்றல் உபகரணங்களை விற்பனை செய்யும் 4 நிலையங்கள்—

மாணவர்களுக்கான கலந்துரையாடல் மண்டபம், மாநாட்டு மண்டபம், மாணவர் நலச்சேவைக்கிளை அலுவலகம், சிரேஷ்ட மாணவர் ஆலோசகர் அலுவலகம் ஆகியவற்றுடன் பழைய மாணவர் சங்க தொடர்பகத்துக்குரிய அலுவலகத்துக்கும் இட ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

மாணவர் நிலையத் திறப்பு விழாவில் பல்கலைக்கழக விரிவுரையாளர்கள் மற்றும் மாணவர்களைக் கலந்து சிறப்பிக்குமாறு பல்கலைக்கழக நிர்வாகம் அழைப்பு விடுத்துள்ளது. (க–6)

## மாம்பழம் சந்தி பொலீஸ் நிலையம் மூடப்பட்டது

யாழ்ப்பாணம்,ஜூலை 6
அரியாலை, மாம்பழம் சந்திப் பகுதியில் கடந்த ஏப்ரல் மாதம் திறக்கப்பட்ட பொலீஸ் நிலையம் தற்போது மூடப்பட்டுள்ளது.

மக்களின் மீள் குடியேற்றத்துக்காக அப்பகுதியிலிருந்து இராணுவம் வெளியேறுவதைத் தொடர்ந்து பொலீஸ் நிலையமும் கடந்த வாரம் மூடப்பட்டது. (க-10-86)

## மெய்வன்மைப் போட்டி

தென்மராட்சி, ஜூலை 6
பருத்தித்துறை ஹாட்லிக் கல்லூரி இல்ல மெய்வன்மைப் போட்டிகள் நாளை சனிக்கிழமை பிற்பகல் 2.30 மணிக்கு அதிபர் எம். சிறிபதி தலைமையில் கல்லூரி மைதானத்தில் நடைபெறும். பிரதம விருந்தினராகக் கோப்பாய் ஆசிரியர் பயிற்சிக் கலாசாலையின் முன்னாள் விரிவுரையாளர் எஸ். அந்தோனிமுத்து கலந்து கொள்வார். (க-117)

## சமுர்த்தி ஊழியர்களுக்கு நியமனக்கடிதங்கள்

யாழ்ப்பாணம், ஜூலை 6
யாழ். பிரதேச செயலகத்தில் கடமை புரிந்த சமுர்த்தி அபிவிருத்தி உத்தியோகத்தர்கள் 14 பேருக்கு நிரந்தர நியமனக் கடிதம் வழங்கும் வைபவம்கடந்த புதன்கிழமை யாழ். பிரதேச செயலக மண்டபத்தில் பிரதேச செயலர் பி. செந்தில்நந்தனன் தலைமையில் நடைபெற்றது.

யாழ். மாவட்ட ஈ.பி.டி.பி. பொறுப்பாளர் றீகன் நியமனக்கடிதங்களை வழங்கினார். இவ்வைபவத்தில் மாநகரசபை உறுப்பினர் எம். ஜேசுதாசன், சமுர்த்தி உதவி ஆணையாளர் சிவபாதசுந்தரம் ஆகியோரும் கலந்து கொண்டு சிறப்பித்தனர். (க)

★ ★ ★

தென்மராட்சி, ஜூலை 6
வடமராட்சி கிழக்கு உதவி அரசாங்க அதிபர் பிரிவுக்குட்பட்ட பகுதிகளில், கடமை புரியும் 23 சமுர்த்தி அபிவிருத்தி உத்தியோகத்தர்களுக்கு நிரந்தர நியமனக் கடிதங்கள் நேற்று முன்தினம் வழங்கப்பட்டன.

பருத்தித்துறைப் பிரதேச புலோலி பொதுநூல் நிலைய மண்டபத்தில் வடமராட்சி கிழக்கு உதவி அரசாங்க அதிபர் வீ. பீ. வேலாயுதபிள்ளை தலைமையில் நடைபெற்ற இந் நிகழ்வில் பருத்தித்துறைப் பிரதேச சபைத் தலைவர் ஐ. ஸ்ரீரங்கேஸ்வரன் நியமனக் கடிதங்களை வழங்கினார். (க-117)

## ஹர்த்தாலுக்கு முழுப்பங்களிப்பு புதிய ஜனநாயகக்கட்சி வழங்கும்

கொழும்பு, ஜூலை 6
தமிழ்ப் பெண்கள் மீது பாதுகாப்புப் படையினர் மேற்கொண்டு வரும் தொடர்ச்சியான பாலியல் வல்லுறவுச் செயல்களைக் கண்டித்து தமிழ்க் கட்சிகளின் அழைப்பின் பேரில் இன்று வெள்ளிக்கிழமை வடக்கு—கிழக்கில் அனுஷ்டிக்கப்படவுள்ள ஹர்த்தாலிலும், கொழும்பில் இடம்பெற உள்ள மறியல் போராட்டத்திலும் கலந்து கொண்டு முழுப்பங்களிப்பு வழங்குவதென புதிய ஜனநாயகக் கட்சியின் மத்திய குழு தீர்மானித்துள்ளது.

தமிழ்ப் பெண்களுக்கு எதிராக இழைக்கப்பட்டு வரும் பாலியல் ஒடுக்கு முறைக்கு எதிராகவும் நீதி நியாயம் கோரியும் நடைபெற உள்ள மேற்படி எதிர்ப்புப் போராட்ட இயக்கத்தில் சகல இடதுசாரி ஜனநாயக முற்போக்குக் கட்சிகளும் கலந்துகொண்டு தமது எதிர்ப்பையும், ஒருமைப்பாட்டையும் தெரிவிக்க வேண்டும் என்றும் அந்தக் கட்சி அழைப்பு விடுத்துள்ளது.

கட்சியின் இந்த வேண்டுகோளை கட்சியின் பொதுச் செயலாளர் சி. கா. செந்திவேல் தேசிய அமைப்பாளார் இ. தம்பையா ஆகியோர் கூட்டாக வெளியிட்டுள்ளனர். (க)

## யாழ். இந்துவில் பரீட்சை முன்னோடி கருத்தரங்கு

யாழ்ப்பாணம், ஜூலை 6
யாழ் நகர் மைய றோட்டறக்ட் கழகம் நடத்தும் ஜி.சீ.ஈ. உயர்தர கணித, விஞ்ஞான மாணவர்களுக்கான பரீட்சை முன்னோடிக் கருத்தரங்கு சனிக்கிழமையும், ஞாயிற்றுக்கிழமையும் யாழ். இந்துக்கல்லூரி குமாரசுவாமி மண்டபத்தில் நடைபெறும்.

காலை 9 மணி முதல் மாலை 4.30 மணி வரை உயிரியல், இணைந்த கணிதம், பௌதிகவியல், இரசாயனவியல் ஆகிய பாடங்கள் நடைபெறவுள்ளன.

இந்தக் கருத்தரங்கில் பங்குகொள்ளும் மாணவர்களுக்கு கையேடுகளும் வழங்கப்படவுள்ளன. (க)

## வயோதிப மாதை ஏமாற்றிய 'பூசாரி' கைது!

தென்மராட்சி, ஜூலை 6
புலோலி சாரையடிப் பகுதியில் கடந்த மாதம் பூசாரி போல் நடித்து வயோதிபப் பெண்ணை ஏமாற்றி ஒன்றரைப் பவுண் சங்கிலியை அபகரித்துச் சென்ற வேடதாரி சுன்னாகத்தில் வைத்துப் பொலீஸாரால் கைது செய்யப்பட்டு கடந்த இரண்டாம்திகதி பருத்தித்துறைநீதிவான் நீதிமன்றில் ஆஜர் செய்யப்பட்டார்.

இந்த நபரை எதிர்வரும் 16 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு நீதிவான் உத்தரவிட்டார்.

பண்ணாகத்தைச் சேர்ந்த பு. பாலகிருஷ்ணன் என்பவரே கைது செய்யப்பட்ட 'பூசாரி' ஆவார். (க-117)

### கொடிகாமம் - பருத்தித்துறைக்கான

## பாடசாலை பஸ்சேவை சீரின்றி மாணவர்கள் பெருஞ் சிரமம்

தென்மராட்சி, ஜூலை 6
கொடிகாமத்தில் இருந்து பருத்தித்துறைக்கு நடத்தப்படும் பாடசாலை பஸ்சேவை சீராக நடைபெறாமையால் மாணவர்கள் பெரிதும் சிரமங்களை எதிர்நோக்கி வருகின்றனர்.

இப்பகுதிக்கு பாடசாலைச் சேவையாக நடத்தப்படும் பஸ் அடிக்கடி பழுதடைவதால் மாணவர்கள் பாடசாலைக்கு ஒழுங்காகச்செல்ல முடியாத நிலையில் வீதிகளில் காத்திருந்து விட்டு வீடுகளுக்குத் திரும்ப நேரிடுகிறது. சில வேளைகளில் நடுவழியில் பஸ் பழுதடைந்து விடுவதால் காலை வேளைகளில் பல மைல் தூரம் நடந்து பாடசாலைகளுக்கும் மாலை வேளைகளில் நடந்து வீடுகளுக்கும் பிள்ளைகள் செல்லும் நிலை ஏற்படுவதாகவும் பெற்றோர்கள் கவலை தெரிவித்தனர்.

தென்மராட்சிப் பிரதேசத்தைச் சேர்ந்த நூற்றுக்கணக்கான மாணவர்கள் கொடிகாமத்திலிருந்து வடமராட்சிப் பகுதியின் பாடசாலைகளுக்கு வருகை தருகின்ற போதிலும் ஒரேயொரு பஸ் சேவை மட்டும் நடத்துவதால் மாணவர்கள் நெருக்கியடித்துக் கொண்டு 12 மைல் தூரம் பயணம் செய்யும்நிலையுள்ளதாகவும் அவர்கள் தெரிவித்தனர். (க–117)

## நாளை படக்காட்சி

யாழ்ப்பாணம், ஜூலை 6
யாழ். பல்கலைக்கழக புறநிலைப்படிப்புகள் அலகும் திரைப்பட வட்டமும் இணைந்து வழங்கிவரும் திரைப்படக் காட்சித் தொடரில், John Houston இயக்கிய 'The Bible' என்ற திரைப்படம் நாளை சனிக்கிழமை காலை 10 மணிக்கு புவியியற்றுறை மண்டபத்தில் காண்பிக்கப்படும்.

ஆர்வலர்கள் எவரும் பங்கு கொள்ளமுடியும் எனவும் புறநிலைப் படிப்புகள் அலகின் இணைப்பாளர் தெழுவிக்கின்றார். (க)


## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



அன்னை மடியில்
1909 — 07 — 27

ஆண்டவன் அடியில்
2000 — 06 — 17

அமரர் வைத்திய கலாநிதி
**சின்னத்தம்பி நவரத்தினம்**
திதி:- அபர பிரதமை

வைத்திய கலாநிதியாய் வையத்துள் தாம் வாழ்ந்து
எமையெலாம் ஏற்றமுற வைத்த பப்பா! – உங்கள்
வானுலகப் பயணம் தொடங்கி ஓராண்டு ஆகியும்
நாம் அழுத கண்ணீர் இன்னும் தான் வற்றவில்லை!

மக்கள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள், பூட்டப்பிள்ளை.

ந. ரவீந்திரா(மகன்)
பாதுகாப்புப் பரிசோதகர்,
யாழ். பல்கலைக்கழகம்.

220, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.
(89703)



## கண்ணீர் அஞ்சலி

எமது சக மாணவி
நா. உதயாளினி
அவர்களின் அன்புத் தாயார்
**திருமதி நாகேந்திரம் பத்மலோஜினி**

அவர்களின் மறைவினால் துயருறும் அவரின் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவிப்பதுடன், அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

A.L 2000 Day Class,
மாணவர்கள்.

மல்லாகம்.
(89798)

உதயன்

## ஈழத் தமிழரின் துரதிர்ஷ்டம்

ஈழத் தமிழர்களுக்கு எதிரான அத்துமீறல்களுக்கு - குறிப்பாகத் தமிழ்ப் பெண்கள் மீதான பாலியல் துன்புறுத்தல்கள், வல்லுறவுகளுக்கு - எதிராகத் தமிழ்க் கட்சிகளின் கூட்டமைப்பு வடக்கு - கிழக்கு மாகாணம், மலையகம் மற்றும் கொழும்பு ஆகிய இடங்களில் இன்று முழு நாள் ஹர்த்தாலுக்கு அழைப்பு விடுத்திருக்கின்றது.

அரசுக்கு 'ஜால்ரா' போடும் ஒரு தமிழ்க்கட்சியைத் தவிர பெரும்பாலும் ஏனைய அனைத்துத் தமிழ்க் கட்சிகளும், அமைப்புக்களும், குழுக்களும் ஓரணியில் நின்று அஹிம்சை ரீதியிலான - வன்முறைகளற்ற - இந்த ஹர்த்தாலை முன்னெடுக்கின்றன.

தமிழர்களின் உரிமைப் போராட்டத்தை நசுக்கி அவர்களின் சுதந்திரத்தைப் பறித்துக்கொண்டு அவர்களைப் பணத்துக்கு வாங்கும் அரசின் கைங்கரியத்துக்கு ஏவலர்களாகச் செயற்படும் கட்சியைத் தவிர, ஏனைய தமிழ்க் கட்சிகள் அனைத்தும் ஒன்றிணைந்து இந்த அடையாள எதிர்ப்பை வெளிப்படுத்துவதற்கு முன்வந்திருப்பது வரவேற்கத்தக்கது. அண்மைக் காலம் வரை அரசுக்கு குஞ்சரம் தூக்கிக் கொண்டு திரிந்த ஈ.பி.ஆர்.எல்.எவ். (வரதராஜப்பெருமாள்) அணி, புளொட் ஆகியன கூட இந்த நன் முயற்சியின் உண்மைத் தன்மையைப் புரிந்துகொண்டு அதில் பங்குதாரர்களாக இருப்பது கண்டு ஈழத்தமிழர் மகிழ்வர் என்பது நிச்சயம்.

இதுவிடயத்தில், ஒரேயொரு கட்சிதான் தமிழர் உரிமைகளுக்கு - அடிப்படைச் சுதந்திரங்களுக்கு - அப்பால்போய் நின்று, சிங்களப் பேரினவாதம் போடும் எலும்புத்துண்டுக்காக வாலாட்டி நிற்கின்றது.

ஈழத் தமிழர் பற்றிய - தமிழ்ப் பெண்கள் பற்றிய - அவர்களின் வாழ்வியல் பிரச்சினை பற்றிய - ஒரு விவகாரம் இது. தமிழ்ப் பெண்கள் அரச படையினரால் பாலியல் துன்புறுத்தல்களுக்கு ஆளாகின்றார்கள் என்பது நம் அனைவருக்கும் அப்பட்டமாகத் தெரியும் உண்மை.

அதைக் கண்டிக்க எடுக்கப்படும் முயற்சிக்கு தமிழர்கள் அனைவரும் - தமிழ்க்கட்சிகள் அனைத்தும் - கட்சி வேறுபாடுகளுக்கு - அணி வேறுபாடுகளுக்கு - அப்பால் நின்று ஆதரவு தரவேண்டியது வரலாற்றுக் கட்டாயம் ஆகும்; அரசியல் நேர்மையுமாகும்.

இத்தகைய வல்லுறவுகள் இடம் பெறுவதற்கான காரணம் யாது? காரணர் யார்? இதேபோன்ற மனித உரிமை மீறல்களை செய்கின்ற வேறு அமைப்புக்களைக் கண்டிக்க இந்தத் தமிழ்க் கட்சிகள் எல்லாம் தயாரா? - இப்படிக் கேள்விகளை எழுப்புவது அவரவர் அமைப்பை - கட்சியை - கொள்கையை - பொறுத்தது. அவை இரண்டாவதாகக் கையாளப்படவேண்டிய கேள்விகள் - விடயங்கள்.

ஆனால் முதல் - முக்கிய - விடயம் என்னவென்றால் தமிழ்ப் பெண்களை சிறுமைப்படுத்தும் இத்தகைய கொடுரங்களை - சமூக விரோத வெறியை - தமிழ்ச் சமூகம் ஏற்றுக் கொள்ளாது; பொறுத்துக்கொள்ளாது; அடங்கிப் போகாது என்பதை தென்பகுதி மக்களுக்கும் உலகுக்கும் அடித்துக் கூறுவதுதான்; அப்பட்டமாக வெளிப்படுத்திக் காட்டுவதுதான்.

இந்த நன்முயற்சியில் ஒன்றிணையாமல் - தமது வரலாற்றுப் பொறுப்பை உதாசீனம் செய்து, சரித்திரத் தவறுகளைப் புரிந்துகொண்டு - குறுகிய அரசியல் நோக்கங்களுக்காக, இத்கைய முயற்சிகளை குறை கூறுபவர்கள் இன்னும் தமிழ் மக்களின் பிரதிநிதிகள் என்று தம்மைப் பீற்றிக்கொண்டு உலா வரும் நிலைமை ஏற்பட்டது எமது துரதிர்ஷ்டமே.

இன்றைய ஹர்த்தாலில் ஈழத் தமிழர்கள் ஒன்றிணைந்து பங்குபற்றி, தமது சமூகத்துக்கெதிரான அடாவடித்தனங்களுக்குத் தமது முழு எதிர்ப்பைக் காட்டுவதன் மூலமே இத்தகைய துரதிர்ஷ்டங்களுக்கும் நல்வழியைக் காட்ட முடியும்.

# வல்லை ஆஸ்பத்திரியில் தாதியர் விடுதிக் கட்டடம்

## 15லட்சம் ரூபா செலவில் அமைப்பு

யாழ்ப்பாணம்,ஜூலை6

வல்வெட்டித்துறை மாவட்ட வைத்தியசாலையில் தாதிகள் தங்கும் விடுதிக் கட்டடத்துக்கான அமைப்பு வேலைகள் ஆரம்பிக்கப் பட்டுள்ளன.

வடக்கு மீள் குடியமர்வு புனர்வாழ்வு, புனரமைப்பு அதிகார சபை இதற்கென 15 லட்சம் ரூபாவை வழங்கியுள்ளது.

அடுத்த மூன்று மாதகாலப் பகுதிக்குள் விடுதிக்கட்டட வேலைகள் பூர்த்தியடைந்துவிடும் என்று தெரிவிக்கப்பட்டது.

இதேவேளை -

வல்வெட்டித்துறை மாவட்ட வைத்தியசாலை ஊழியர்களுக்கு கட்டைவேலி - நெல்லியடி ப.நோ.கூ. சங்கம் 12 பெண்கள் சைக்கிள்களை கடன் அடிப்படையில் வழங்கியுள்ளது.

ஊழியர்களின் நன்மை கருதி இத்திட்டத்தை கூட்டுறவுச் சங்கம் மேற்கொண்டுள்ளது. மாவட்ட வைத்தியசாலை ஊழியர்களுக்கு ஏற்கனவே 15 ஆண்கள் சைக்கிள்களையும் சங்கம் வழங்கியுள்ளது. (ஐ)

## நாட்டு நடப்பு

ரியூட்டறி - VIII

வீட்டிற்கோர் யுவதி வந்தாள்
விரும்பியே பாடம் கேட்டாள்
எட்டுமணியடிக்க தாயாள் வந்து
"டுக்சி! டுக்சி!!" என அழைத்தாள்
பெற்றதாய் கூப்பிடுதல் கேட்டு
பெண்ணவள் ஓடிச் செல்ல
சற்றேனும் தயக்கமின்றி என்
சடை நாயும் ஓடிப் போச்சு
கற்ற அப் பெண்ணின் பெயரே
கறுவல் நாய் பெயருமாச்சு!

*- விகடகவி -*



யாழ்.நகரப் பகுதியில் நேற்றுமுன்தினம் பட்டப்பகல்வேளை படையினர் பெரும் சோதனை நடவடிக்கை ஒன்றை மேற்கொண்டனர். பெரும் எடுப்பில் நடத்தப்பட்ட இந்த நடவடிக்கையின் போது நகருக்குள் பிரவேசித்த வாகனங்களும் தடுத்து நிறுத்தப்பட்டு சோதனை செய்யப்பட்டன.

கஸ்தூரியார் வீதி வழியாக யாழ்.நகருக்குள் பிரவேசித்த பெரும் எண்ணிக்கையான மக்கள் கன்னாதிட்டிச் சந்திப் பகுதியில் சோதனைக்காகத் தடுத்து நிறுத்தப்பட்டிருந்தபோது எடுக்கப்பட்ட படம். *(படம்: றோய் மதிவதனன்)*

# தமிழீழத்தின் எல்லைகளை புலிகள் விஸ்தரிக்கின்றனராம்!

## சிங்கள வார இதழில் தகவல்

கொழும்பு, ஜூலை6

விடுதலைப்புலிகள் ஏற்கனவே பிரகடனப்படுத்தியிருந்த தமிழீழ இராச்சியத்தின் எல்லைகளை இவ்வாண்டு விரிவுபடுத்திப் பிரகடனப்படுத்தியுள்ளனர் என்று கொழும்பு - சிங்கள வார இதழ் ஒன்று தெரிவித்துள்ளது.

இதுவரை தமிழீழத்தின் வடமேற்கு எல்லை சிலாபம் வரையும் தென்கிழக்கு எல்லை குமண(அம்பாறை) வரையும் வரையறுக்கப்பட்டிருந்தது.

இருப்பினும் இவ்வாண்டிலிருந்து தென்மேற்கு எல்லை நீர்கொழும்பு வரையும் தென்கிழக்கு எல்லை கதிர்காமம் வரையும் வடமத்திய மாகாணத்தின் எல்லை மதவாச்சி வரையும் விரிவுபடுத்தப்பட்டுள்ளது என அப்பத்திரிகை தெரிவிக்கிறது.

நீர்கொழும்பு முன்னக்கரைய, குடாபடாடு ஆகிய இடங்களில் பெருமளவில் தமிழ்மக்கள் வாழ்வதால் அப்பிரதேசங்கள் தங்களுக்குச் சொந்தமானவை என விடுதலைப் புலிகளின் தலைவர் தீர்மானித்துள்ளாராம்.

கடந்த வருடம் விடுதலைப் புலிகள் வெளியிட்டிருந்த ஈழ இராஜ்சியம் 17 பிராந்தியங்களைக் கொண்டதாகவும் அம்பாறை மாவட்டத்தை முற்றிலுமாக அடகியதாகவும் இருந்தது.

கடந்த 10 ஆண்டுகளில் விடுதலைப் புலிகள் ஈழ இராஜ்சியத்தின் எல்லைகளை விரிவுபடுத்திவருகின்றனர் எனவும் முன்னர் வடமேற்கு, வடக்கு, கிழக்கு கரையோரப் பிரதேசங்கள் தமக்குரியவை எனத் தெரிவித்த அவர்கள் தற்போது நாட்டின் உட்பகுதியையும் உள்ளடக்கும் விதத்தில் எல்லைகளை விஸ்தரிக்க முயற்சிக்கின்றனர் எனப் புலிகளுக்கு எதிரான தமிழ் அரசியல் கட்சி வட்டாரங்கள் தெரிவிக்கின்றன என்றும் அந்தப் பத்திரிகை தெரிவித்துள்ளது. (ஐ)

### வெளிநாட்டு வங்கி ஒன்றிடமிருந்து

# மேலும் 1,800 கோடி ரூபா கடன் பெற அரசு முயற்சி

கொழும்பு,ஜூலை6

இவ்வாண்டு வரவு செலவுத் திட்டச் செலவுகளை ஈடுசெய்ய மேலும் 1,800 கோடி (200 மில்லியன் அமெரிக்க டொலர்) ரூபாவை வெளிநாடுகளில் இருந்து கடனாகப் பெறுவது எனத் திறைசேரி தீர்மானித்துள்ளது.

சிங்களப் பத்திரிகை ஒன்று இத்தகவலைத் தெரிவித்தது.

இந்தக் கடனை ஐரோப்பாவிலுள்ள தனியார் வங்கி நிறுவனத்திடமிருந்து பெறுவதற்கு திறைசேரி விண்ணப்பித்துள்ளதாக திறைசேரிப் பேச்சாளர் தெரிவித்துள்ளார்.

திறந்தவெளிச் சந்தையில் வழங்கப்படும் வட்டி வீதத்தில் இந்தக் கடனைப் பெற முயற்சி எடுக்கப்பட்டுள்ளது எனவும் -

5 ஆண்டுகளில் மீளச் செலுத்தும் விதத்தில் இந்தக் கடன் விண்ணப்பிக்கப்பட்டுள்ளது எனவும் தெரிய வருகிறது.

இந்தக் கடனை பகுதி பகுதியாக வழங்குவது குறித்து ஐரோப்பிய வங்கி நிறுவனம் ஆராய்ந்து வருகிறது.

இந்தக் கடன் கிடைக்குமாயின் வரவு செலவுத் திட்டத்தில் துண்டு விழும் தொகையை ஓரளவு ஈடுகட்ட முடியும் என்பதால் நாட்டில் தற்போது நிலவும் வட்டி வீதத்தைக் குறைப்பதற்கான அழுத்தங்கள் ஏற்படும் எனவும் தெரிவிக்கப்படுகிறது.

இவ்வாறு அப்பத்திரிகை மேலும் தெரிவித்துள்ளது. (ஐ)

## நாவற்குழியில் மீளக்குடியமர்ந்தோர் கொடுப்பனவு

நாவற்குழி கிழக்கு கிராம அலுவலர் பிரிவில் மீளக்குடியமர்ந்த 23 குடும்பங்களுக்கு வீடு திருத்துவதற்காக தென்மராட்சி பிரதேச செயலகத்தினால் 5 ஆயிரம் ரூபா கொடுப்பனவு வழங்கப்பட்டது.

நாவற்குழி மாகாவித்தியாலயத்தில் வைத்து இந்தக் கொடுப்பனவு வழங்கப்பட்டது. இவர்களுக்கு மேலும் 10 ஆயிரம் ரூபா இரண்டு கட்டங்களாக வழங்கப்படவுள்ளது. (ம-5)

### வலி.மேற்குப் பகுதியில் உள்ள

# பெற்றோரை இழந்த மாணவருக்கு நிதி உதவி வழங்குவதற்கு ஏற்பாடு

மூளாய்,ஜூலை6

வலிகாமம் மேற்குப் பகுதிகளில் உள்ள தாய், தந்தையரை இழந்த பாடசாலை மாணவர்களுக்கு கனடா நாட்டின் தொண்டர் அமைப்பு மூலமாக நிதி உதவி வழங்கப்படவுள்ளது.

இம்மாணவர்களின் பாடசாலைக் கல்வி, தடையின்றித் தொடர்வதற்கு வசதியாகவே மேற்படி அமைப்பு மூலமாக நிதி உதவி வழங்கப்படவுள்ளது.

இதற்கான சகல ஏற்பாடுகளையும் வலி.மேற்கு பிரதேச செயலர் கலாநிதி க.குணராசா ஏற்கனவே மேற்கொண்டுள்ளார்.

முதற்கட்டமாக 37 மாணவர்களுக்கு மேற்படி நிதி உதவி மாதாந்த அடிப்படையில் வழங்கப்படவுள்ளது. மேலும் பல மாணவர்கள் இந்த உதவியைப் பெற விண்ணப்பம் செய்துள்ளனர்.

பெற்றோரை இழந்து கல்வியைத் தொடர முடியாமல் உள்ள மாணவர்கள் தமது பகுதி கிராம உத்தியோகத்தர் மூலமாக மேற்படி நிதி உதவிக்காக விண்ணப்பம் செய்யலாம் என்று பிரதேச செயலர் அறிவித்துள்ளார். (க-99)

### நாளை

ஆனி 23
சனிக்கிழமை
திதி: துதியை
முன்னிரவு 10.13 வரை.
நட்சத்திரம் : உத்தராடம்
பிற்பகல் 12.49 வரை.
சுபநேரம் : 2.58 - 4.28
ராகுகாலம் : 9.58 - 10.28
(பழைய நேரப்படி)

### உதயவாக்கு

தனக்கே தோழனாயிருக்கும் ஒருவன் எல்லோருக்கும் தோழனாயிருக்கிறான்.

*- செனேகா.*


கண்ணிகள் காத்திருக்கின்றன, கவனம்!



முள்ளுக் கம்பி வேலி சுற்று மதில் சூழ
போட்டிருக்கு விட்டு வந்த எங்கள் வீட்டில்
வீட்டு பனையடியில் கறுப்பாய் மிதக்குது தெரியாத
பொருளொன்று தெளிவாய்
தள்ளி நின்று சிவப்புக் கொடி காட்டிவிட்டு
திரும்பி வந்தேன் பாதுகாப்பாய் நான்!

# மானிடப்பிறவி மிகவும் மகிமை வாய்ந்தது; ஊனுடம்பை வளர்க்க ஊனுண்ணல் தகாது!

பசு சாதுவானது. கோமாதா என்று போற்றிப் புகழப்படுவது. இறைவனின் அபிஷேகத்துக்கு வேண்டிய பால்,தயிர்,நெய் முதலானவற்றைத் தருகின்ற பசு தெய்வீகம் நிறைந்தது. சுபகாரியங்களின் போது பசுவை வணங்கியே அவை ஆரம்பிக்கப்படுகிறது. ஆகவே பசுவின் சிறப்பு சொல்ல முடியாதது. அதன் சிறப்புக் கருதியே ஞானசம்பந்தப் பெருமான், "வாழ்க அந்தணர் வானவர் ஆயினம்" என்று தேவாரப் பதிகத்திலே சிறப்பிக்கின்றார். இத்துணை பெருமை வாய்ந்த பசுக்களை நாங்கள் பேணிப் பாதுகாத்து வளர்க்க வேண்டுமே தவிரக் கொல்லலாகாது. பசுக்கொலையைப் போன்ற மாபாதகச் செயல் வேறில்லை. பசுவின் ஒவ்வோர் அங்கங்களிலும் தேவர்கள் உறைகின்றனர். பசுவின் உடம்பு முழுவதிலுமே தெய் வீகம் நிறைந்துள்ளது. அத்தகைய பசுவை வதைப்பது கூடவே கூடாது. வாயில்லா ஜீவனை வதைப்பது நீதியான செயலா? சிந்தித்துப் பாருங்கள்; உண்மையை உணருங்கள்.

வயிற்றுப் பசியைத் தீர்ப்பதற்காகப் பசுவை வதைத்து உண்ணுதல் தகாதசெயல். "அரிது அரிது மானிடராய் பிறத்தல் அரிது" என்ற ஔவைப்பிராட்டியின் கருத்துக்கு நாம் மாசு கற்பிக்கலாமா? ஆறறிவு படைத்த மனிதன செய்யும் வேலையா இது! சீ, வெட்கம். மிகவும் கேவலமான இந்துப் பசுவதை மனிதனுக்கு ஒவ்வாதது; ஆகாதது.

சின்னமான திருநிறும் பசுவின் சாணத்தில் இருந்தே உற்பத்தியாக்கப்படுகிறது. 'பூவினுக் கருங்கலம் பொங்கு தாமரை; ஆவினுக் கருங்கலம் அரனஞ்சாடுதல்' என்ற தேவாரவரிகள் உணர்த்தும் பொருள் இங்கே நோக்கற்பாலது.

சண்டேசுர நாயனார் சிவபூஜை செய்தபோது குடங் குடமாய்ப் பால்



கொடுத்தகு பசு. திருமூலநாயனார் பசுக்களுக்கு இரங்கியே கூடுவிட்டுக் கூடு பாய்ந்தார். மனுநீதி கண்ட சோழனும் கன்றை இழந்த பசுவின் துன்பத்தை உணர்ந்தே தன் மகனைத் தேர்க்காலிலிட்டுக் கொன்றான். இவ்வாறு பசுவின் பொருமையை அடுக்கிக்கொண்டே போகலாம்.

உயர்த்தவே அபிஷேகத் திரவியங்களைப் பசுவின் மூலமாகக் கிடைக்கச் செய்கிறான். சைவசமயத்தை அனுட்டிக்கும் ஒவ்வொருவரும் பசுக் கொலை செய்யக்கூடாது. புலாலை அறவே வெறுக்க வேண்டும்.

"தன்னூன் பெருக்கற்குத் தான் பிறிது ஊனுண்பான் எங்ஙனம் ஆளும் அருள்"

எங்களுடைய உடம்பை அதாவது அழிகின்ற தேகத்தை வளர்ப்பதற்காக இன்னொரு உடம்பை ருசிகக்கும் மானுட வர்க்கத்துக்கு எப்படி அருள் கிடைக்கும்? ஒரு போதும் கிடைக்காது. முதலில் நாம் திருந்த வேண்டும். எமது முதுகில் ஆயிரம் அழுக்கு இருக்கிறது. முதலில் அதனைக்கழுவ வேண்டும். நம்மை நாமே திருத்திக் கொண்டால் உல கம்தானே திருந்தும்.

"கோயில் கொடியேறியிருக்கிறதே, இப்போது வேண்டாம் திருவிழா முடிந்த பின்னர் பார்ப்போம்" என்று வாழும் நமது சமூகம் மாற வேண்டும். எப்போது மஹோற்ற சவம் முடிவடையும் என்று பார்த்திருந்து மாமிசம் புசிக்கும் நம்மவர் மத்தியில் இருக்கும்வரை உலகத்திற்கு விமோசனம் கிடையாது. "உன்னை நீ திருத்திக் கொள்; உலகம் தானே திருந்தி விடும்" என்கிறார் ஸ்ரீ ராமகிருஷ்ணர்.

"கொல்லான் புலால் மறுத் தானைக் கைகூப்பி எல்லா உயிருந் தொழும்"

## வாயில்லா ஜீவனை வதைப்பது நீதியா?

சைவத்தையும் தமிழையும் வளர்த்த ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலப் பெருமானும்கூடப் பசுவதை ஆகாது என வலியுறுத்தியுள்ளார். பிறந்த குழந்தை தனது தாயை 'அம்மா' என்று அழைப்பது போன்றே பசுவும் கன்று ஈன்றதும் அது தன் தாய்ப் பசுவை 'அம்மா' என்றே அழைக்கிறது. வேறு எந்த ஜீவராசியிடமும் காணாத விசேட குணாம்சம் பசுவிடமுண்டு. இதை மனிதர்கள் உணர வேண்டும்.

பசுவின் பாலில் இருந்து தயிர், மோர், நெய் பெறப்படுகிறது. சிவ

முற்காலத்தில் யுத்தத்திற்கு முதல பசுநிரை கவர்தல் நிகழ்வதுண்டு. ஒரு நாட்டின் முதுகெலும்பே பசுவினந்தான். ஒரு நாட்டின் செல்வச் செழிப்பிற்குப் பசுவே மூலகாரணம். பசுமாடு கண்களில் பட்டாலே அது சிறப்பின் முதலிடமாகும். நல்ல காரியங்களுக்குப் புறப்படும் போது பசு முழுவிசேஷமாகக் கருதப்படுகிறது. அத்தகைய பசுக்களை நாம் கொலை செய்யலாமா? சிந்தியுங்கள்.

வாழ்த்த வாயும் நினைக்க மட நெஞ்சும் தாழ்த்தச் சென்னியும் தந்த இறைவன் பசுவின் பெருமையை

**சைவப்புலவர்**
**இராசையா ஸ்ரீதரன்**

பிற உயிர்களை இம்சைப்படுத்தாமலும் புலால் உண்ணாமலும் இருப்பவனைக் கைகூப்பி எல்லா உயிரும் தொழும் என்கிறார் வள்ளுவர். ஆகவே, சைவமக்களாகிய நாம் பசுவதையை விடுத்து. அசைவ உணவை நீக்கி, சைவ உணவையே உண்டு வாழ்கையில் உண்மையான சைவர்களாக வாழ்ந்து, நமக்கும் பிறர்க்கும் நற்பயன் தேட வழி வகுத்து, வாழ்ந்துகாட்டி முன்னோடியாகத் திகழ்வோமாக.

# சிறுவர்களை ஆள்சேர்ப்பதாக புளொட் அமைப்பின் மீது கண்டனம்

வவுனியா,ஜூலை6

வவுனியாவில் சிறுவர்களை இராணுவப்பயிற்சிக்காக புளொட் அமைப்பு சேர்த்து வருவதாக சர்வதேச மன்னிப்புச் சபை குற்றம் சுமத்தியுள்ளது.

லண்டனைத் தலைமையகமாகக் கொண்டு இயங்கும் சர்வதேச மன்னிப்புச் சபை இது குறித்து இலங்கை அரசுக்கு கடிதம் ஒன்றையும் அனுப்பி வைத்துள்ளது.

அந்தக் கடிதத்தில் தெரிவிக்கப் பட்டுள்ளதாவது:-

சிறுவர்களை விடுதலைப் புலிகள் படையில் இணைத்துக்கொள்கின்றனர் என இலங்கை அரசு கூறி வருகிறது. ஆனால் அரசினால் நிதி, ஆயுதம் வழங்கப்படும் தமிழ்க்குழுவான புளொட் அமைப்பு வவுனியாவில் இத்தகைய நடவடிக்கையில் ஈடுபட்டு வருகிறது. புளொட் அமைப்பினால் இராணுவப் பயிற்சிக்கெனத் தடுத்து வைக்கப்பட்டுள்ளதாகக் கூறப்படும் 15 சிறுவர்களைக் கண்டு பிடிக்க இலங்கை அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும்.

இந்த 15 சிறுவர்களும் கண்டு பிடிக்க முடியாத முகாமொன்றுக்கு மாற்றப்பட்டுள்ளனர் எனத் தகவல்கள் தெரிவித்துள்ளன.

இராணுவ உளவுப் பிரிவினால் கைது செய்யப்படுபவர்கள் புளொட் அமைப்பின் முகாம்களில் தடுத்து வைக்கப்பட்டுள்ளனர். இவர்களை இராணுவ அதிகாரிகள் சென்று பார்வையிட்டு வருகின்றனர்.

கடந்த மாதம் புளொட் அமைப்பினால் விசாரணைக்கு உட்படுத்தப் பட்ட இருவர் விசாரணைகளின் பின்னர் காணாமற போய்விட்டனர் - என்று அந்த அறிக்கையில் சர்வதேச மன்னிப்புச்சபை தெரிவித்துள்ளது.

புளொட் போன்ற தமிழ்க் குழுக்களின் நடவடிக்கைகள் குறித்து அரசு அதிக கட்டுப்பாடு விதிக்கப்பட வேண்டும். இல்லையேல் மனித உரிமைகள் குறித்து இலங்கையில் முன்னேற்றம் ஏற்பட்டுள்ளதாக படையினர் கூறமுடியாது என்றும் அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

இதேவேளை -

வவுனியாவில் புளொட் அமைப்பினர் இவ்வாறான செயல்களில் ஈடுபடுவதில்லை என்றும் -

சிறுவர்கள் எவரும் தமது முகாம்களில் தடுத்து வைக்கப்பட்டிருக்கவில்லை என்றும் -

படிப்பைத் தொடர உதவி கேட்ட சிறுவன் ஒருவன் பின்னர் தன் சுய விருப்பின் பேரில் தமது அமைப்பில் இணைந்து கொண்டார் என்றும் -

புளொட் அமைப்பின் பிரமுகர் ஒருவர் வவுனியாவில் தெரிவித்தார் என பி.பி.ஸி. குறிப்பிட்டது. (உ-7)

## செயலமர்வுக்கான கொடுப்பனவுகள்

தென்மராட்சி,ஜூலை6

தென்மராட்சி கல்வி வலய அலுவலகத்தினால் நடத்தப்பட்ட தரம் 8, 11 ஆகிய வகுப்புகளின் ஆசிரியர்களுக்கான வரலாறும் சமூகக் கல்வியும் புதிய பாடத்திட்ட செயலமர்வுகளில் பங்கு பற்றிய ஆசிரியர்களுக்கான கொடுப்பனவுகள் எதிர்வரும் 14ஆம் திகதி சனிக்கிழமை காலை 9 மணி தொடக்கம் 12 மணி வரை வலய அலுவலகத்தில் வழங்கப்படுமென அறிவிக்கப்பட்டுள்ளது. (ம-117)

## நகரப் பகுதியில் நேற்றுமுன்தினம் படையினர் திடீர் சோதனை!

யாழ்.நகரின் பல பகுதிகளில் நேற்றுமுன்தினம் நண்பகல் படையினரால் சுற்றிவளைக்கப்பட்டு தீவிர சோதனைக்கு உட்படுத்தப்பட்டன.

திடீரெனப் பல வாகனங்களில் வந்திறங்கிய படையினர் ஸ்ரான்லி வீதி, நாவலர் வீதி, கஸ்தூரியார் வீதி, கே.கே.எஸ். வீதி உட்பட நகரின் முக்கிய வீதிகளில் வீதித்தடைகளை ஏற்படுத்தி நகருக்குள் நுழைவோரையும் நகரிலிருந்து வெளியேறுவோரையும் கடுமையாகச் சோதனை செய்தனர். சுமார் ஒன்றரை மணிநேரம் இந்தச் சோதனை நடவடிக்கை இடம்பெற்றது.

இதனால் நகரின் முக்கிய வீதிகளில் போக்குவரத்து ஸ்தம்பித்தது. பொதுமக்களும் வாகனங்களும் நீண்ட வரிசையில் காத்திருந்ததைக் காணமுடிந்தது. கொளுத்தும் வெய்யிலின் மத்தியில் காத்திருந்த மக்களையும் வாகனங்களையும் படையினர் துருவித் துருவிச் சோதனையிட்டனர். பிற்பகல் 2.30 மணிவரை இந்தச் சோதனைகள் இடம்பெற்றன. அதன்பின்னர் நிலைமை வழமைக்குத் திரும்பியது.

கரும்புலிகள் தினத்தையொட்டி பாதுகாப்பு முன்னெச்சரிக்கை நடவடிக்கையாக இச்சோதனைகள் இடம்பெற்றிருக்கலாம் எனக்கருதப்படுகிறது. (ம-4-6-173)

## தெய்வீக ஸ்தலங்களில்



பாஷையூர் புனித அந்தோனியார் கோயில் திருவிழா திருப்பலியின் இறுதியில் யாழ்.மறைமாவட்ட ஆயர் தோமஸ் சௌந்தரநாயகம் புனித அந்தோனியாரின் திருச்சுருபத்தை உயர்த்தி மக்களுக்கு ஆசீர் வழங்குவதைப் படத்தில் காணலாம். அருகில் ஆலய பங்குத் தந்தையும் காணப்படுகிறார். (உ-6)



சித்தன்கேணி பெரியவளவு ஸ்ரீ மகா கணபதிப்பிள்ளையார் கோயிலுக்குப் புதிதாக வசந்தமண்டபம் ஒன்று அமைக்கப் படவுள்ளது. அன்மையில் இதற்கான அடிக்கல்லை வலி.மேற்குப் பிரதேச சபைத் தலைவர் ந.திரிலோகநாதன் நாட்டுவதைப் படத்தில் காணலாம். (உ-175)



வண்ணார்பண்ணையைச் சேர்ந்த சிவத்திரு.சி.ஸ்ரீதயாளன் ஐயாவுக்கு குருப்பட்டாபிஷேகம் வழங்கும் நிகழ்வு அண்மையில் கலட்டி ஸ்ரீ வீரகத்தி விநாயகர் ஆலயத்தில் இடம்பெற்றது.

வல்லை ஸ்ரீ முத்துமாரி அம்மன் ஆலய பிரதம குரு சிவஸ்ரீ சோமஸ்கந்த தண்டபாணி கதேசிகர் ஆசாரியாபிஷேகம் செய்து வைப்பதைப் படத்தில் காணலாம்.

(ஐ-17)



இணுவில் அருள்மிகு விஸ்வேஸ்வரப் பெருமான் ஆலயத்தில் (இணுவில் சிவன் கோயில்) அண்மையில் 15 தினங்கள் சிவக் கதைகள் பற்றிச் சொற்பொழிவாற்றிய சின்னத்தம்பி ஸ்ரீதயாளனுக்கும் -

இணுவை வாசியும், விழா அமைப்புக் குழுத் தலைலவருமான மு.வை.செ.பாலசுப்பிரமணியத்துக்கும் ஆலயத்தில் பொன்னாடை போர்த்துக் கௌரவித்த போது எடுக்கப்பட்ட படம். (ஐ)

# அமலமரித் தியாகிகளின் தலைவர் இன்று யாழ்ப்பாணம் வருகிறார்

**அமலமரித் தியாகிகளின் அகில உலக சிரேஸ்ர தலைவர் பேரருட் திரு. வில்கெய்ம் ஸ்ரெக்ளிங் அவர்களின் யாழ். மாகாண வருகையை ஒட்டி இக்கட்டுரை பிரசுரமாகிறது.**

பிரான்ஸ் தேசத்தின் எக்ஸ் என் புறொவான்ஸ் எனும் இடத்தில் 1816 இல் புனித இயூஜின் டி மசனொட் அவர்களால் 'எளியோர்க்கு நற்செய்தி அறிவிக்க' என்ற உள்ளுயிரோடு பிறந்ததுதான் அமலரித் தியாகிகள் சபையாகும். இந்த அப்போஸ்தலிக்க குழுமத்தை அ.ம.தியாகிகள் அல்லது **O.M.I.** சுவாமிமார் அல்லது **OBLATES** என்றும் அழைப்பர்.

இற்றைக்கு சுமார் 153 வருடங்களுக்கு முன்பதாக, 1847இல் "மேய்ப்பனில்லா" என் மந்தைகளுக்கு மேய்ப்பர்களைத் தயவாகத் தாருங்கள். தந்துதவுங்கள்" என்று அப்போஸ்தல பதிலாயர் பெற்றக்கினி அவர்கள் ஆயர் இயூஜினை வேண்டினார். உருக்கமான வேண்டுதலையும் உண்மையான தேவையையும் நிறைவேற்றத் துணிந்தவர்தான் அ.ம.தி.களின் ஸ்தாபகத் தந்தை புனித கியூஜின் டி மசனொட். அதிலும் குறிப்பாக, ஈழநாட்டின் வடபகுதியில் அதாவது, தற்போதைய யாழ்ப்பாணம், மன்னார், திருமலை - மட்டக்களப்பு, அனுராதபுரம், சிலாபம் ஆகிய மறைமாவட்டங்கள் உட்பட நீர்கொழும்பையும் உள்ளடக்கிய பகுதிகளில் பணியாற்ற அருட் திரு. சமேரியா, அ.ம.தி.அடிகளாரின் தலைமையில் 4 தியாகிகள் 1947 கார்த்திகைத் திங்கள் எம் மண்ணை வந்தடைந்தனர்.

நாளடைவில் பிரான்ஸ், இத்தாலி, ஜேர்மனி, ஸ்பெயின், பெல்ஜியம், ஒல்லாந்து, போலந்து, இங்கிலாந்து, அயர்லாந்து, செக்கோஸ்லேக்கியா போன்ற பல நாடுகளிலிருந்தும் பணிபுரிய பல அ. ம.திகள் ஈழநாட்டிற்கு விரைந்தனர். இலங்கையின் வட பகுதிகளில் மட்டுமல்லாது, நாடு முழுவதும் அ.ம.திகளின் பணி வரந்து, விரிந்து, படர்ந்தது. அனைத்து மக்களின் நலனிலும் அக்கறை கொண்டார்கள். அதனால்த் தான் குறிப்பாக கல்விப்பணி, சமூகப் பணி, மனிதநேயப் பணிகளிலே ஆர்வம் காட்டினார்கள். பாடசாலைகளையும், கல்லூரிகளையும், அமைத்து கல்விச் செல்வம் ஊட்டினார்கள். தொழிற்கூடங்களையும், தொழிற் பயிற்சி நிறுவனங்களையும் அமைத்து, வேலைத் திட்டங்களையும் வேலை வாய்ப்புக்களையும் ஏற்படுத்தினார்கள். ஆதரவற்ற சிறார்களுக்கு சிறுவர் இல்லங்களை அமைத்துக் கொடுத்தார்கள்.

பங்குப் பணிகளை விரிவாக்கி, புதிய பணித்தளங்களை உருவாக்கி, பல மறைமாவட்டங்களை நிர்வகித்து, இறையழைத்தல்களை ஊக்குவித்து, இன்று ஒவ்வொரு மறைமாவட்டமும் தன்னைத்தானே விசுவாசத்தில் வளர்க்க காரணராய் இருந்தவர்கள். ஆரம்பத்தில், இல்லத்தரிசிப்பு, மகாஞான ஒடுக்கம் நடத்துதல், ஆலய திருநாள்காலங்களில் மறையுரை ஆற்றுதல், தவக்கால தியானங்கள், மரியன்னை பக்தி முயற்சி போன்ற பணிகளால் தமக்கென்று ஒரு பாரம்பரியத்தையே பல மறைமாவட்டங்களில் உருவாக்கியிருக்கிறார்கள். இன்று, இவற்றோடு இணைந்து காலத்தின் குறிகளை அறிந்து கொண்டு, களநிலைத் தேவைகளைப் புரிந்து கொண்டு பணிகள்விரிவடைநதுள்ளன. உளவள ஆற்றுப்படுத்தும் பணி வைத்



தியசாலைப்பணி, உருவாக்கப்பணி, இடம்பெயர்ந்தோருக்கான சமூகநலப் பணி, ஆன்மீக நெறிப்படுத்தும் பணி எனப் புதிய தேடல்களை நோக்கிய பயணமாகவும் இவை ஆற்றப்படுகின்றன.

இற்றைக்கு சுமார் ஒன்றரை நூற்றாண்டு காலமாக எம் மண்ணும் மக்களும் பெற்ற வரப்பிரசாதங்கள் எத்தனை எத்தனையோ! எடுத்துக் காட்டாக; கல்வி உலகிற்கு - யாழ்.மக்கள் வாழ்வியல் மையமாகவிருந்த பொது நூலகத்தை அமைப்பதில் இராப்பகலாய் உழைத்த அமலமரித்தியாகி லோங் அடிகளாரை யாழ்மக்கள் என்றும் நினைவு கூருவர். எத்தனை குண்டுகளின் மத்தியிலும் எஞ்சியிருக்கும் மிஞ்சிய உருவச்சிலை இதனை எப்போதும் உணர்த்திக் கொண்டேயிருக்கும்!.. ஆயர் பொஜ்ஜின், அ.ம.தியின் கல்விப்பணி, மனித நேயப் பணிகளை ஈழநாடு என்றும் நினைவிற் கொள்ளும். பன்மொழிப் புலவர் நல்லூர் சுவாமி ஞானப்பிரகாசர் அ.ம.தி. அடிகளின் மொழியியல், வரலாற்று ஆய்வுகளையும், தமிழ்மறைப் பணியினையும் வரலாறு என்றும் நினைவுகூரும்.

இந்த அ.ம.தி.கள் குடும்பத்தின் சிரேஷ்ட தலைவர் பேரருட்திரு. உவில்கெய்ம் ஸ்ரெக்ளிங் அடிகளார் ஈழநாட்டின் தென்பகுதியில் அ.ம.தி.கள் பணியாற்றும் பல இடங்களைத் தரிசித்துவிட்டு, இடிந்துபோன எம் இதயப் பகுதியாம் வன்னி, மன்னார் சென்று இன்று (06.07.2001) யாழ்ப்பாணம் வருகிறார்.

பேரருட்திரு. உவில்கெய்ம் ஸ்ரெக்ளிங் அடிகள் ஜேர்மனிய நாட்டைச் சேர்ந்தவர். வன்முறைகளும், அரசியல் சீர்கேடுகளும் பொருளாதார நெருக்கீடுகளும் நிறைந்த தென் அமெரிக்கக் கண்டத்தின் பராகுவே நாட்டில் பணிபுரிய சித்தம் கொண்டார்.

சுமார் பதினொரு வருடங்கள் பராக்குவேயில் பணிபுரிந்த நீண்டகால அனுபவத்தோடு அ.ம.திகள் குடும்பத்தின் பொது நிர்வாகத்தில் ஆறு வருடங்கள் இரண்டாம் துணை முதல்வராக அரும்பணியாற்றினார். ஆறு வருடங்களுக்கு ஒரு முறை நடைபெறும் சபையின் பொது அமர்வில் 1998இல் அ.மெ.தி.களின் 12 ஆவது தலைவராகத் தெரிந்து கொள்ளப்பட்டார். அடிகளாரின் ஆளுமைச் சிறப்புக்களை பலவாறு கூறுவர். மலர்ந்த முகமும், மென்மையான பேச்சும், அமைதியான சுபாவமும், திறந்த மனமும், தூய உள்ளமும், மனித நேயமும், சாந்த குணமும், தாராள சிந்தையும், எளிமையான வாழ்வும், ஆழ்ந்த ஒத்துணர்வும், அதீத அக்கறையும், எதையும் முடிக்கும் துணவும், ஆன்ம பலமும் தந்தையின் தலைமைப் பணிக்குத் தகைமைகளாகவும் அடிகளாரின் வாழ்வை அலங்கரிக்கின்ற அணிகலன்களாகவும் அமைகின்றன.

**செ.அன்புராசா, அ.ம.தி.**

அடிகளார் உள்ளத்தால் எமது நீண்ட துன்பப் பயணத்தில் பெரிதும் ஒத்துணர்வு கொள்பவர். எமது மக்களைப் பார்க்க வேண்டும், எமது துன்ப துயரங்கள் இழப்புக்கள் வேதனைகளைப் பகிர்ந்து கொள்ள வேண்டும் என்று நீண்ட காலமாகவே இந்நாளுக்காகக் காத்திருந்தார். இப்போதுதான் காலம் கனிந்திருக்கிறது.

பெருமூச்சு விட்டுக்கொண்டு அமைதியாக, அமைதிக்காக காத்திருக்கிறோம். என்றோ ஒரு நாள் விடியும் அந்த விடுதலைப் பொழுதிற்காக!... இத்தலைவனின் வருகை சோகங்களே எம் சொந்தங்களாகி விட்ட நிலையில் தொடர்ந்து எம்மக்களோடு பயணிக்கும் அ.ம.தி.களுக்கு புத்துணர்வையும், புதுத் தெம்பையும், புதிய நம்பிக்கையையும் தரும் என்பதில் ஐயமில்லை.

தமிழ் மணம் கமழ பேரருட்தந்தையை வாழ்த்திப் பேரன்போடு வரவேற்கிறோம். வருக தந்தையே வருக...! ☆

## விசாரணைக்கு அழைப்பு

காணமற்போனோர் தொடர்பான விசாரணைகளை மேற்கொண்டுவரும் புலனாய்வுப் பிரிவினர் காணமற்போன இருவர் தொடர்பான விசாரணைகளை மேற்கொள்வதற்காக சாட்சிகளை யாழ. பொலீஸ் நிலையத்திற்கு வருமாறு அழைத்துள்ளனர்.

காணமற்போனவரின் பெயரும் சாட்சிகளின் பெயர் விவரமும் வருமாறு:-

- நவராசா சதீஸ்குமார் (கோவை இல.பி - 337), சாட்சிகள் - விஜயகுமார், உதயகுமார், ராஜ்குமார், புஸ்பராணி (சாவற்கட்டு, ஆனைக்கோட்டை)
- குணரத்தினம் அருமைராசா (கோவை இல. பி - 333) கல்யாணி கிறீம் ஹவுஸ் உரிமையாளர் (கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்). (ம-4-6)


உ
ஸ்ரீகணேசாயநம

**உபநயன பிரம்மோபதேச அழைப்பு**

ஸ்வஸ்தி ஸ்ரீ பத்திரகாளி சமேத ஸ்ரீ வீரபத்திர சுவாமி திருவருள் முன்னிற்க, மங்களகரமான விஷு வருஷம் ஆனி மாதம் 24ஆம் நாள் (08-07-2001) ஞாயிற்றுக்கிழமை திருவோண நக்ஷத்திரமும் திருதியைத் திதியும் அமிர்த யோகமும் கூடிய சுபநன்னாளில் மு.ப.11மணி முதல் 11மணி 55நிமிடம் வரையில் உள்ள ஸ கன்னி லக்கின சுபமுகூர்த்த வேளையில்

எமது துவிதீய புத்திரனாகிய

சிரஞ்சீவி ***சசிதரசர்மன்*** அவர்களுக்கு

பிரம்மோபதேச யக்ஞோபவீத தாரணம் செய்ய, ஸ்ரீமத் நாராயணன் துணையுடன் பெரியோர்கள் நிச்சயித்திருப்பதால் அத்தருணம் தாங்கள் தங்கள் குடும்ப சமேதராகச் சமூகம் தந்து சிறப்பித்து செல்வனை ஆசீர்வதிக்கும் வண்ணம் அன்புடன் அழைக்கின்றோம்.

*உபநயன பிரம்மோபதேச குரு* :- ப்ரம்மஸ்ரீ ச.சோமாஸ்கந்தக் குருக்கள் *(மயிலணி)*
**சர்வதேச இந்துமத குரு பீடாதிபதி ப்ரம்மஸ்ரீ ச.மகேஸ்வரக் குருக்கள்**

(89783)

*ஸ்ரீ வீரபத்திர கோயில்,*
*வியாபாரிமூலை,*
*அல்வாய் வடக்கு, அல்வாய்.*

*தங்கள் நல்வரவை நாடும்*
பிரம்மஸ்ரீ சிவாசுதேவக்குருக்கள்
தம்பதிகள்.


## கல்விச்சாலைக் காட்சிகள்




நல்லூர் தெற்கு ஸ்ரீவிக்னேஸ்வரா வித்தியாலயத்தில் ஜீ.ரீ.இசற் அமைப்பினால் புனரமைப்புச் செய்யப்பட்ட கட்டடத் தொகுதி அண்மையில் திறந்து வைக்கப்பட்டது.

ஜீ.ரீ.இசற் அமைப்பின் கணக்காளர் பேர்ஸி ஜெயக்குமார் உரையாற்றுவதைப் படத்தில் காணலாம். யாழ்.வலயக் கல்விப் பணிப்பாளர் திருமதி செ.மகாலிங்கம், பாடசாலை அதிபர் திருமதி அ.சண்முகானந்தன், யாழ்.கல்விக்கோட்ட உதவிக் கல்விப் பணிப்பாளர் ஆ.இராஜகோபால் ஆகியோர் அமர்ந்துள்ளனர். (ம-7-51)



யாழ்.மத்திய கல்லூரியில் மாணவர் தலைவர்களுக்கான சின்னம் சூட்டும் வைபவம் அண்மையில் நடைபெற்றது.

சின்னஞ் சூட்டப்பட்ட மாணவர் தலைவர் ஒருவர் சிரேஷ்ட மாணவர் தலைவரின் முன் கல்லூரிக் கொடிக்கு மேல் சத்தியப்பிரமாணம் செய்து கொள்வதைப் படத்தில் காணலாம். (ம-7)



யாழ்.ஹற்றன் நஷனல் வங்கியின் ஆதரவுடன் அமைக்கப்பட்ட "முகப்பு பெயர் வளைவு" ஒன்று அண்மையில் ஆனைப்பந்தி மெ.மிஷன் பாடசாலையில் திறந்து வைக்கப்பட்டது.

பெயர் வளைவைத் திறந்து வைத்த பின்னர் நஷனல் வங்கியின் யாழ்.கிளை முகாமையாளர் அ.கி.எட்வேட் அதனைப் பார்வையிடுவதைப் படத்தில் காணலாம். அருகில் அதிபர் எஸ்.சோமேஸ்வரப்பிள்ளை காணப்படுகின்றார். (ம-7-51)



யாழ்.சென்ஜேம்ஸ் மகளிர் பாடசாலையின் முத்தமிழ் விழா அண்மையில் நடைபெற்றது.

முத்தமிழ் விழாவில் ஓர் அங்கமாக நடைபெற்ற இசை நிகழ்வு ஒன்றில் மாணவிகள் கலந்து கொண்டதைப் படத்தில் காணலாம். (ம-7)

# நாவற்குழிப் பகுதி வீட்டுக் கதவுகள் கைதடியில் மலிவு விலையில் விற்பனை

## தொடரும் திருட்டுக்களால் மக்கள் பாதிப்பு

யாழ்ப்பாணம்,ஜூலை6

நாவற்குழிப் பகுதியில் ஆள்களில்லாத வீடுகளின் ஓடுகள் மற்றும் கதவுகள் கழற்றப்பட்டு கைதடியில் மலிவு விலையில் விற்பனை செய்யப்பட்டு வருவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இப்பகுதி மக்கள் அடிக்கடி தமது வீடுகளைப் பார்வையிட்டு வருகின்ற போதும் வீட்டுச் சொந்தக்காரார் இல்லாத நேரங்களிலே இத்திருட்டு இடம்பெற்று வருவதாகக் கூறப்படுகிறது.

கைதடி நாவற்குழிப் பகுதிகளில் இராணுவத்தினர் கூடுதலாகக் குவிக்கப்பட்டுள்ள போதிலும் இராணுவத்தின் கண்களில் மண்ணைத் தூவி விட்டு ஓடுகள், கதவுகள் திருட்டு தொடர்ந்து இடம்பெற்று வருகின்றன. இதனால் இப்பகுதி மக்கள் என்ன செய்வது என்று தெரியாத நிலையில் அவதிப்படுகின்றனர்.

நாவற்குழிப் பகுதி மக்கள் தமது சொந்த இடங்களுக்குச் செல்வதற்கு அனுமதிப்பதற்கு முன்னரே இங்குள்ள வீடுகளுக்குச் திருட்டுத்தனமாகச் சென்றவர்கள் அங்கு இருந்த வீட்டுத் தளபாடங்கள் உட்பட பல பொருள்களையும் திருடிச் சென்றிருந்தமை தெரிந்ததே.

தற்பொழுது இப்பகுதிக்குச் செலவதற்கு மக்கள் அனுமதிக் கப்பட்ட நிலையில் ஆள்களில்லாத நேரங்களில் செல்பவர்களே இத்தகைய திருட்டுக்களில் ஈடுபட்டு வருவதாகத் தெரிவிக்கப்படுகிறது. (க-5)

# இராணுவ லான்ஸ் கோப்ரல் அதிகாரியால் சுட்டுக்கொலை

மிருசுவில் வடக்கு மருதங்குளம் இராணுவ முகாமில் கடந்த சனிக் கிழமை இடம்பெற்ற வாக்குவாதம் ஒன்றையடுத்து லான்ஸ் கோப்ரல் சொய்ஸா என்ற படை அதிகாரி மற்றொரு அதிகாரியால் சுட்டுக் கொல்லப்பட்டார் எனத் தெரிவிக்கப் படுகின்றது.

முகாமிலிருந்த சிற்றுண்டிச் சாலை சொய்ஸாவின் பொறுப்பில் இருந்ததாகவும் -

அங்கு பொருள் குறைவு ஏற்பட்டதாகக் கூறப்படுவது குறித்து மற்றொரு அதிகாரியுடன் அவர் வாக்கு வாதத்தில் ஈடுபட்டதாகவும் -

அப்போது சொய்ஸா சுடப்பட்டு இறந்ததாகவும் தெரிவிக்கப்பட்டது.

இந்தச் சம்பவம் தொடர்பாக அங்கு சென்று விசாரணைகளை மேற்கொண்ட சாவகச்சேரி நீதிவான் பிரேம்சங்கர், சடலத்தைச் சொய்ஸாவின் சொந்து ஊரான அம்பலாங் கொடைக்கு அனுப்பவும் பிரேத பரிசோதனையை கொழும்பில் மேற் கொள்ளவும் அனுமதியளித்தார். (உ-117)


# நன்றி நவில்கின்றோம்

## அமரர் இராமலிங்கம் வேலாயுதர்

(ஓய்வு பெற்ற அதிபரும், முன்னாள் கைதடி, நாவற்குழி கிராமசபைத் தலைவரும்)

எமது குடும்பத்தின் ஒளிவிளக்காக இருந்து 01-07-2001ஆம் திகதி அமரத்துவம் அடைந்த அமரர் இராமலிங்கம் வேலாயுதர் அவர்களின் இறுதிக்கிரியைகளின் போது கலந்துகொண்ட எமது தந்தையாரின் உற்றார், உறவினர்கள், நண்பர்கள், அஞ்சலி நிகழ்வில் அஞ்சலி உரைநிகழ்த்தியவர்கள், துண்டுப் பிரசுரம் மூலம், பத்திரிகை மூலம், தொலைபேசி மூலம், தந்தி மூலம் அனுதாபம் தெரிவித்தவர்கள், கைதடி வடக்கு சனசமூக நிலையத்தின் சார்பில் நிலைய மண்டபத்தில் இடம்பெற்ற நிகழ்வுக்கு உதவிய நிர்வாக சபை, அங்கத்தவர்கள், எமது துயரில் பங்கு கொண்ட பிராந்திய ஆணையாளர் அலுவலகம் (வ.கி.மாகாணம்), பிரதேச செயலகங்கள், வலயக்கல்வி அலுவலகங்கள் என்பனவற்றின் உத்தியோகத்தர்கள், பாடசாலை அதிபர்கள், ஆசிரியர்கள், நோயுற்ற வேளையில் வைத்திய உதவ வழங்கிய யாழ். போதனா வைத்தியசாலையின் வைத்தியர்கள், தாதிகள், உத்தியோகத்தர்கள் யாபேருக்கும் எமது குடும்பத்தின் சார்பில் எங்கள் மனமுவந்த நன்றிகள்.

*'மலரகம்'*
*கைதடி மத்தி, கைதடி.* (89788) - குடும்பத்தினர்.



# யாழ்நகர் மைய றோட்டறக்ட் கழகம்

நடத்தும்

**A/L 2001**

கணித, விஞ்ஞான
மாணவர்களுக்கான பரீட்சை
முன்னோடிக் கருத்தரங்கு

| | | | |
|---|---|---|---|
| முதல்நாள் | - 07-07-2001 | சனிக்கிழமை | |
| மு.ப. 9.00-10.30 | - | உயிரியல் | - V.S. குணசீலன். |
| | - | இணைந்தகணிதம் | - P. குணம |
| மு.ப. 10.30-12.00 | - | பௌதிகவியல் | - R. குமரன் |
| ந.ப. 12.30 -2.00 | - | இரசாயனவியல் | - K.சிவத்திரன |
| பி.ப 2.00-4.30 | - | இரசாயனவியல் | - ஆ.மகாதேவன |
| இரண்டாம் நாள் | - 08-07-2001 | ஞாயிற்றுக்கிழமை | |
| மு.ப. 9.00-10.30 | - | உயிரியல் | - T.கெங்காதரன் |
| | - | இணைந்த கணிதம் | - A.பத்மநாதன் |
| மு.ப. 10.30-12.00 | - | பௌதிகவியல் | - S.சோதிலிங்கம் |
| ந.ப. 12.30-4.00 | - | இரசாயனவியல் | - N.மகேஸ்வரன் |

*இடம்:-* யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி

*குறிப்பு.*
- ★ கையேடுகள் வழங்கப்படும்
- ★ பரீட்சையில் எதிர்பார்க்கப்படும் வினாக்கள்!
- ★ மேற்படி பாடம் தொடர்பான சகல சந்தேகங்களுக்கும் விடை அளிக்கப்படும்.

*அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.*

ROTARACT CLUB OF JAFFNA Mid-Town

ஏ.தனராஜ்
செயற்றிட்ட இயக்குநர்

(89786)


## முன்பள்ளிக்கு நாளை அடிக்கல் நடும் நிகழ்வு

சண்டிலிப்பாய்,ஜூலை6

இளவாலை காடிவளை இந்து இளைஞர் சனசமூக நிலையத்தின் முன்பள்ளி கட்டடத்திற்கான அடிக்கல் நடும் விழா நாளை சனிக்கிழமை நண்பகல் நடைபெறவுள்ளது.

நிலையத் தலைவர் செ.மாவிரதன தலைமையில் நடைபெறவுள்ள இவ் விழாவில் பிரதம அதிதியாக வலி. வடக்கு பிரதேச சபைத் தலைவர் திருமதி பாலாம்பிகை ஸ்ரீபாஸ்கரன் கலந்து கொண்டு சம்பிரதாய முறைப்படி அடிக்கல்லை நட்டு வைப்பார்.

வலி.வடக்கு பிரதேச சபை இந்த முன்பள்ளிக் கட்டத்தை நிறுவுவதற்கு ஒரு லட்சத்து 25 ஆயிரம் ரூபாவை ஒதுக்கீடு செய்துள்ளது. (க-135)

## பதவியுயர்வு

தென்மராட்சி,ஜூலை6

வடமராட்சி கல்விவலயப் பாடசாலைகளில் ஆசிரிய சேவை தரம் 2:2இல் கடமையாற்றிய 21 ஆசிரியர்களுக்கு தரம் Iக்கு பதவியுயர்வு வழங்கப்பட்டுள்ளது.

பதவி உயர்வு நியமனக் கடிதங்கள் வடக்கு கிழக்கு மாகாண கல்வி அமைச்சின் செயலாளரால் வலய அலுவலகத்திற்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளன. (க-117)

## நீதிமன்றப் பதிவாளர் அழைப்பு

மல்லாகம் மாவட்ட நீதிமன்றத்தில் பிணைப்பணம் செலுத்தி மீளப் பெறத் தவறிய மூவரை மல்லாகம் மாவட்ட நீதிமன்றப் பதிவாளர் தன்னுடன் தொடர்பு கொள்ளும்படி கேட்டுக்கொண்டுள்ளார்.

அந்த மூவரும் வருமாறு:- இராசேந்திரம் நவசீலன்-சுதுமலை தெற்கு. ஐயன் யோகநாதன்-வட்டுக் கோட்டை மேற்கு.மயில்வாகனம் அன்புமலர்-ஏழாலை வடக்கு.(க-86)

## விவசாயிகளுக்கு சுயதொழில் ஊக்குவிப்புக்கடன்

அகதிகளுக்கான ஐ.நா. தூதரகத்தின் சுழற்சி முறையிலான சுயதொழில் முயற்சிக் கடன் திட்டத்தின் கீழ் பண்ணாகம் பனிப்புலம் - சித்தன் கேணி விவசாயிகள் சம்மேளனத்தின் உறுப்பினர்களுக்கு சுயதொழில் ஊக்குவிப்புக்கடன் வழங்கப்படவுள்ளது.

சம்மேளனத்தின் உறுப்பினர்களான 50 விவசாயிகளுக்கு தலா 5 ஆயிரம் ரூபா வீதம் இக் கடனுதவி வழங்கப்படவுள்ளது. (க-135)

## சாவகச்சேரி மகளிர் கல்லூரி மாணவருக்கு!

சாவகச்சேரி மகளிர் கல்லூரியில் கல்வி கற்று தற்போது வேறு பாடசாலையில் கல்வி பயிலும் மாணவருக்கு பிறப்பு அத்தாட்சிப் பத்திரம் பெற்றுக் கொடுப்பதற்கான ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

மாணவரின் பெயர், பிறந்த திகதி, தற்போதைய முகவரி, தாய், தந்தை ஆகியோரின் முழுப் பெயர், பதிவுகாரர் பிரிவு ஆகிய விவரங்கள் தேவைப்படுவதால்-

வலிகாமம் பகுதியிலுள்ள மாணவர்கள் எதிர்வரும் 10ஆம், திகதி செவ்வாய்க்கிழமையும், 13ஆம் திகதி வெள்ளிக்கிழமையும் மருதனார்மடத்தில் உள்ள தென்மராட்சி வலய கல்வி உபஅலுவலகத்திலும்-

வடமராட்சிப் பகுதியில் உள்ள மாணவர்கள் கரவெட்டி ரலன்ற் கல்வி நிலையத்தில் எதிர்வரும் 13ஆம் திகதிக்கு முன்னர் அலுவலக நேரத்திலும் தகவல்களைப் பதிவு செய்யுமாறு அதிபர் அறிவித்துள்ளார். (க-117)

## பாம்பு தீண்டியவர் ஆபத்தான நிலையில் சிகிச்சைக்கு அனுமதி

கொடிகாமம் மீசாலை வடக்கில் நள்ளிரவு வேளையில் படுக்கையில் வைத்து பாம்பினால் கடியுண்ட இளைஞரை மந்திகை ஆஸ்பத்திரிக்கு ஏற்றிவர வாகனங்கள் கிடைக்காததால் அதிகாலை 5மணிக்கு ஆபத்தான நிலையில் ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்ட சம்பவம் வியாழக்கிழமை இடம்பெற்றது.

கொடிகாமம் மீசாலை வடக்கைச் சேர்ந்த கந்தையா சந்திரபாலன் (வயது26) என்னும் இளைஞரே பாம்பினால் கடியுண்ட நிலையில் அனுமதிக்கப்பட்டவராவார்.

மேலதிக சிகிச்சைக்காக இவர் யாழ். போதனா வைத்தியசாலைக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளார். (க-117)



வல்வெட்டித்துறை மாவட்ட வைத்தியசாலையில் ஆறாவது தடவையாக நடைபெற்ற இலவச கண்ணாடி வழங்கும் நிகழ்வில்- யாழ்.பல்கலைக்கழக பட்டப் படிப்புகள் பீடாதிபதி பேராசிரியர் அ.சண்முகதாஸ் விழாவினை ஆசீர்வதித்து பெண் ஒருவருக்கு முதல் கண்ணாடியை வழங்கிய காட்சி.

வல்வெட்டித்துறை மாவட்ட வைத்தியசாலைப் பொறுப்பதிகாரி கே.மயிலேறும்பெருமாளும் படத்தில் காணப்படுகிறார். (ஐ)


**A/L 2002** (ஒரு வருட மீட்டல் வகுப்பு)

அளவையியல் - சயந்தன

(பகுதி II)

ஆரம்பம்:- 07-07-2001 (சனி 3 மணி)

*புதிய உயர் கல்லூரி*

ஆரியகுளம் சந்தி. யாழ்ப்பாணம்.

(89777)



விற்பனையில் முன்னணியில் திகழும்

## கோபே (KOBE) அன்டனா பூஸ்டர்

*(மின்னல் பாதுகாப்புக் கொண்டது)*




*உங்கள் மனங்கவர்ந்த காட்சிகளை மிகத்தெளிவாக திரைகளில் பார்த்து மகிழுங்கள்*

கோபே என்று கேட்டு வாங்குங்கள்

போலிகளை கண்டு ஏமாறாதீர்!!!

**Nippon Television Cables**

Five Models

3C2V - 0.12 x 32 } 2 Types
3C2V - 0.12 x 48 }

5C2V - 0.12 x 48 }
5C2V - 0.12 x 64 } 3 Types
5C2V - 0.12 x 80 }

RG6U
RG58
RG213
(Communication Cables)

All T.V. Accessories Under One Roof

**LANKA NIPPON**

No.18, Keyzer St, Colombo-11. Tel:437735.
No.10, Trelawny Place, (Behind Milk Bar), BambalapitiyaJunc,Colombo-04. Tel:589992.

AVAILABLE ISLAND WIDE

நிப்பொன் உத்தரவாதமுள்ள தயாரிப்புக்கள்



# முதலாம் ஆண்டு நினைவஞ்சலி

மலர்வு 01 - 02 - 1924



உதிர்வு 17 - 06 - 2000

## அமரர் சதாசிவம் சிவப்பிரகாசம்

*திதி : 06.07.2001*

பாசத்தோடு எமை வளர்த்த
அன்புத் தெய்வமே! நீங்கள் ஒளியோடு
சேர்ந்த ஓராண்டில் உங்கள்
ஆத்மா சாந்தியடையப் பிரார்த்தித்து

உங்கள் நினைவில் வாழும்:
மக்கள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்.

*வேலணை மேற்கு,*
*வேலணை - 7.* (89705)

### விடுதலைப் புலிகளின் பெயரில்

# பிரிட்டிஷ் வங்கிகளில் பெருந்தொகைப் பணம்

கொழும்பு, ஜூலை 6

விடுதலைப் புலிகளின் பெயரில் பிரித்தானியாவிலுள்ள வங்கிகளில் 4 ஆயிரத்து 800 கோடி ரூபா (400 மில்லியன் பவுண்) வைப்பில் இடப்பட்டுள்ளதாகக்கொழும்பு சிங்கள வார இதழ் ஒன்று தெரிவித்துள்ளது.

விடுதலைப்புலிகள் அமைப்பு தடைசெய்யப்பட்ட அமைப்பு என அந்நாட்டு நாடாளுமன்றம் தீர்மானித்துள்ளதால் அந்த அமைப்பின் பெயரில் வங்கிகளில் வைப்பிலிடப்பட்டுள்ள பெருமளவு பணத்தை மீளப் பெறமுடியாத நிலை தோன்றியுள்ளதாகவும் —இந்தப் பணம் சட்டபூர்வமாக வைப்பிலிடப்பட்டது எனவும் — தெரிவிக்கப்படுகிறது.

இதைவிடப் பெருமளவு பணம் பிரித்தானிய வங்கிகளில் சட்டபூர்வமற்ற முறையில் வைப்பிலிடப்பட்டுள்ளதாக அரச புலனாய்வுத்துறையினருக்குத் தகவல்கள்கிடைத்துள்ளனவாம்.

இவற்றை விட அமெரிக்கா போன்ற நாடுகளில் உள்ள வங்கிகளில் விடுதலைப் புலிகள் பணத்தை வைப்பிலிட்டுள்ளனரா என்பது குறித்து விசாரணைகள் மேற்கொள்ளப்படுகின்றன.

பிரித்தானிய வங்கிகளில் வைப்பிலுள்ள பணத்தை மீளப்பெறுவதற்கு விடுதலைப் புலிகள் பலமுறை விண்ணப்பித்தனர் எனவும் எதிர்வரும் செப்டம்பர் மாதம் அதுபற்றி மீள்பரிசீலனை செய்யப்படவுள்ளது எனவும் தெரிவிக்கப்படுகிறது.

வங்கிகளில் வைப்பிலிடப்பட்டுள்ள இந்தப்பணம் மீளப் பெறப்படுமேயானால் விடுதலைப்புலிகள் அந்தப் பணத்தைப் பயன்படுத்தி விரைவில் நவீன ஆயுதங்களைக் கொள்வனவு செய்து படையினர் மீது பாரிய தாக்குதல்களை மேற்கொள்ள வாய்ப்புக்கள் உள்ளன என அந்தப் பத்திரிகை மேலும் தெரிவித்துள்ளது. (ஐ)

# 'பக்கெற்'றில் அடைக்கப்பட்ட பால் மீண்டும் விற்பனைக்கு

யாழ்ப்பாணம், ஜூலை 6

யாழ்.மாவட்ட அபிவிருத்தி கூட்டுறவுச் சங்கத்தினால் 'பக்கெற்'றில் அடைக்கப்பட்ட பால் விற்பனைக்கு விடப்படவுள்ளது.

இதற்கான ஏற்பாடுகள் துரிதமாக நடைபெற்று வருவதாக சங்க வட்டாரங்கள் தெரிவித்தன.

இதேவேளை—

சங்கத்தினால் உடற்பத்தி செய்யப்பட்டு இடை நிறுத்தப்பட்ட கோழித்தீன் உற்பத்தியும் விரைவில் ஆரம்பிக்கப்படவுள்ளது. (ஐ—5)

### முறைப்பாடுகளைத் தெரிவிக்க

# விமானப் பயணிகளுக்கு விசேட கருமபீடம்

யாழ்ப்பாணம், ஜூலை 6

கொழும்பில் இருந்து யாழ்ப்பாணத்துக்கு விமானம் மூலம் செல்லும் பயணிகள் எதிர்நோக்கும் பிரச்சினைகளுக்குத் தீர்வுகாண விசேட கருமபீடம் ஒன்று இனவிவகார தேசிய நல்லிணக்க அமைச்சு அலுவலகத்தில் இயங்கவிருக்கின்றது.

விமானப் பயணிகள் பயண அனுமதி பெறல், பயணச்சீட்டுக் கொள்வனவு ஆகியவற்றில் எதிர்கொள்ளும் பிரச்சினைகளுக்குத் தீர்வு காண்பதற்காகவே இந்தக் கருமபீடம் அமைக்கப்படவிருக்கின்றது.

பயணிகள் எதிர்நோக்கும் பிரச்சினைகள் குறித்து இனவிவகார தேசிய நல்லிணக்க அமைச்சர் அத்தாவுட செனவிரத்னவுடன் ஐ.தே. கட்சியின் யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் தி. மகேஸ்வரன் அண்மையில் பேச்சு நடத்தினார். அதைத் தொடர்ந்து இந்தக் கருமபீடம் அமைக்கப்படவிருக்கின்றது.

கொள்ளுப்பிட்டியில் உள்ள அமைச்சு அலுவலகத்தில் இந்தக் கருமபீடம் இயங்கும். (ஐ—3)

## பரிசளிப்பு விழா

தென்மராட்சி, ஜூலை 6

புலோலி புற்றளை மகா வித்தியாலய வருடாந்த பரிசில் நாள் விழா நாளை சனிக்கிழமை காலை 9. 45 மணிக்கு வித்தியாலய மண்டபத்தில் அதிபர் திருமதி ச. இந்திரராஜா தலைமையில் நடைபெறும்.

விழாவுக்கு பிரதம விருந்தினராக யாழ். மாவட்ட மேலதிக அரசாங்க அதிபரான து. வைத்திலிங்கம் கலந்து கொள்வார். மாணவர்களுக்கு பரிசில்களை திருமதி ஜெகதீஸ்வரி வைத்திலிங்கம் வழங்குவார்.

(க—117)

## கொழும்பில் ஆர்ப்பாட்டம்

கொழும்பு, ஜூலை 6

அரசுக்கு ஆதரவு தெரிவிக்கும் வகையில் நேற்று முந்திய நண்பகல் கொழும்பு லிப்டன் சதுக்கத்தில் ஆர்ப்பாட்டம் ஒன்று நடத்தப்பட்டது.

அரச சார்புத் தொழிற் சங்கங்களைச் சேர்ந்த சுமார் 5 ஆயிரம் பேர் இந்த ஆர்ப்பாட்டத்தில் கலந்து கொண்டனர்.

விடுதலைப்புலிகளுக்கும் ஐ. தே. கட்சிக்கும் எதிரான சுலோகங்கள் அடங்கிய பதாதைகளை ஆர்ப்பாட்டக்காரர்கள் தாங்கியிருந்தனர். (க-7)

## காலமானார்

யாழ்ப்பாணம், ஜூலை 6

திருக்குடும்ப சகோதரிகளின் மேன்நிலை முதல்வர் அருட்செல்வி ஜோய்சிமித் கடந்த 4 ஆம் திகதி உரோமாபுரியில் காலமானார்.

தென்னாபிரிக்காவில் 1943 ஆம் ஆண்டில் பிறந்த இவர் 1962 ஆம் ஆண்டில் திருக்குடும்ப துறவற சபையில் இணைந்து கொண்டார். 1981 ஆம் ஆண்டு தொடக்கம் திருக்குடும்ப சபையின் மேன்நிலை முதல்வர் குழுவில் ஆலோசகராகவும் முதல்வராகவும் இவர் பணியாற்றி வந்தார்.

இவரது நல்லடக்க வழிபாடும், நல்லடக்கமும் இன்று வெள்ளிக்கிழமை ரோமாபுரியில் நடைபெறவுள்ளன.

அருட் சகோதரி ஜோய் சிமித்தின் ஆன்ம இளைப்பாற்றிக்கான இரங்கல் திருப்பலி நாளை சனிக்கிழமை பிற்பகல் 4 மணிக்கு யாழ். திருக்குடும்ப கன்னியர் மட ஆலயத்தில் ஒப்புக் கொடுக்கப்படும்.

(ஐ-6)

# பாளை சீவும் கத்தியினால் கழுத்தைவெட்டக்கண்டேன்!

## புத்தூர் கொலைச் சம்பவம் குறித்து சாட்சியம்

யாழ்ப்பாணம், ஜூலை 6

இறந்தவர் தன்னை ஒன்றும் செய்ய வேண்டாம் என்று இரு கைகளையும் கூப்பிக் கும்பிட்டு கெஞ்சிக்கொண்டிருந்த பொழுது பாளை சீவும் கத்தியினால் அவரது கழுத்து வெட்டப்பட்டு துடிதுடித்து நிலத்தில் வீழ்ந்தார்.

இவ்வாறு புத்தூர் கிழக்கில் கடந்த 27 ஆம் திகதி கசிப்பு உற்பத்தி விவகாரம் தொடர்பாக ஏற்பட்ட பிரச்சினையின் போது கொலை செய்யப்பட்ட இராஜரட்ணம் உதயகரன் என்பவரின் மரண விசாரணையில் சாட்சியமளித்த தர்மகுலசிங்கம் தயாபரன் என்ற மாணவன் தெரிவித்தார்.

மல்லாகம் மாவட்ட நீதிமன்ற நீதிபதி பா. சுப்பிரமணியம் முன்னிலையில் நடைபெற்ற இந்த மரண விசாரணையில் அவர் மேலும் சாட்சியமளிக்கையில் கூறியதாவது:

சம்பவம் நடைபெற்ற இடத்தில பூதன் முருகானந்தன், பூதன் இராமச்சந்திரம், சுந்தரம் சந்திரன் ஆகியோருக்கும் செந்தில்வேல் செல்வரஞ்சன், கந்தசாமி தீபன், தர்மலிங்கம் சுதன், யோகன் சுதாகர் ஆகியோருக்கும் இடையில் சச்சரவு நடைபெற்றுக் கொண்டிருந்தது.

அப்பொழுது எங்கள் வளவில் கள்ளுச் சீவிக் கொண்டு வந்த பூதன் மகேந்திரன் என்பவரின் பாளை சீவும் கத்தியை வாங்கிக் கொண்டு ஓடிய பூதன் முருகானந்தன் சண்டை நடந்த இடத்தில் நின்ற இராஜரட்ணம் உதயகரன் என்பவரின் தலைமயிரில் பிடித்து கழுத்தில் கத்தியால் வெட்டினார்.

கத்தியுடன் சென்ற முருகானந்தத்தை பார்த்து இறந்தவர் தன்னை ஒன்றும் செய்ய வேண்டாம் என்று கூறியபோதும் அவர் வெட்டிக்கொல்லப்பட்டார்.

கத்திவெட்டு விழுந்த 2—3 நிமிடங்களில் சம்பவ இடத்துக்கு அருகில் இருந்த கடைதீ மூட்டி எரிக்கப்பட்டது. இக் கடையை யார் எரித்தார்கள் என்பது பற்றிய விவரம் எதுவும் எனக்குத் தெரியாது— என்று அவர் கூறினார்.

திருமதி தர்மகுலசிங்கம் நகுலேஸ்வரி (வயது 42) என்பவர் சாட்சியமளிக்கையில் கூறியதாவது:

நான் வீட்டில் இருக்கும் போது வெளியே கூக்குரல் சத்தங்கள் கேட்டன. அப்பொழுது எனது வீட்டில் முட்டியில் கள்ளு கொண்டு வந்து வைத்த பூதன் மகேந்திரனிடமிருந்து முருகானந்தன் கத்தியை வாங்கிச் செல்வதைக் கண்டேன்.

சம்பவ இடத்துக்குச் செல்ல வேண்டாம் என்று நான் தடுத்த பொழுது எனது சொல்லையும் மீறி 'ஒருவரை என்றாலும் வெட்டி வீழ்த்துவோம்' என்று கூறிக்கொண்டு இருவரும் ஓடிச்சென்றனர்.

ஐந்து நிமிடங்களின் பின்னர் எனது வீட்டுப்பக்கமாக மகேந்திரனும் முருகானந்தமும் விரைவாக ஓடி வந்தனர். முருகானந்தம் தன் கையில் வைத்திருந்த கத்தியை துடைத்துக் கொண்டு வந்தார். அந்தக் கத்தியில் இரத்தம் காணப்பட்டது. சிறிது நேரத்தில் வாயினால் இரத்தம் கட்டி கட்டியாகக் கொட்ட உதயகரனைக் கொண்டு வந்து காரில் ஏற்றியதைக் கண்டேன் — என்று கூறினார்.

திருமதி சிறீஸ்கந்தராசா இராசமலர் (வயது 32) என்பவர் தமது சாட்சியத்தின் போது கூறியதாவது:–

சம்பவ நேரம் நானும் எனது கணவரும் தோட்டத்துக்குச் செல்வதற்காக வீதிக்குச் சென்றோம். அப்பொழுது எங்களுக்கு எதிர்புறத்தில் கத்தியுடன் ஓடி வந்த மகேந்திரன் எனது கணவரை நிலத்தில் வீழ்த்தி அடித்ததுடன் கத்தியை ஓங்கிக்கொண்டு வந்தார்.

நான் அவரை நோக்கிக் கற்களை வீசினேன். அப்பொழுது அவர் திரும்பிச் சென்றுவிட்டார் — என்றும் அவர் கூறினார்.

அச்சுவேலி பொலீஸ் நிலையப் பொறுப்பதிகாரி தென்னக்கோன் சாட்சிகளை நீதிமன்றில் ஆஜர் செய்தார்.

(ஐ-5-86)

## அபிவிருத்திகூ.சங்க தலைவர் நியமனம்

யாழ்ப்பாணம், ஜூலை 6

யாழ் மாவட்ட அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கத்தின் தலைவராக யாழ். மேலதிக அரசாங்க அதிபர் து.வைத்திலிங்கம் கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளரினால் நியமனம் செய்யப்பட்டுள்ளார்,

கடந்த 3 ஆம் திகதி தொடக்கம் இந் நியமனம் வழங்கப்பட்டுள்ளது. (ஐ-5)

## தென்மராட்சி ஆரம்பக்கல்வி ஆசிரியருக்கு

தென்மராட்சி, ஜூலை, 6

தென்மராட்சி கல்வி வலயப் பாடசாலைகளினது ஆரம்பக்கல்வி ஆசிரியர்கள் குடும்பப் பாடசாலைகள் அமைப்பது தொடர்பான விவரங்கள் வலயக் கல்வி அலுவலகத்தினால் திரட்டப்படுகின்றன.

ஆரம்பக் கல்வி ஆசிரியர்கள் தமது விவரங்களை நாளை சனிக்கிழமை காலை 9.30 மணிக்கு வலயக் கல்வி அலுவலகத்திற்கு நேரில் வருகை தந்து பதிவு செய்யுமாறு வலயக் கல்விப் பணிப்பாளர் வ. செல்வராசா அறிவித்துள்ளார். (க—117)

## நடமாடும் சேவை ஒத்திவைப்பு

யாழ்ப்பாணம், ஜூலை 4

சமூக சேவைகள் அமைச்சினால் எதிர்வரும் 14 ஆம் திகதி யாழ்ப்பாணத்தில் நடத்தப்பட விருந்த நடமாடும் சேவை ஒத்திவைக்கப்பட்டிருப்பதாக அறிவிக்கப்பட்டிருக்கிறது.

இந்த நடமாடும் சேவை தொடர்பாக நாளை சனிக்கிழமை நடைபெறவிருந்த ஆரம்பக் கூட்டமும் ஒத்திவைக்கப்பட்டிருப்பதாக யாழ் செயலக அதிகாரி ஒருவர் தெரிவித்தார். ஐ()

## 'தாயகம்' வெளியீட்டு விழா

யாழ்ப்பாணம், ஜூலை 6

புத்தூர் தாயகம் வாசகர் வட்டத்தினரின் கலை இலக்கிய சஞ்சிகையான 'தாயகம்' நூல் வெளியீட்டு விழா நாளை சனிக்கிழமை காலை 9–30 மணிக்குப் புத்தூர் ஸ்ரீ சோமஸ்கந்தக் கல்லூரி மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

சட்டத்தரணி சி.சிவநேசன் தலைமையில் நடைபெறவுள்ள இந்த வெளியீட்டு விழாவில் கவிஞர் இ. முருகையன், வர்த்தகபீட விரிவுரையாளர் க. வேம்நம்பி, சட்டத்தரணி சோ. தேவராசா, இளைப்பாறிய ஆசிரியர் வே. இளையகுட்டி ஆகியோர் கருத்துரை வழங்குவர்.

'தாயகம்' சஞ்சிகையின் ஆசிரியர் க. தணிகாசலம் ஏற்புரை நிகழ்த்துவார். இந்த நிகழ்வில் கலை இலக்கிய ஆர்வலர்கள் அனைவரையும் கலந்து சிறப்பிக்குமாறு 'தாயகம்' வாசகர் வட்டம் அழைப்பு விடுத்துள்ளது.

(ஐ—6)

## கல்விப் பூங்கா விளையாட்டு போட்டி

யாழ்ப்பாணம், ஜூலை 6

சுன்னாகம் மயிலணி வடக்கு ஜனசக்தி மழலைகள் கல்விப் பூங்கா 53 ஆவது வருடாந்த விளையாட்டுப் போட்டி நாளை சனிக்கிழமை பிற்பகல் ஒரு மணி முதல் சனசமூக நிலையத் தலைவர் சி. தர்மலிங்கம் தலைமையில் நடைபெறும்.

பிரதம விருந்தினராக ஈ. பி. டி. பியின் சுன்னாகம் அமைப்பாளரும் உடுவில் பிரதேச சபைத் தலைவருமான எஸ். கமலசேகரன் கலந்துகொள்வார்.

விளையாட்டின் இறுதியில் வெற்றி பெற்றவர்களுக்கான பரிசில்கள் வழங்கப்படும்.

(ஐ—15)

## சமய சந்நிதிகளில்

நீர்வேலி மேற்கு மாலை வைரவர் தேவஸ்தான வருடாந்தப் பொங்கல் இன்று பிற்பகல் 4 மணி முதல் நாளை நண்பகல் 12 மணி வரை நடைபெறவிருக்கின்றது. 3)

★ ★ ★

''கொக்குவில் கிழக்கு கோணாவளை வைரவர்', சுவாமி கோவில் வருடாந்த ஆனிப் பொங்கல் விழா இன்று வெள்ளிக்கிழமை சிறப்பாக நடைபெறவுள்ளது. பிற்பகல் 2.30 மணியளவில் விசேட அபிஷேகத்துடன் பொங்கல் விழா ஆரம்பமாகி இரவு 7 மணியளவில் நிறைவுபெறும். (க)

★ ★ ★

சுழிபுரம், ஜூலை 6

சுழிபுரம் மேற்கு கறுத்தனா தோட்ட துர்க்கை அம்பாள் ஆலய மகா கும்பாபிஷேகம் நாளை மறுதினம் ஞாயிற்றுக்கிழமை காலை நடைபெறவுள்ளது. (க—28)

## கம்பங்கள் நட்டு நீண்டகாலமாகியும் மின்வசதி இல்லை

வலி.மேற்கு, ஜூலை 6

அராலி தெற்கு அராலி கிழக்கு ஆகிய இடங்களில் மின் கம்பங்கள் நடப்பட்டு நீண்ட காலமாகியும் மின்சாரம் வழங்கப்படவில்லை என இப்பகுதி மக்கள் விசனம் தெரிவிக்கின்றனர்.

மின்கம்பங்கள் நடப்பட்டதும் மின்சாரம் கிடைக்கும் என்ற நம்பிக்கையில் தமது வீடுகளுக்கு மின்சார இணைப்புக்கான வேலைகளை பூர்த்தி செய்துவிட்டு காத்திருப்பதாக இப்பகுதி மக்கள் தெரிவித்தனர். இப்பகுதிக்கான மின்சார விநியோகத்தை வழங்க போதிய நிதி வசதியின்மையே காரணம் என்று மின்சார சபை வட்டாரங்களில் இருந்து தெரியவருகின்றது.

(க—175)

# சின்னஞ்சிறு விளம்பரம்

## தவறிவிட்டது

பெரியார் பகுதி, அல்வாய் எனும முகவரியைச் சேர்ந்த கணேசமூர்த்தி ஜெயகாந்தன் என்பவருடைய தே.அ.அ. (இல.770974070V), விசேட அ.அ. (இல.090908669), பல்கலைக் கழக அடையாள அட்டை என்பன நெல்லியடிக்கும் பருத்தித்துறை நகரப் பகுதிக்குமிடையில் தவறிவிட்டன. கண்டெடுத்தவர்கள் நெல்லியடி மொடேர்ண் ஸ்ரோர்ஸில் ஒப்படைக்கவும்.சன்மானம் வழங்கப்படும். (89727)

யாழ்.பல்கலைக்கழக 4ஆம் வருட வணிகத்துறை மாணவி ஜமேலா வேல்சாமி என்பவருடைய கைச்சங்கிலி 23.06.2001 அன்று குளப்பிட்டி வீதிக்கும் திருநெல்வேலிக்கும் இடையில் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் ஜீவன் உணவகம், குளப்பிட்டிச்சந்தி, கொக்குவில் என்ற முகவரியில் ஒப்படைக்கவும். தகுந்த சன்மானம் வழங்கப்படும். (89783)

புகையிரத விடுதி, ஸ்ரான்லி வீதியைச் சேர்ந்த பத்தன் தவம் என்பவருடைய தே.அ.அ. (இல.590440442V), விசேட அ.அ., தொழில் அ.அ. என்பன கன்னாதிட்டிச் சந்திக்கும் யாழ். பஸ் நிலையப் பகுதிக்குமிடையில் தவறிவிட்டன. கண்டெடுத்தவர்கள் யாழ். பஸ்நிலையத்தில் ஒப்படைக்கவும். (89772)

இரத்தினம் ஸ்ரீ பவான் (பாபு) என்பவரது தே.அ.அ.யும், வி.அ.அ (இல. 0903010418)யும் 3-7-2001 அன்று புத்தூருக்கும் சிறுப்பிட்டிக்கும் இடையில் தவறிவிட்டன. கண்டெடுத்தவர்கள் தயவுசெய்து 123, செபமாலை கன்னியர்மடம், யாழ்ப்பாணம் விலாசத்தில் ஒப்படைத்து உதவவும்.(89778)

றூபி ரட்ணபதி செல்லத்துரை என்பவரது தேசிய அடையாள அட்டை (இல.396650320V) யாழ். ஆஸ்பத்திரி வீதியில் கடந்த புதன் கிழமை தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் தயவுசெய்து யாழ்.றிக்கோ ஹோட்டலில் ஒப்படைத்து உதவவும் (பெயர் சிங்களத்தில் எழுதப்பட்டுள்ளது). (89792)

மிதிலை ஆனைக்கோட்டை என்ற முகவரியைச் சேர்ந்த சந்திரகுமார் சுஜன் (யாழ்.இந்துக்கல்லூரி மாணவன்) என்பவருடைய விசேட அ.அ. (இல.905029008) பருத்தித்துறைக்கான 750 பாதை இலக்கமுடைய பஸ்வண்டியில் 01-07-2001இல் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் யாழ். இந்துக்கல்லூரியில் ஒப்படைத்துதவுமாறு தயவாகக் கேட்டுக்கொள்கின்றேன். (89793)

திருமதி மாணிக்கம் வீரவாகு என்பவருடைய தேசிய அ.அ. (இல. 426830175V), விசேட அ.அ. (இல. 0905019490) ஆகியன நயினாதீவு நாகபூஷணி அம்பாள் ஆலயப் பகுதியில் தவறிவிட்டன. கண்டெடுத்தவர்கள் க.செல்வராஜா காட்டுப்புலம், அளவெட்டி மேற்கு என்ற முகவரியில் ஒப்படைத்துதவவும். சன்மானம் வழங்கப்படும். (89794)

## நாடகவிழா

வர இருக்கும் இலங்கை வானொலி நாடக விழாவில் 230 நாடகங்கள் எழுதிய அராலியூர் ந.சுந்தரம்பிள்ளையின் "பிறந்த மண்" நாடகம் மேடை ஏறுகின்றது. அஞ்சல் செய்வார்கள், கேட்டு மகிழுங்கள். (89762)

## தோட்டக்காணி விற்பனைக்கு

சுமார் 50 பரப்பு தோட்ட நிலம் நவக்கிரி, புத்தூர் வீதியில், நவக்கிரியில் விற்பனைக்கு உண்டு. தொடர்பு:- விளம்பர இல. 1317, மே/பா, உதயன். (89681)

## வணிகக் கல்வி A/L

வணிகக் கல்விக்கான பகுதி II முழுப்பாடத்திட்டமும், பாகம் 1, பாகம் II என இரு பகுதியாக வெளியிடப்பட்டுள்ளன. புத்தகசாலைகளில் பெற்றுக்கொள்ளலாம். இ.இரட்ணம், சிரேஷ்ட விரிவுரையாளர், யாழ். பல்கலைக்கழகம். (89768)

## விற்பனைக்கு

பாவனையிலுள்ள யன்மார் ஜெனரேற்றர் 3K.W விற்பனைக்கு அல்லது 5K.W லீஸ்ரர் ஜெனரேற்றருக்கு மாற்றுவதற்கு உண்டு. தொடர்பு:- N.T. இரவீந்திரராசா, இல.109, பலாலி ரோட், தபால்பெட்டிச் சந்தி, திருநெல்வேலி. (89739)

Cake Beater, Mini, (Kenwood) Electric Kettle, (English Make), Blender (Moulenex) விற்பனைக்குண்டு. தொடர்பு:- இல. 320, பலாலி றோட், கந்தர்மடம், யாழ்ப்பாணம். (89729)

8 அடி ஒறிஜினல் டிஸ் அன்ரனா அல்பா கோல்ட் ரிசீவருடன் விற்பனைக்கு உண்டு. தொடர்பு:- 305, பலாலி வீதி, பரமேஸ்வராச்சந்தி, திருநெல்வேலி. (89748)

வீட்டுத் தளபாடங்கள், ஐசிங் பொருள்கள், Hair Style பொருள்கள், விற்பனைக்குண்டு. தொடர்பு: 55, சிவன் புது வீதி, நல்லூர். (89765)

## படிவம்

க.பொ.த.(சா/த) பரீட்சை விண்ணப்பப்படிவம் விற்பனையாகின்றது. முடிவு திகதி: 31-07-2001. பாரதி, 430, காங்கேசன்துறை வீதி, யாழ்ப்பாணம். தொலைபேசி :- 3081. (C/17314)

## நாய்களைப் பிடிக்க, நடவடிக்கை

பருத்தித்துறை,ஜூலை6

பருத்தித்துறை நகரசபை எல்லைக்குட்பட்ட பகுதிகளில் கட்டாக்காலியாகத் திரியும் நாய்களைப் பிடித்து நஞ்சூட்டி அழிக்கும் பணிகள் எதிர்வரும் 11 ஆம் திகதியும் 25ஆம் திகதியும் மேற்கொள்ளப்படவுள்ளதால் அன்றைய தினம் வளர்ப்பு நாய்களைக் கட்டி வைக்குமாறு நகர சபை உபதலைவர் நா.மணிவண்ணன் அறிவித்துள்ளார். (க-117)


# பாராட்டி வாழ்த்துகின்றோம்

சாவல்கட்டு முருகமூர்த்தி விநாயகர் ஆலய புனரமைப்பு திருப்பணி வேலைகளுக்கு ரூபா இரண்டு இலட்சத்தை ஒதுக்கீடு செய்தமைக்கு



வடக்கு அபிவிருத்தி, புனர்வாழ்வு, புனரமைப்பு மற்றும் வடக்கு கிழக்கு தமிழ்மொழி விவகாரங்கள் அமுலாக்கல், இந்து கலாசார அமைச்சரும் ஈழ மக்கள் ஜனநாயகக்கட்சியின் செயலாளர் நாயகமுமான

மாண்புமிகு கௌரவ அமைச்சர்

கே.என்.டக்ளஸ் தேவானந்தா

அவர்களையும்



கௌரவ

வெலிச்சோர் அன்ரன் ஜோண்சன்

(மானிப்பாய்த் தொகுதி அமைப்பாளரும், வலி. தென்மேற்குப் பிரதேச சபைத் தலைவரும், இந்து மகாசங்கப்போஷகரும் (J.P.U.M)

அவர்களையும்

நன்றியுடன் பாராட்டி வாழ்த்துகின்றோம்.

நன்றியுடன்
சாவல்கட்டு முருகமூர்த்தி விநாயகர் ஆலய பரிபாலனசபை.

சாவல்கட்டு, ஆனைக்கோட்டை.
(89795)


## தாக்கப்பட்டார்

கரவெட்டிப் பகுதியில் கடந்த வருடம் சந்தைக் குத்தகைக்காரர் கொலை செய்யப்பட்டது தொடர்பாக சந்தேகத்தின் பேரில் கைது செய்யப்பட்டு பிணையில் விடுவிக்கப்பட்ட இளைஞர் -

நேற்று முன்தினம் தச்சன்தோப்பு பிள்ளையார் ஆலய தேர்த்திருவிழாவுக்குச் சென்றுவிட்டுத் திரும்பும் வழியில் இப்பகுதியைச் சேர்ந்த நான்கு இளைஞர்கள் அவரை வழிமறித்து அங்கிருந்த வீடொன்றுக்கு இழுத்துச் சென்று கண்களைக் கட்டி மோசமாகத் தாக்கியதாகக் கூறப்படும் சம்பவம் இடம்பெற்றுள்ளது.

சம்பவத்தில் தாக்குதலுக்கு உள்ளான கரணவாய் மேற்கு தட்டான் தோட்டத்தைச் சேர்ந்த நாகராசா விமலநாதன் (வயது 18) என்னும் இளைஞர் மந்திகை ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளார். (க-117)

## வீதிப்புனரமைப்புப் பணிகள் துரிதம்

பண்ணாகம், விசவத்தனை வீதியைச் செப்பனிட்டுத் தார் ஊற்றி நவீன வீதியாக்கும் வேலைகள் மும்முரமாக நடைபெற்றுவருகின்றன.(க-28)

## தமிழ் நாடாளுமன்ற உறுப்பினர்கள்

# அவசரகாலச் சட்டத்தை ஆதரிப்பது இனத்தையே அழிக்கும் செயலாகும்

## மறுமலர்ச்சிக் கழகம் அறிக்கை

மட்டக்களப்பு,ஜூலை6

தமிழ் நாடாளுமன்ற பிரதிநிதிகள் அவசரகாலச் சட்ட நீடிப்புக்கு ஆதரவாக வாக்களிப்பது என்பது தன் இனத்தையே அழிக்கும் 'கோடரிக் காம்பு' அரசியலாகும். சமூக இயங்கியலை பின்நோக்கி சுழற்ற முயல்பவர்கள் என்றும் வென்றதில்லை என தமிழர் மறுமலர்ச்சிக்கழகம் வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவித்துள்ளது.

தமிழ் மக்களுக்கும் தமிழ் நாடாளுமன்றப் பிரதிநிதிகளுக்கும் பகிரங்க வேண்டுகோள் என்ற தலைப்பில் தமிழர் மறுமலர்ச்சிக்கழகம் இந்த அறிக்கையை விடுத்துள்ளது.

தமிழர்கள் மனங்களில் நீங்காத வடுக்களை ஏற்படுத்திய ஜூலை முக்கிய நிகழ்வுகளோடு மீண்டும் வருகிறது. தமிழர்களுக்கு வேலை வாய்ப்பு என்ற பசப்பு வார்த்தை கூறி நாடாளுமன்றம் சென்ற தமிழ்ப் பிரதிநிதிகள் என்ன செய்யப்போகிறார்கள்?

எதிர்த்து வாக்களிக்கலாம் அல்லது தமது அரச விசுவாசம் குறைந்துவிடும் என்று அஞ்சினால் வாக்கெடுப்பில் கலந்துகொள்ளாது விடலாம். ஆனால் இனியும் ஆதரித்து வாக்களிப்பது என்பது தமது இனத்தையே அழிக்கும் செயலாகும்.

இந்த நாடாளுமன்றத்தின ஆரம்ப அமர்வில் அவசர காலச்சட்டத்தை எதிர்த்து வாக்களிக்குமாறு அனைத்து தமிழ் நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கும் தனித்தனியாகக் கடிதமூலம் தமிழர் மறுமலர்ச்சிக் கழகத்தினராகிய நாம் வேண்டுகோள் விடுத்தோம்.

இந்த ஆட்சியில் தொடர்கின்ற தமிழ் மக்கள் மீதான கண்மூடித்தனமான விமானக்குண்டு வீச்சுக்கள், இளைஞர் யுவதிகளின் வகைதொகையற்ற கைதுகள், தமிழ் மக்களைக் காட்டுமிராண்டித்தனமாகக் கொன்று புதைகுழிகளில் இடுதல், ஒரு பெண்ணை அமைச்சராகக் கொண்ட பாதுகாப்பு அமைச்சின் கீழ் இயங்கும் படையினரின் சதைப்பசிக்கு நூற்றுக் கணக்கான தமிழ்ப் பெண்களை இரையாக்குதல், தமிழ்ப் பத்திரிகையாளர்கள் மீது பழிசுமத்தல்களும், படுகொலைகளும்-

இவற்றையெல்லாம் எதிர்த்து குரல் கொடுக்கும் தமிழ் நாடாளுமன்ற உறுப்பினர்கள், பல்கலைக்கழக சமூகத்தினர், பத்திரிகையாளர்களை புலிகளின் உளவாளிகள் என முத்திரை குத்துதல் போன்ற காடைத்தனங்களையும், அயோக்கியத்தனங்களையும் புரியும் அரசுக்கு அதன் நாசகார ஆயுதமான அவசரகாலச் சட்டத்திற்கும் வடகிழக்கு அபிவிருத்தி என்ற கடற்கரை மணல்வீடு கட்டி விளையாடும் தமிழர் பிரதிநிதிகள் இனியும் தொடர்ந்து ஆதரவளிக்க வேண்டுமா?

- இவ்வாறு அந்த அறிக்கையில் தெரிவிக்கப்படுகிறது. (க)

ஐ.தே.க. ஆட்சிக்கு வர உதவுவது நோக்கமல்ல

# ஆளும் கட்சியைத் தோற்கடிக்க ஜே.வி.பி. உறுதி பூண்டுள்ளது

## அவனும் இவனும் ஏற்றுத்தான் என்கிறார்; ரில்வின்

கொழும்பு,ஜூலை6

ஆளும் பொ.ஐ.முன்னணியைத் தோற்கடிப்பது என்று நாம் உறுதி பூண்டுள்ளோம் ஆனால், ஐ.தே.க. ஆட்சிக்கு வருவதற்கு உதவுவது என்பது எமது நோக்கமல்ல.

கொழும்பு ஹைட்பார்க் மைதானத்தில் கடந்த செவ்வாயன்று நடைபெற்ற பிரமாண்டமான, கூட்டத்தில் ம.வி.மு. பொதுச் செயலாளர் ரில்வின் சில்வா மேற்கண்டவாறு தெரிவித்தார்.

கடந்த பொதுத்தேர்தலில் நாம் "இவனும் ஒன்று, அவனும் ஒன்று" என்று மக்களிடம் தெரிவித்திருந்தோம். "இவனை விட அவன் நல்லவன்" என்று இன்று நாம் கூறவில்லை. சிக்கலில் மாட்டியிருக்கும் எவருக்காவது உதவி செய்ய வேண்டும் என்று நாம் அவசரப்பட முடியாது. இந்த இரண்டு கட்சிகளையும் தோற்கடிப்பதே எமது நீண்டகாலத் திட்டமாகும் என்று அவர் அங்கு பேசினார்.

நாம் பொ.ஐ.முன்னணிக்கும், ஐ.தே.கவுக்கும் நெருக்கடிகளை கொடுப்போம். அதனால் விளையும் பதற்ற நிலையை பயன்படுத்தி உச்சளவு ஜனநாயக உரிமைகளைப் பெறுவதற்கு முயல்வோம் என்றும் அவர் அங்கு தெரிவித்தார்.

நெருக்கடி நிலையிலிருந்து மீள்வதற்கு ம.வி.முன்னணியின் ஒத்துழைப்பு வேண்டுமாயின் ஐந்து சுதந்திர ஆணைக்குழுக்களை அமைக்குமாறு கேட்டு, அதற்கு ஒரு காலவரையறையையும் கொடுத்திருந்தோம் என்று பிரசாரச் செயலாளர் விமல் வீரவன்ச பேசும் போது தெரிவித்தார்.

அரசாங்கத்தின் தவறான நிலைப்பாடு, அதற்குள்ள கெட்ட பெயர் காரணமாக அவசர கால நீடிப்புப் பிரேரணை நிச்சயம் தோல்வியுறும் எனவும் வீரவன்ச சொன்னார்.

கூட்டத்தில் மற்றும் பலரும் உரையாற்றினர். (க)

## விவசாயக் கிணறுகளை புனரமைக்க 60 ஆயிரம் ரூபா

வலி.மேற்கு,ஜூலை6

வலிகாமம் மேற்குப் பிரதேச செயலர் பிரிவுக்குட்பட்ட மூன்று விவசாயக் கிணறுகளைப் புனரமைக்க 60 ஆயிரம் ரூபா நன்கொடையாக வழங்கப்படவுள்ளது.

எதிர்வரும் 14ஆம் திகதி நடைபெறவுள்ள சமூக சேவைத் திணைக்களத்தின் நடமாடும் செயலக சேவையின்போதே விவசாயக்கிணறு ஒன்றுக்கு நன்கொடையாக 20 ஆயிரம் ரூபா வழங்கப்படவுள்ளது.

சங்கானை, அராலி, வட்டுக்கோட்டைப் பகுதிகளில் இந்த விவசாயக் கிணறுகள் தெரிவு செய்யப்பட்டுள்ளன. (க-175)

## உடுவிலில் நூல் வெளியீட்டு விழா

உடுவில் ஸ்ரீ சொர்ணசித்தி பஞ்சமுக விநாயகர் அருட்பாமாலையும் அம்பாள் திருக்கதவு திறந்தருளப் பாடிய திருப்பதிகமும் வெளியீட்டு விழா நாளை மறுதினம் ஞாயிற்றுக் கிழமை மாலை 4மணிக்கு தேவஸ்தான மண்டபத்தில் நடைபெறும்.

சமூக ஜோதி கா.கணேசதாசன் தலைமையில் நடைபெற உள்ள இவ் விழாவில் செஞ்சொற்செல்வர் ஆறு. திருமுருகன் ஆசியுரை வழங்குவார். மகாவித்துவான் பிரம்ம ஸ்ரீ ந.வீரமணி ஐயர் வெளியீட்டுரை நிகழ்த்தி நூலாசிரியரைக் கௌரவிப்பார்.

ஆசிரியமணி எம்எஸ்ஸ்ரீதயாளனின் சிறப்புரையும்இடம்பெறும். முதுபெரும் புலவர் வை.க.சிற்றம்பலம் நூலை ஆக்கியுள்ளார். (க-152)

# 45ஆம் நாள் நினைவஞ்சலி



மண்ணில்
05
-
04
-
1992

விண்ணில்
23
-
05
-
2001

## செல்வி கந்தசாமி சிவரஞ்சினி

*கண்ணீரில் மூழ்கியதோ தளிர்மேனி?*
*அதற்குள் உந்தன்*
*அன்பை பறித்தது ஏன் இந்த விதி?*
*அழுது மழைக்*
*கண்ணீரில் மூழ்கினோம்; நம்*
*கவலை தீர்க்க இல்லை வழி!*

பிரிவால் துயருறும்:
தாய், தந்தை, சகோதரர்.

*காஞ்சிபுரம்,*
*மாதகல்.*
(89497)

# மரண அறிவித்தல்

## துரைச்சாமி சுப்பிரமணியம்

யாழ்.மருதடி வீதியைப் பிறப்பிடமாகவும் தற்போது கொழும்பில் வசித்து வந்தவருமாகிய துரைச்சாமி சுப்பிரமணியம் நேற்று (05-07-2001) வியாழக்கிழமை அதிகாலை கொழும்பில் காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற துரைச்சாமி மற்றும் திரேசம்மா ஆகியோரின் மூத்த மகனும், றெஜினாவின் அன்புக் கணவரும், நந்தகுமார் (பொறியியலாளர், கொழும்பு), சாந்தகுமார் (கிளிநொச்சி), முகுந்தகுமார், ஜானகி (கொழும்பு), சர்மிலா (கொழும்பு) ஆகியோரின் அன்புத் தந்தையும், கணேசன், ஜெகதீஸ்வரி (நேடியோஸ்பதி), பத்மாவதி, நீலாம்பிகை, புவனேஸ்வரி (கொழும்பு) ஆகியோரின் அன்புச் சகோதரரும் ஆவார்.

அன்னாரின் தகனக்கிரியைகள் நாளை (07-07-2001) சனிக்கிழமை கொழும்பில் நடைபெறும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவருக்கும் அறியத்தருகின்றேன்.

*26/1, சோமாவதி லேன்,*
*கிருலப்பனை,*
*கொழும்பு - 5*
T.P.01-815997, 077315737
(89791)

தகவல்:-
S.தவராசா
(மைத்துனன்)
*14, பலாலி றோட்,*
*யாழ்ப்பாணம்.*

## கோடிக்கணக்கில் பணத்தை வாரி இறைத்து

# நாடாளுமன்ற உறுப்பினர்களை விலைக்கு வாங்க பகீரத முயற்சி

கொழும்பு,ஜூலை6

அரசுக்கு எதிரான நம்பிக்கையில்லாப் பிரேரணை தொடர்பாக நாடாளுமன்ற உறுப்பினர்களை விலைக்கு வாங்கி தமது பக்கம் இழுக்கும் முயற்சிகளில் அரசும் எதிர்க்கட்சியும் ஈடுபட்டுள்ளதால் தற்போது நாடாளுமன்ற உறுப்பினர் ஒருவரின் விலை ஒரு கோடியில் இருந்து இரண்டரைக் கோடி வரை உயர்ந்துள்ளதாகக் கொழும்புச் சிங்கள வார இதழ் ஒன்று தெரிவித்துள்ளது.

நம்பிக்கையில்லாப் பிரேரணை தொடர்பான வாக்கெடுப்பில் வெல்வதற்காக அரசாங்கக் கட்சி நாடாளுமன்ற உறுப்பினர்களை ஐ.தே.கட்சியும் ஐ.தே.கட்சி நாடாளுமன்ற உறுப்பினர்களை அரசாங்கமும் விலைக்கு வாங்க முயற்சி எடுத்து வருவதால் நாடாளுமன்ற உறுப்பினர்களின் மதிப்புத் திடீரென உயர்ந்துள்ளது.

இது தொடர்பான பேரத்தின்போது பேச்சுக்கள் ஒரு கோடி ரூபாவில் ஆரம்பித்தது எனவும் ஆனால் தற்போது அது அதிகரித்து இரண்டரைக கோடிவரை உயர்ந்துள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

இவ்வாறான பேரத்தில் பணத்தைப் பெறத் தயாராயிருக்கும் நாடாளுமன்ற உறுப்பினர்கள் தாங்கள் வங்கிக்கடனைத் திருப்பிச் செலுத்த வேண்டியுள்ளதாலேயே அதிகரித்த தொகையைக் கோருவதாகவும் தெரிவித்துள்ளனர் என்றும் -

சிறுபான்மை இனத்தைச் சேர்ந்த நாடாளுமன்ற உறுப்பினர்கள் உட்பட நாடாளுமன்ற உறுப்பினர்களைத் தத்தமது அணிகளில் சேர்ப்பதற்கு ஐ.தே. கட்சியும் சிறிலங்கா சுதந்திரக் கட்சியும் எடுக்கும் முயற்சிகளுக்குத் தேவையான நிதியை வழங்க பிரபல வர்த்தகர்கள் முன்வந்துள்ளனர் எனவும் -

தெரிவிக்கப்படுகிறது.

ஐ.தே.கட்சி நாடாளுமன்ற உறுப்பினர்களை அரசின் பக்கம் இழுக்கும் முயற்சியில் அமைச்சர்களான மங்கள சமரவீர, எஸ்.பி.திசாநாயக்க, லக்ஷ்மன் கதிர்காமர், ஜீ.எல்.பீரிஸ், டி.எம். ஜயரத்ன ஆகியோர் ஈடுபட்டுள்ளனர் எனவும், அதேநேரம் அரச தரப்பு நாடாளுமன்ற உறுப்பினர்களை எதிர்க்கட்சி அணிக்கு இழுக்கும் முயற்சியில் ஐ.தே.கட்சி பிரதித் தலைவர் கரு ஜயசூரியா, மலிந்த மொறகொட, ராஜித சேனாரத்ன உட்படப் பலர் ஈடுபட்டுள்ளனர் எனவும் தெரிவிக்கப்படுகிறது.

வாக்கெடுப்பின்போது ஜே.வி.பியினரை நடுநிலைமை வகிக்குமாறு கோரும் முயற்சியில் பிரதமர் ரத்னசிறி விக்கிரமநாயக்க, அமைச்சர்களான ஜி.எல்.பீரிஸ் மற்றும் டி.எம்.ஜயரத்ன ஆகியோர் ஈடுபட்டுள்ளனர் எனவும் தெரிவிக்கப்படுகிறது.

இவ்வாறு அந்தப் பத்திரிகைச் செய்தியில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ஐ)

## அமலமரித் தியாகிகள் உலகத் தலைவர்

# குடாநாட்டுச் சேதங்களை நேரில் பார்வையிடுவார்

நடைபெற்று வரும் யுத்தத்தால் குடாநாட்டு மக்கள் படும் துயரங்களையும் அவர்களுக்கு ஏற்பட்டுள்ள இழப்புக்களையும் நேரில் பார்வையிடுவதற்காக அமலமரித் தியாகிகளின் உலகத் தலைவர் பேரருட் திரு. வில்ஹெய்ம் ஸ்ரெக்ளிங் இன்று குடாநாட்டுக்கு வருகிறார்.

ரோமாபுரியில் இருந்து கடந்த வாரம் கொழும்புக்கு வந்த இவர் மன்னார், வவுனியா மாவட்டங்களில் உள்ள அமலமரித் தியாகிகளின் இல்லங்களுக்கு விஜயம் செய்தார்.

இன்று குடாநாட்டுக்கு வரும் இவர் எதிர்வரும் 10ஆம் திகதி வரை யாழ்ப்பாணத்தில் தங்கியிருந்து குடாநாட்டு நிலைமைகளைக் கண்டறிவார்.

இலங்கைத் தமிழர்களின் பிரச்சினைகளையும் அதனால் அவர்கள் படும் துன்பங்களையும் நேரில் பார்க்க வேண்டும் என்ற ஆவலுடன் நீண்ட காலமாக இந்த விஜயத்துக்குத் திட்டமிட்டிருந்த போதிலும் தற்போதுதான் தமக்கு அந்தச் சந்தர்ப்பம் கிடைத்துள்ளதாக அவர் தெரிவித்தார்.

கொழும்புத்துறையில் உள்ள அமலமரித் தியாகிகளின் சபையின் புனித டிமசனற் குருமட கட்டடத் தொகுதியில் புதிதாக அமைக்கப்பட்டுள்ள ஒரு கட்டடத்தைத் தலைவர் எதிர்வரும் 8ஆம் திகதி காலை 9.30 மணிக்குத் திறந்து வைப்பார் என்று அமலமரித் தியாகிகள் சபையின் அருட்தந்தை ஒருவர் தெரிவித்தார்.(ஐ-6)


இவ்வார மலிவு விற்பனையில்...



ரூபா 250/-

SoftWare CD'S

உங்கள் தேவைகளுக்கு முந்துங்கள்

இச்சலுகை 09-07-2001 வரை மட்டுமே!

SRI MURUGAN COMPUTER SYSTEMS

(C/17317) 303, K.K.S. ROAD., JAFFNA.


## முரண்பாட்டு தீர்வு சம்பந்தமான கல்விக் கருத்தரங்கு

வலி.தெற்கு,ஜூலை6

'முரண்பாட்டுத் தீர்வு' சம்பந்தமான கல்விக் கருத்தரங்கு நாளை சனிக்கிழமை காலை 8.30 மணிக்கு மானிப்பாய் இந்துக் கல்லூரியில் நடைபெறவுள்ளது. 'வழிகாட்டலும் ஆலோசனை கூறலும்' என்ற விடயத்துக்குப் பொறுப்பான ஆசிரியர்கள் இக்கருத்தரங்குகளுக்குத் தவறாது சமுகமளிக்க வேண்டுமென உதவிக் கல்விப் பணிப்பாளர் திருமதி கோகிலா மகேந்திரன் கேட்டுள்ளார். (ஓ-152)

## திருவடிநிலைக்கு செல்லும் பாதையின் அவல நிலை

சுழிபுரம்,ஜூலை6


சுழிபுரம் மேற்கு ஐயனார் கோயிலடி வீதியால் சுழிபுரம் திருவடிநிலைக்குச் செல்லும் பாதை போக்குவரத்துச் செய்யமுடியாத நிலை ஏற்பட்டுள்ளது.

சுழிபுரம் மேற்கு ஐயனார் கோயிலடியில் இருந்து பொன்னாலை, சேந்தாங்குளம் வீதியைத் தொடுக்கும் இப்பாதை நீண்ட காலமாகச் செப்பனிடப்படவில்லை.

இதனால் வாகனங்கள் செல்ல முடியாமல் சிரமம் ஏற்படுகிறது. திருவடிநிலைக்கு பிரேதம் கொண்டு செல்பவர்கள் நடந்து செல்ல முடியாமல் கஷ்டமடைகின்றனர்.

இந்த வீதியைத் திருத்தம் செய்து உதவுமாறு வலி.மேற்கு பிரதேச சபைத் தலைவரிடம் பொதுமக்கள் புகார் செய்துள்ளனர். (க-28)

## நயினைத் தேர்க் காட்சிகள்



நயினாதீவு ஸ்ரீ நாகபூசணி அம்மன் கோயில் வருடாந்த மஹோற்சவத்தின் தேர்த்திருவிழா நேற்று முன்தினம் புதன்கிழமை மிகவும் பக்திபூர்வமாக நடைபெற்றது. குடாநாட்டின் பல பகுதிகளிலும் இருந்து திரண்டுசென்ற பக்தர் கூட்டம் ஆலயப் பகுதியில் நிரம்பி வழிந்தது.

ஆலய வீதியூடாகத் தேர்கள் ஆரோகணித்து வருகின்ற கண்கொள்ளாக் காட்சியைப் படங்களில் காணலாம். (ஐ)


## எமது இதயபூர்வமான நன்றிகள்

காரைநகர் ஸ்ரீ சிதம்பரேஸ்வரா சனசமூக நிலையத்திற்கு ஈழமக்கள் ஜனநாயகக் கட்சியினால் கதிரைகள், நூல்கள், பரிசுப்பொருள்கள் முதலியவற்றை வழங்கியமைக்காக



வடக்கின் அபிவிருத்தி, புனர்வாழ்வு, புனரமைப்பு மற்றும் வடக்கு - கிழக்கு தமிழ் விவகாரங்கள், இந்து கலாசார அமைச்சர்

மாண்புமிகு கௌரவ

**கே. என். டக்ளஸ் தேவானந்தா** அவர்களையும்

ஈழமக்கள் ஜனநாயகக் கட்சியின் தீவக அமைப்பாளரும் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினரும் ஊர்காவற்றுறைப் பிரதேச சபைத் தலைவருமான



**உயர்திரு. நடராசா மதனராசா**

அவர்களையும்

**தோழர் திரு. P. விசு**

(பொறுப்பாளர்,E.P.D.P. காரைநகர்)

அவர்களையும்

மனமாரப் பாராட்டி வாழ்த்துவதுடன் எமது இதயபூர்வமான நன்றிகளையும் தெரிவித்துக்கொள்கின்றோம்.

*சிவகாமி அம்மன் வீதி,*
*காரைநகர்.*
(89802)

ஸ்ரீ சிதம்பரேஸ்வரா
சனசமூக நிலையத்தினர்.

## நன்றி நவிலல்

04.07.2001 அன்று நடைபெற்ற எனது அன்புச் சகோதரி **சி.கனகசௌந்தரியின்** இறுதிக் கிரியையை ஒட்டி தொலைபேசி மூலம் அனுதாபங்களைத் தெரிவித்த ஜனாதிபதி மற்றும் நேரிலும், தொலைபேசி, தொலைநகல், மின்னஞ்சல் மூலமும் மலர்வளையங்கள் வைத்தும் தமது அனுதாபங்களைத் தெரிவித்து எமது துக்கத்தில் பங்குகொண்ட அமைச்சர், நாடாளுமன்ற உறுப்பினர்கள், மாநகர, பிரதேச சபைத் தலைவர்கள், உறுப்பினர்கள், அலுவலர்கள், ஈழமக்கள் ஜனநாயகக் கட்சி உறுப்பினர்கள், வடக்கு அபிவிருத்தி, புனர்வாழ்வு, புனரமைப்பு மற்றும் வடக்கு - கிழக்கு தமிழ் விவகாரங்கள் அமைச்சினதும் அமைச்சின் ஏனைய நிறுவனங்களினதும் அதிகாரிகள், ஊழியர்கள், அரசாங்க அதிபர், மேலதிக அரசாங்க அதிபர், திணைக்கள அதிகாரிகள் மற்றும் 51ஆவது படையணியின் தளபதி, யாழ்.பொலீஸ் அத்தியட்சகர், யாழ்.தலைமைக் காரியாலய பொலீஸ் அதிகாரி, உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவருக்கும் மற்றும் பாதுகாப்பு ஒழுங்குகளை மேற்கொண்டுதவிய பொலீஸ், இராணுவ உத்தியோகத்தர்களுக்கும் அந்தியகால சேவையினருக்கும் மற்றும் சகல வழிகளிலும் ஒத்துழைப்பும் உதவியும் வழங்கிய அனைவருக்கும் எமது குடும்பத்தின் சார்பில் எனது நன்றியறிதலைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

*கோயில் வீதி,*
*கொக்குவில் கிழக்கு,*
*கொக்குவில்.*
(89807)

சி.தவராசா
(சகோதரன்)
(நாடாளுமன்ற உறுப்பினர்)

## கண்ணீர் அஞ்சலி

யாழ்ப்பாண மாவட்டக் கூட்டுறவுச் சபையின்
மாவட்ட மகளிர் குழுத் தலைவியும்,
சபையின் பணிப்பாளருமாகிய
**திருமதி ரதிதேவி சோதிலிங்கம்** அவர்களின் கணவர்

**வயித்திலிங்கம் சோதிலிங்கம்**

அவர்களின் மரணச்செய்தி கேட்டுத் துயரடைகின்றோம். அவர்களுக்கு எமது கண்ணீர் அஞ்சலியை சமர்ப்பிப்பதோடு, அவரது பிரிவால் துயரடையும் மனைவி, பிள்ளைகளின் துயரில் நாமும் பங்குகொண்டு அன்னாரின் ஆத்ம சாந்திக்காகப் பிரார்த்திக்கின்றோம்.

ஓம் சாந்தி!

தலைவர், பணிப்பாளர்,
மாவட்ட மகளிர்குழு,
மாவட்டச் செயலாளர், பணியாளர்கள்,
(C/17315) யாழ்ப்பாண மாவட்டக் கூட்டுறவுச் சபை.

## கண்ணீர் அஞ்சலி

யாழ்.மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர்
**கௌரவ சின்னத்துரை தவராசா** அவர்களின்
அன்புச் சகோதரி

**சின்னத்துரை கனகசௌந்தரி**

அவர்களின் மறைவினால் மனங்கலங்கி நிற்கும் குடும்பத்தினருடன் எமது துயரையும் பகிர்ந்து கொள்வதுடன் ஆழ்ந்த அனுதாபங்களையும் தெரிவிக்கின்றோம். அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

(89803)

அதிபர், ஆசிரியர்கள், மாணவர்கள்,
பாடசாலை அபிவிருத்திச்சங்கமும்
பழைய மாணவர் சங்கமும்
யா/கொக்குவில் ஸ்ரீ இராமகிருஷ்ண வித்தியாசாலை.

## மரண அறிவித்தல்

திருக்குடும்ப சபையின் மேனிலை முதல்வர்

**அருட்செல்வி ஜோய் சிமித்**

திருக்குடும்ப சபையின் மேனிலை முதல்வர் (Superior General) அருட்செல்வி ஜோய் சிமித் நேற்று முன்தினம் (04-07-2001) புதன்கிழமை உரோமாபுரியில் காலமானார்.

இவரது நல்லடக்கம் இன்று (06-07-2001) வெள்ளிக்கிழமை உரோமாபுரியில் நடைபெறும். இவரது ஆன்ம சாந்திக்கான இரங்கற் திருப்பலி நாளை (07-07-2001) சனிக்கிழமை பி.ப. 4.00 மணிக்கு யாழ். திருக்குடும்ப கன்னியர்மடத்தில் நடைபெறும் என்பதை அறியத்தருகின்றோம்.

*திருக்குடும்ப மாகாண இல்லம்,*
*இல.121, பிரதான வீதி,*
*யாழ்ப்பாணம்.*
(89800)

தகவல்-
தி.கு.மாகாணத் தலைவி,
அருட்செல்வி அன்சில்லா யேம்ஸ்.

# நீர்கொழும்புச் சிறைக்கைதிகளை மகேஸ்வரன் பார்வையிட்டார்

கொழும்பு,ஜூலை6

நீர்கொழும்புச் சிறைச்சாலையில் தடுத்துவைக்கப்பட்டுள்ள 27 பெண்கள் உட்பட 323 தமிழ்க் கைதிகளையும் ஐ.தே.கட்சியின் யாழ்.மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் தி.மகேஸ்வரன் நேற்று அங்கு சென்று பார்வையிட்டார்.

அவர்களின் நிலைமைகளைக் கேட்டறிந்த மகேஸ்வரன், விரைவில் அவர்களை விடுதலை செய்வதற்கான முயற்சிகளை எடுப்பதாக உறுதி அளித்தார்.

இந்தக் கைதிகளின் நிலைமை தொடர்பாகக் கடந்த திங்கட்கிழமை நீதி அமைச்சர் பட்டி வீரக்கோனுடன் தாம் பேச்சு நடத்தியதாகவும் -

நீதிமன்றத்தில் இவ்விவகாரம் இருப்பதால் தன்னால் அவர்களை விடுதலை செய்ய முடியாது என்றும், நீதிமன்றத்தில் ஆஜர் செய்யப்படும்போது அவர்கள் குற்றத்தை ஒப்புக்கொண்டால் ஒத்திவைக்கப்பட்ட சிறைத்தண்டனையுடன் அவர்களை நீதிமன்றம் விடுவிப்பதற்கு அதிக சாத்தியங்கள் உள்ளன என்றும், நீதி அமைச்சர் தன்னிடம் கூறியதாகவும் -

இந்த விடயத்தை கைதிகளிடம் தாம் நேற்றுத் தெரிவித்ததாகவும்-

அவர்கள் இந்த ஆலோசனையைப் பரிசீலிப்பதாகவும் பதிலளித்தனர் என்றும் - மகேஸ்வரன் கூறினார். (உ-3

## சடலங்கள் ஒப்படைப்பு

வல்வெட்டித்துறை, நவாலி போன்ற இடங்களில் அண்மையில் இராணுவத்தினரின் சூட்டுக்கு இலக்காகி உயிரிழந்ததாகக் கூறப்படும் இரு இளைஞர்களின் சடலங்களும் நேற்று முன்தினம் பூநகரிக் கரையில் வைத்து செஞ்சிலுவைச் சர்வதேசக் குழுவினால் விடுதலைப் புலிகளிடம் ஒப்படைக்கப்பட்டன.

யாழ்.போதனா வைத்தியசாலையிலிருந்து சடலங்களைப் பொறுப்பேற்ற இராணுவத்தினர் குருநகர் இறங்குதுறையில் வைத்து செஞ்சிலுவைச் சர்வதேசக் குழு பிரதிநிதிகளிடம் அவற்றை ஒப்படைத்தனர்.

செஞ்சிலுவைக் குழு பிரதிநிதிகள குடாக்கடலேரி ஊடாகச் சடலங்களைப் படகுகளில் எடுத்துச் சென்று பூநகரிக் கரையில் வைத்து விடுதலைப் புலிகளிடம் ஒப்படைத்தனர்.(உ-5-6)

## யாழ்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

மதியம் 12 மணிவரை வளாகத்தில் கூடியிருந்து தமது எதிர்ப்பைத் தெரிவித்தனர்.

தமது சக மாணவன் திவ்வியனை விடுதலை செய்யும் வரை தமது பகிஷ்கரிப்புப் போராட்டம் தொடரும் என்றும் -

இன்றும் வளாகத்தின் அனைத்துச் செயற்பாடுகளும் ஸ்தம்பிக்கும் என்றும் -

மாணவர் ஒன்றியப் பிரதிநிதி ஒருவர் தெரிவித்தார். (உ-6)

## கட்சியிலிருந்து நீக்கம்

கொழும்பு,ஜூலை6

தேசிய ஐக்கிய முன்னணியின் தேசியப் பட்டியல் நாடாளுமன்ற உறுப்பினரான பஷீர் சேகு தாவூத்தை கட்சியில் இருந்து நீக்கியுள்ளார் அந்த முன்னணியின் தலைவரும் அமைச்சருமான பேரியல் அஷ்ரப்.

இது தொடர்பான கடிதத்தை பேரியல் அஷ்ரப் நேற்று முன்தினம் அவருக்கு அனுப்பியுள்ளார்.

இது விடயம் குறித்து நீதிமன்றத்தில் வழக்குத் தொடரப் போவதாக பஷீர் சேகு தாவூத் தெரிவித்துள்ளார்.

பஷீர் சேகு தாவூத்தைப் பதவி நீக்கியது சட்டவிரோதமானது என்று முஸ்லிம் காங்கிரஸ் தலைவர் ரவூப் ஹக்கீம் கூறியுள்ளார். (உ-3)

## தமிழ்க்.......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸின் மகளிர் அணியின் ஏற்பாட்டில் காலை 10 மணிக்கு லிப்டன் சதுக்கத்தில் ஆர்ப்பாட்டம் ஒன்று இடம்பெறவுள்ளது.

பதினொரு தமிழ்க் கட்சிகளின் கூட்டமைப்பின் ஏற்பாட்டில் பிற்பகல் 3.30 மணிக்கு கொழும்பு கோட்டை ரயில் நிலையத்துக்கு முன்பாக, ஆர்ப்பாட்டம் இடம்பெறும்.

புறக்கோட்டையில் உள்ள தமிழ் - முஸ்லிம் வர்த்தகர்கள் கடைகளைப் பூட்டி இந்தப் போராட்டத்தில் பங்குபற்றவிருக்கின்றனர்.

மலையகத்திலும் ஆர்ப்பாட்டப் பேரணிகள் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளன. (உ-3-5-6-10)


சனி ஆரம்பம்
(காலை 10 மணி)
வினாவிடை முறையில்
A/L 2002
LOGIC (பகுதிII)
(விஞ்ஞான முறை)
எஸ்.எஸ்.மனோகரன்
BEACON
யாழ்நகர் (வெலிங்டன் சந்தி)
(89799)

BEACON
வெலிங்டன் சந்தி
B.A.PART - I
நிதிக்கணக்கியலும் கிரயக்கணக்கியலும்
ஆரம்பம்:– 7–7–2001
சனி – 8.00 (பி.நே.) (89792)
S.D.J.சுதர்சன்


# 144 தமிழர்கள் நேற்றுக் கைது

கொழும்பு,ஜூலை6

நேற்று அதிகாலை கொழும்பு தெற்கு மற்றும் வடக்குப் பகுதிகளில் படையினரும் பொலீஸாரும் இணைந்து நடத்திய திடீர் சோதனை நடவடிக்கையின்போது 20 பெண்கள் உட்பட 144 தமிழர்கள் கைது செய்யப்பட்டனர்.

இவர்களில் 52 பேர் பம்பலப்பிட்டியிலும், எஞ்சியோர் மட்டக்குழி மற்றும் புறக்கோட்டைப் பகுதிகளிலும் கைது செய்யப்பட்டதாகத் தெரிவிக்கப்படுகிறது. (உ-10)

## பேரியல்.....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

னங்கள் சேதம் அடைந்தன.

பேரியல் அஷ்ரப்பின் பாதுகாப்புப் பிரிவினரின் வாகனம் ஒன்றும் தாக்குதலுக்கு இலக்கானது.

அதேவேளை -

சம்மாந்துறையில் உள்ள பேரியல் அஷ்ரப் அணியின் நாடாளுமன்ற உறுப்பினரான யு.எல்.எம். மொஹிதீனின் வீட்டுக்குள் புகுந்த சுமார் 200 முஸ்லிம் இளைஞர்கள் எம்.பியை அரசுத் தரப்பில் இருந்து வெளியேறுமாறு கோரி அங்கு ஆர்ப்பாட்டம் நடத்தினர்.

அங்குவந்த பொலீஸார் வானத்தை நோக்கித் துப்பாக்கிப் பிரயோகம் செய்து அவர்களைக் கலைத்தனர்.

கலைந்து சென்ற இளைஞர்கள் சம்மாந்துறையில் உள்ள பள்ளிவாசலுக்குள் ஓடினர்.

பொலீஸாரும் அதிரடிப்படையினரும் பள்ளிவாசலுக்குள் சப்பாத்துக் கால்களுடன் நுழைந்து கலாட்டா செய்தனர் என்றும் -

பொதுமக்கள் அவர்களை வெளியேறுமாறு கோஷம் எழுப்பினர் என்றும் - தெரிவிக்கப்பட்டது.

அதேவேளை -

ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் அரசியல் குழு, அரசியல் உயர்பீடம் ஆகியன நேற்றுக் கொழும்பில் கூடின.

தேசிய ஐக்கிய முன்னணி அம்பாறையில் நடத்திய மாநாடு கட்சியின் யாப்புக்கு முரணானது என்றும் -

அந்த மாநாடு சட்டரீதியானது அல்ல என்றும் -

அரசியல் உயர்பீடம் முடிவுசெய்துள்ளது. (உ-3-14)


புதிய வீடியோ CD
வெளியீடு
சரத்குமார் நடித்த
தோஸ்த்
(திரையரங்கிற்கு முன்னுரிமை)
விஷ்ணு வீடியோ
K.K.S. வீதி கோண்டாவில்
(89806)


# பிரதமர் பதவியை ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

சிறிய கட்சிகளுக்கும் வழங்கிவிட்டு பத்து அமைச்சுக்களை பொதுமக்கள் ஐக்கிய முன்னணி தக்க வைக்கும் விதத்தில் தேசிய அரசு ஒன்று அமைக்கப்படுவது குறித்து அரசுத்தரப்பினால் பேச்சுக்கள் முன்னெடுக்கப்பட்டுவருகின்றன.

பிரதமர் ரத்னசிறி விக்கிரமநாயக்க, அமைச்சர் ஜீ.எல்.பீரிஸ் ஆகியோர் இது குறித்து ரணிலுடன் பேசிவருகின்றனர்.

உத்தேசத் திட்டத்தின்படி -

பிரதமர் பதவி ரணிலுக்கும், நிதி அமைச்சர் பதவி பொதுமக்கள் ஐக்கிய முன்னணித் தலைவர் ஒருவருக்கும் வழங்கப்படும்.

அரசுத் தரப்பில் முன்வைக்கப்படும் தேசிய அரசு அமைக்கப்படும் முயற்சிக்கு ஆக்கபூர்வமான பதில் எதையும் ஐ.தே.கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்க இதுவரை வழங்கவில்லை என்றும் கூறப்படுகின்றது.

ஆனால் -

தேசிய அரசு அமைக்கும் முயற்சி ஏதும் எடுக்கப்படவேயில்லை என்று ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவும் -

தேசிய அரசு அமைக்கும் முயற்சிக்கு இணங்க மாட்டோம்; மூழ்கும் கப்பலில் ஏறமாட்டோம் என்று சாரப்பட ரணில் விக்கிரமசிங்கவும் -

அண்மையில் பகிரங்கமாக அறிவித்திருந்தது குறிப்பிடத்தக்கது.

என்றாலும் தேசிய அரசு ஒன்றை அமைக்கும் முயற்சியில் பிரதமரும் முக்கிய அமைச்சர்களும் மும்முரமாக - விடாப்பிடியாக - இருப்பதாகக் கொழும்புச் செய்திகள் கூறுகின்றன.

அவசரகாலச் சட்ட நீடிப்புப் பிரேரணையை நாடாளுமன்றத்தில் நிறைவேற்றுவதற்குத் தேவையான பெரும்பான்மையை ஆளும்தரப்பு இழந்துவிட்டதால் அந்தச்சட்டத்தை காலவதியாக விட்டு, பிரேரணையை நாடாளுமன்றத்தில் விவாதத்துக்கு எடுக்காமல் செய்து, உடனடி இக்கட்டைத் தள்ளிப்போட்டுள்ளது பொதுமக்கள் ஐக்கிய முன்னணி அரசு.

இன்று நாடாளுமன்றத்துக்கு வரவிருந்த அவசரகாலச் சட்டத்தை நீடிப்பதற்கான பிரேரணை கைவிடப்பட்டு விட்டதால், அது தொடர்பான நேரத்தை முக்கிய அரசியல் விடயம் குறித்து அரசு - எதிர்க் கட்சிகளின் உறுப்பினர்கள் நாடாளுமன்றத்தில் கூடி ஆராய்வார்கள் என எதிர்பார்க்கப்படுகின்றது.

தேசிய அரசு அமைக்கும் ஆவல் கொண்டுள்ள பிரதமர் ரத்னசிறி விக்கிரமநாயக்க நேற்றுத் தொலைக் காட்சிக்கு அளித்த பேட்டியில் தெரிவித்துள்ளதாவது:-

நாட்டின் நலன் கருதிய பொதுவான வழிமுறை ஒன்றுக்கு, சகல அரசியல் கட்சிகளையும் கொண்டு வருவதற்காகத் தற்போது கலந்துரையாடல்கள் நடந்து வருகின்றன.

ஐதேக. உட்பட எதிர்க்கட்சிகளுடன் பேச்சுகள் ஏற்கனவே நடத்தப்பட்டன.

எதிர்காலத்தில் மேலும் கலந்துரையாடல்கள் இடம்பெறும்.

நாடாளுமன்றத்துக்கு உள்ளேயும் வெளியேயும் தேவையற்ற பிணக்குகள் தோன்றுவதற்கு இடமளிக்காது, நாட்டின் நிர்வாகத்துக்கென பொதுவான செயற்றிட்டம் குறித்து கருத்தொற்றுமையை உருவாக்கும் நோக்கில் கலந்துரையாடல்கள் நடத்தப்படுகின்றன.

இந்த விடயத்தில் அரசியல் கட்சிகள் சில தியாகங்களை மேற்கொள்ளவேண்டியிருக்கும். இதனால் நாட்டில் புதிய அரசியல் கலாசாரம் உருவாக்கப்படும்.

அரசின் மீது நம்பிக்கையில்லாப் பிரேரணை கொண்டுவரப்படுவதற்கு முன்பாக இந்த முயற்சிகள் தொடங்கப்பட்டதாகவும் பிரதமர் கூறினார்.

இந்த விடயம் தொடர்பாக இன்று நாடாளுமன்றத்தில் ஓர் அறிவித்தலை விடுக்கப் போவதாக நேற்றைய பேட்டியில் குறிப்பிட்ட பிரதமர், அரசியல் கட்சிகளுடனான பேச்சுகள் சுமுகமாக நடைபெற வழிசெய்யும் விதத்தில் அவசரகால நிலைமையை நீடிக்கும் பிரேரணை நாடாளுமன்றத்தில் நேற்றுச் சமர்ப்பிக்கப்படவில்லை - என்று கூறினார்.

நம்பிக்கையில்லாப் பிரேரணை மீதான விவாதமும் இதே நோக்கத்துடன்தான் ஒத்திவைக்கப்பட்டதாக பிரதமர் மேலும் தெரிவித்தார்.(உ-ஒ-3)

## அவசரகாலச்.....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பொருள்களை எடுத்துச் செல்வதற்கு விதிக்கப்படும் தடை, வதிவிட 'பாஸ்' எடுக்கக் கட்டாயப்படுத்தும் விதிமுறை, நலன்புரி நிலையங்களை விட்டு அனுமதி இன்றி வெளியேறுவதற்குத் தடைவிதிக்கும் கட்டுப்பாடுகள் போன்றவை இதுவரை அவசரகாலச் சட்டத்தின் கீழ் செய்யப்பட்டன. இனி இவற்றை வெறும் ஜனாதிபதியின் கட்டளையின் கீழ் நடைமுறைப்படுத்துவதற்கு சட்ட வலு கிடைப்பது சந்தேகமே எனச் சுட்டிக்காட்டப்படுகின்றது.

இன்று நாடாளுமன்றம் கூடும் போது இவ்விடயங்கள் குறித்து பலத்த வாதப் பிரதிவாதங்கள் எழும் என எதிர்பார்க்கப்படுகின்றது.(உ-ஒ-10)

## அசம்பாவிதங்கள்.....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

விடுதலைப் புலிகளின் அறிக்கை ஒன்றில் தெரிவிக்கப்பட்டது.

1987 ஆம் ஆண்டு ஜூலை 5 ஆம் திகதி நெல்லியடி மத்திய மகா வித்தியாலயத்தில் முகாமிட்டிருந்த படையினர் மீது கப்டன் மில்லர் நடத்திய முதலாவது கரும்புலித் தாக்குதலையொட்டி கரும்புலிகள் தினம் அனுஷ்டிக்கப்படுகிறது. (உ-ஒ-10)


சேவைநலன் பாராட்டி வாழ்த்துகின்றோம்

எமது காரைநகர் பிரதேசத்தின் கடற்றொழில் வளங்களினை நன்கு அறிந்துள்ளவரும் 1990 ஆம் ஆண்டு முதல் எமது கடற்றொழிலாளர் கூட்டுறவுச் சங்கத்தின் செயற்பாடுகளுக்காகத் தன்னாலான உதவிகளை வழங்கி வருபவரும் சங்கத்தின் வளர்ச்சிக்காக அரச, அரச சார்பற்ற நிறுவனங்களின் தொடர்பினை ஏற்படுத்தி சங்கத்தைத் தளராது வளர்த்து வைத்துள்ளவரும் எமது சங்கத்தின் தரத்தினை யாழ்.மாவட்ட கடற்றொழிலாளர் கூட்டுறவுச்சங்கங்களுடன் தகுதிகாண் உயர்வுநிலைக்கு ஏற்படுத்திய பெருமைக்குரியவருமாகத் திகழும்



லயன்
சோமசுந்தரம் விக்னேஸ்வரன்
(பிராந்திய கடற்றொழில் பரிசோதகர்)

அவர்கள் எமது பகுதியில்இருந்து மற்றைய இடமான தீவகப் பகுதிக்கு இடமாற்றம் பெற்றுச் சென்றாலும்அவரின் சேவைகளை நாம் நன்றியுடன் பாராட்டி வாழ்த்துவதோடு அவரின் சேவைகள் மென்மேலும் தொடர்வதற்கு காரைநகர் ஈழத்துச் சிதம்பரப் பெருமானைப் பிரார்த்திக்கின்றோம்.

அம்பாள் கடற்றொழிலாளர்
கூட்டுறவுச் சங்கம்,
வெடியரசன் வீதி, காரைநகர்
(89801)



intel நிறுவனத்தின்
அங்கீகாரம் பெற்று தரப்படுத்தப்பட்ட
எமது நிறுவனம் பெருமையுடன் வழங்கும்
intel நிறுவனத்தின்
அதி நவீன வெளியீடு
Pentium 4 - 1.4 GHz (1433 MHz)
intel Pentium 4



. Intel Pentium 4 - 1.4 GHz Processor (1433MHz)
• Intel Net burst Micro-Architecture
. Intel Desktop board D850GB
• 400 Mhz System data bus
. 128 MB PC 800 RDRAM
. 40 GB Hard disk
. 8 MB AGP VGA Card
. 1.44 FDS
. 14" Color Monitor
. ATX Tower
. PS/2 Key Board & Mouse with Pad
Multimedia
. 52X CD-ROM
. 32BIT PCI SOUND CARD
. Speakers
. 56.6 Kbps Internal Fax Moderm
FREE
Internet Connection
One Year
Labour Warranty
intel நிறுவனத்தின்
Pentium III 1000 MHz
Pentium III 933 MHz
Pentium III 866 MHz
Pentium III 733 MHz
Computers
பெற்றுக் கொள்ளலாம்.
கொழும்பில் இருந்து எமது சிறப்புத்தேர்ச்சி பெற்ற Technician யாழ் நகரில் உள்ள எமது கிளைக்கு வருகை தந்திருப்பதால் எமது வாடிக்கையாளர்கள் தமது Computerல் ஏதும் பிழைகள் இருப்பின் இலவச சேவையை பெற்றுக்கொள்ள உடன் நாடுங்கள்.
Price Rs.110,000
MICRO PC SYSTEMS
No.15, 36th Lane, Wellawatte,
Colombo - 06.
Branches:-
Telephone :-
074 - 513235, 074 - 516764
No.82, New Chetty Street, Kotahena, Colombo-13.
Telphone:074 - 619673, Web : www.mipaq.com
No. 9, Modern Market, Hospital Road, Jaffna. Telphone : 021-2067


இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேட்) நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதி, 361ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 06.07.2001இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.